



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:254 | 30-03-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி





## இன்றைய பஞ்சாங்கம்

30.03.2026 பங்குனி 16
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.14

**திதி:**
இன்று காலை 8.26 வரை துவாதசி பின்பு திரயோதசி.

**நட்சத்திரம்:**
இன்று மாலை 3.47 வரை மகம் பின்பு பூரம்.

**யோகம் :**
இன்று மாலை 5.32 வரை சூலம் பின்பு கண்டம்.

**கரணம்**
இன்று காலை 8.26 வரை பாலவம் பின்பு இரவு 8.02 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று மாலை 3.47 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்

**சந்திராஷ்டமம் :**
இன்று மாலை 3.47 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00.

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று பிரதோஷம் நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

**ரத்த சர்க்கரை அளவு உயர காரணம் என்ன?**
(செய்தி 15–ம் பக்கம் )

# இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன்

## திமுக தேர்தல் அறிக்கையின் 51 முக்கிய அம்சங்கள்!



**சென்னை, மார்ச் 30:**
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக தேர்தல் அறிக்கையை மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். வருமான வரி செலுத்தாத குடும்பத்தை சேர்ந்த இல்லத்தரசிகளுக்கு வாஷிங் மெஷின், டிவி, பிரிட்ஜ், மிக்சி, மைக்ரோவேவ் அவன், மின் அடுப்புகள் போன்ற வீட்டு உபயோக பொருட்கள் வாங்க ரூ.8 ஆயிரம் மதிப்பில் கூப்பன் வழங்கும் 'இல்லத்தரசி' திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, திமுக தேர்தல் அறிக்கையை கட்சித் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று வெளியிட்டார். அவர் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகால 'திராவிட மாடல்' ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி தமிழகத்தை அனைத்து துறையிலும் வளர்த்தோம்.

தொலைநோக்குத் திட்டங்கள் மூலமாக தமிழகம் முழுமையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் கல்வியை, கட்டமைப்பை, சமூகநீதியை, இதுவரை நாம் அடைந்த முன்னேற்றத்தை பாதுகாக்க வேண்டுமானால் திமுக ஆட்சி தொடர வேண்டும். திராவிட மாடல் 2.0 அமைய வேண்டும்.

அதற்கு அடித்தளமாக, உங்களின் கனவுகளை நிறைவேற்ற 'ஸ்டாலின்ஸ்டேட்மென்ட்டை (Stalin Statement)' வழங்கியிருக்கிறேன். அதன் விரிவாக்கம் தான் திமுகவின் தேர்தல் அறிக்கை. வருமான வரி செலுத்தாத குடும்பங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள், ரூ.8 ஆயிரம் மதிப்பிலான கூப்பனை பயன்படுத்தி வாஷிங் மெஷின், டிவி. பிரிட்ஜ், மிக்சி, மைக்ரோவேவ் அவன், மின் அடுப்புகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை புதிதாக வாங்கிக்கொள்ள அல்லது ஏற்கெனவே பயன்படுத்தி வரும் பழைய பொருட்களுக்கு மாற்றாக பெற்றுக்கொள்ள 'இல்லத்தரசி' திட்டம் செயல்படுத்தப்படும்.

முதல்வரின் காலை உணவு திட்டம் 8-ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். 1.31 கோடி சகோதரிகள் பெற்று வரும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000-ல் இருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இலவச மின்சாரம் பெறும் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நவீன மின் பம்ப்செட் வழங்கப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் 10 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும். முதல்வரின் மருத்துவக் காப்பீடு திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கான வருமான வரம்பு ரூ.5 லட்சமாகவும், காப்பீட்டுத்தொகை ரூ.10 லட்சமாகவும் உயர்த்தப்படும். நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.3500, கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.5 உயர்த்தி வழங்கப்படும். முதியோர் உதவித் தொகை ரூ.1,200-ல் இருந்து ரூ.2 ஆயிரமாகவும், மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை ரூ.1,500-ல் இருந்து ரூ.2,500 ஆகவும் உயர்த்தப்படும்.

மீன்பிடி தடைக்கால சிறப்பு நிவாரணத் தொகை ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.12 ஆயிரமாகவும், மீன்பிடி குறைவு கால சிறப்பு நிவாரணத்தொகை ரூ.6 ஆயிரத்தில் இருந்து ரூ.9 ஆயிரமாகவும் உயர்த்தப்படும். சுயஉதவிக் குழு உறுப்பினராக இருக்கும் பெண்களை, தொழில் முனைவோராக முன்னேற்ற பிணையின்றி ரூ.5 லட்சம் வரை மானியத்துடன் கடன் வழங்கப்படும்.

பேரிடர் கால இழப்பீடுகள் ஹெக்டேர் ஒன்றுக்கு, இறவைப் பாசன பயிர்கள் மற்றும் நெற்பயிர்களுக்கு ரூ.25 ஆயிரம், நீண்டகால பயிர்களுக்கு ரூ.27 ஆயிரம், மானாவரி பயிருக்கு ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படும். 8-வது ஊதியக்குழு அறிக்கையை மத்திய அரசு செயல்படுத்தியதும், மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கும் செயல்படுத்தப்படும். 1.50 லட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படும்.

உயர்கல்வி பயிலும் 35 லட்சம் மாணவர்களுக்கு 5 ஆண்டுகளில் மடிக்கணினி வழங்கப்படும். தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி ரூ.2.50 லட்சம் கோடியில்இருந்து ரூ.5 லட்சம் கோடியாக உயர்த்தப்படும். ஆயிரம் கிராம தெய்வ கோயில்கள் மறுசீரமைக்கப்படும். 5 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்.

சிறுபான்மையினர் தொழில் தொடங்க டாம்கோ (TAMCO) மூலம் கடன் பெறும் உச்சவரம்பு ரூ.30 லட்சமாக உயர்த்தப்படும். முதல்வரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் கி.மீ. நீள சாலைகள் ரூ.10 ஆயிரம் கோடியில் சீரமைக்கப்படும். அனைத்து மாநகராட்சிகள், முக்கிய நகராட்சிகளில் 50 புதிய செம்மொழி பூங்காக்கள் அமைக்கப்படும். திருச்சி, மதுரை, கோவை, சேலம் மாநகராட்சிகளின் அருகில் நவீன உலகத்தர வசதிகளுடன் புதிய நகரங்கள் அமைக்கப்படும். தமிழகத்தில் 10 கைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும்.

தமிழகத்தில் திமுக தேர்தல் அறிக்கைதான் ஹீரோ. இப்போது இது சூப்பர் ஸ்டாராக களமிறங்கியுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்குறுதிகளும் சட்டங்கள், மாபெரும் திட்டங்களாகவும் மாறும். இவ்வாறு அவர் பேசினார்.

தேர்தல் அறிக்கையில் 50 தலைப்புகளில் 525 வாக்குறுதிகளை ஸ்டாலின் அளித்துள்ளார்.தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தலைவர் கனிமொழி, உறுப்பினர்கள் டிகேஎஸ். இளங்கோவன், கோவி.செழியன், பிடிஆர்.பழனிவேல் தியாகராஜன்,டிஆர்பி. ராஜா உள்ளிட்டோரை முதல்வர் கவுரவித்தார். கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் பங்கேற்றனர். கனிமொழி எம்.பி. கூறும்போது, "திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகளும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இதில் உண்மையை பேசக்கூடியதேர்தல் அறிக்கை எதுவோ,யாருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொண்டு இருக்கிறார்களோ, அந்த தேர்தல் அறிக்கைக்குதான் மரியாதையும் செல்வாக்கும் இருக்கும்" என்று தெரிவித்தார்.

# இன்று தொடங்குகிறது வேட்புமனுதாக்கல்

**சென்னை, மார்ச் 30:**
தமிழக சட்டசபை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நாளை (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு தொடங்கி வருகிற 6-ந்தேதி (திங்கட்கிழமை) வரை நடக்கிறது. 8 நாட்கள் அறிவிக்கப்பட்டாலும், 4 நாட்கள் மட்டுமே வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும். குறிப்பாக, வருகிற 31-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) மகாவீர் ஜெயந்தி, ஏப்ரல் 1-ந்தேதி வங்கி முழு வருட கணக்கு முடிவு, 3-ந்தேதி புனித வெள்ளி, 5-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய 4 நாட்கள் விடுமுறை நாட்களாக அமைந்துள்ளது. எனவே அன்றைய நாட்களில் வேட்பு மனு தாக்கல் செய்ய இயலாது.

இன்று 30-ந்தேதி (திங்கட்கிழமை), 2-ந்தேதி, 4-ந்தேதி மற்றும் 6-ந்தேதி ஆகிய 4 நாட்களில் மட்டுமே குறிப்பிட்ட நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும். வேட்பாளர்கள் https://suvidha.cci.gov.in என்ற இணையதளம் மூலமாக வேட்புமனு தாக்கல் செய்ய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

மனு தாக்கலுக்கு கடைசி நாளான 6-ந்தேதி சுபமூகூர்த்த தினம் என்பதால், அன்றைய தினம் அதிக அளவில் வேட்புமனுக்கள் பெற வாய்ப்பு உள்ளது. கால அவகாசம் குறைவாக உள்ளதால், வேட்பாளர்கள் ஆவணங்களை முன்கூட்டியே தயார் செய்து நெரிசலை தவிர்க்க வேண்டும். வேட்பு மனுக்கள் பரிசீலனை வருகிற 7-ந்தேதி நடக்கிறது. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற வருகிற 9-ந்தேதி கடைசி நாள் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 234 தொகுதிகளுக்கும் த.வெ.க. வேட்பாளர்களை அறிவித்தார்



**சென்னை, மார்ச் 30:**
234 தொகுதிகளுக்கும் இன்று வேட்பாளர் பட்டியலை விஜய் வெளியிட்டார்.

அனைத்து வேட்பாளர்களும் கழுத்தில் கட்சி துண்டுகளை அணிந்திருந்தனர். ஒவ்வொரு வேட்பாளரையும் விஜய் அறிவித்ததும், அவர்கள் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தனர்.

தமிழக சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23- ஆம் தேதி நடைபெற உள்ளது. திமுக, அதிமுக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்த நிலையில், முதல் முறையாக சட்டமன்ற தேர்தல் களம் காணும் விஜய் தவெக வேட்பாளர்களை இன்று அறிவித்தார். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் வேட்பாளர்களை விஜய் அறிமுகம் செய்து வைத்தார்.

அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுகிறார். தியாகராய நகரில் புஸ்சி ஆனந்த், கோபி செட்டிப்பாளையத்தில் கே.ஏ. செங்கோட்டையன், வில்லிவாக்கத்தில் ஆதவ் அர்ஜுனா, ஆயிரம் விளக்கில் ஜே.சி.டி.பிரபாகர், மயிலாப்பூரில் வெங்கட்ராமன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தூத்துக்குடி தொகுதியில் தவெக தலைவர் விஜயின் நண்பர் நடிகர் ஸ்ரீநாத் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். வேட்பாளர்களை அறிவிக்கும் நிகழ்வில் ஸ்ரீநாத்தை நண்பர் என்று அன்போடு அழைத்து விஜய் அறிமுகம் செய்தார். வேட்டைக்காரன் படத்தில் விஜயுடன் இணைந்து ஸ்ரீநாத் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக வேட்பாளர்கள் அறிமுக கூட்ட மேடையில் த.வெ.க. கொள்கைத் தலைவர்களின் புகைப்படங்களுக்கு விஜய் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

விஜய் அறிவித்த வேட்பாளர்கள் பட்டியல் விவரம் வருமாறு:

1. பெரம்பூர் விஜய்
2. திருச்சி கிழக்கு விஜய்
3. தி.நகர் புஸ்ஸி ஆனந்த்
4. வில்லிவாக்கம் ஆதவ் அர்ஜுனா
5. கொளத்தூர் வி.எஸ்.பாபு
6. ராயபுரம் தாமு
7. சோழிங்கநல்லூர் ஈ.சி.ஆர் சரவணன்
8. ஆர்.கே.நகர் மரியவில்சன்
9. எழும்பூர் (தனி) ராஜ்மோகன்
10. திரு.வி.க.நகர் (தனி) பல்லவி
11. மயிலாப்பூர் வெங்கட்ரமணன்
12. கோபி செங்கோட்டையன்
13. திருச்செங்கோடு அருண்ராஜ்
14. திருப்பரங்குன்றம் சி.டி.ஆர் நிர்மல்குமார்
15. குமாரப்பாளையம் விஜயலெட்சுமி
16. திட்டகுடி ராஜசேகர்
17. சைதாப்பேட்டை அருள் பிரகாசம்
18. வால்பாறை ஸ்ரீதரன்
19. லால்குடி கு.ப.கிருஷ்ணன்
20. திருப்பூர் வடக்கு சத்யபாமா
21. ஆயிரம் விளக்கு ஜே.சி.டி பிரபாகர்
22. கும்மிடிப்பூண்டி விஜயகுமார்
23. பொன்னேரி (தனி) ரவி
24. திருத்தணி சத்யகுமார்
25. திருவள்ளூர் அருண்குமார்
26. பூந்தமல்லி (தனி) பிரகாசம்
27. ஆவடி ரமேஷ்
28. மதுரவாயில் ரேவந்த்
29. அம்பத்தூர் பாலமுருகன்
30. மாதவரம் பிரபு
31. திருவொற்றியூர் செந்தில் குமார்
32. துறைமுகம் சினோரா அசோக்
33. சேப்பாக்கம் டி.செல்வம்
34. அண்ணாநகர் வி.கே.ராம்குமார்
35. விருகம்பாக்கம் சபரி
36. வேளச்சேரி ஆர்.குமார்
37. ஆலந்தூர் ஹரீஷ் 38. திருப்பெரும்புதூர் (தனி) தென்னரசு
39. பல்லாவரம் காமாட்சி
40. தாம்பரம் சரத் குமார்
41. செங்கல்பட்டு தியாகராஜன்
42. திருப்போரூர் விஜயராஜ்
43. செய்யூர் (தனி) மோகன் ராஜ்
44. மதுராந்தகம் (தனி) எழில் கேத்தரின்
45. உத்திரமேரூர் முனி ரத்தினம்
46. காஞ்சிபுரம் ஆர்.வி.ரஞ்சித் குமார்
47. அரக்கோணம் (தனி) காந்திராஜ்
48. சோளிங்கர் கபில்
49. காட்பாடி சுதாகர்
50. ராணிப்பேட்டை தாஹிரா
51. ஆற்காடு விஜய் மோகன்
52. வேலூர் வினோத் கண்ணன்
53. அணைக்கட்டு வேல்முருகன்
54. கே.வி.குப்பம் (தனி) தென்றல் குமார்
55. குடியாத்தம் (தனி) சிந்துபாலக்கோடு
56. வாணியம்பாடி சையத் புர்ஹாதின்
57. ஆம்பூர் இம்தியாஸ்
58. ஜோலார்பேட்டை முனிசாமி
59. திருப்பத்தூர் திருப்பதி
60. ஊத்தங்கரை (தனி) குமரவேல்
61. பர்கூர் முரளிதரன்
62. கிருஷ்ணகிரி முகுந்த் ஆர். பாண்டியன்
63. வேப்பனஹள்ளி சம்பங்கி
64. ஓசூர் அம்ப்ரிஷ்
65. தளி சுரேஷ்
66. பாலக்கோடு கோபி
67. பென்னாகரம் கஜேந்திரன்
68. தர்மபுரி சிவன்
69. பாப்பிரெட்டிப்பட்டி திலகவதி
70. அரூர் (தனி) ராகேஷ்
71. செங்கம் (தனி) பாரதிதாசன்
72. விக்கிரவாண்டி விஜய் வடிவேல்
73. திருக்கோவிலூர் பரணி பாலாஜி
74. உளுந்தூர்பேட்டை சுதாகர்
75. ரிஷிவந்தியம் அசோக்
76. சங்கராபுரம் ஜெகதீசன்
77. கள்ளக்குறிச்சி (தனி) அருள் விக்னேஷ்

(தொடர்ச்சி 6–ம் பக்கம் )






# திருக்குறள் குறள்-574

**உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினாற்
கண்ணோட்டம் இல்லாத கண்**



தக்க அளவிற்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தில் உள்ளவை போல் தோன்றுதல் அல்லாமல் வேறு என்ன பயன் செய்யும்.

## சிந்திக்க ஒரு நொடி



ஞானத்திற்கும்
ஆணவத்திற்கும் ஒரு நூல்
இழை தான்
வித்தியாசம் நம்மிடம்
ஏதும் இல்லை என்பது
ஞானம் நம்மை தவிர
ஏதும் இல்லை என்பது
ஆணவம்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## எடப்பாடியார் சந்தித்து வாழ்த்து பெற்றார்



**கடலூர், மார்ச்30:**

அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டக்குடி தொகுதி வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து கழக அமைப்பு செயலாளர் N. முருகுமாறன் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் புவனகிரி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ஆ.அருண்மொழிதேவன் ஆலோசனை படி கழக பொதுச் செயலாளர் வருங்கால தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார். தொடர்ந்து தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவதற்கான A மற்றும் B படிவம் பெற்றார். அவருக்கு அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## அஜீபுரா மசூதியில் தொழுகை நடத்திய அணைக்கட்டு தொகுதி திமுக வேட்பாளர் நந்தகுமார்!



**வேலூர், மார்ச் 30:**

அணைக்கட்டு தொகுதி திமுக வேட்பாளர், வேலூர் மாவட்ட திமுக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் ஒன்றியம் அஜீபுரா பகுதியில் உள்ள மசூதியில் தொழுகை செய்தார். அவருடன் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## காட்பாடி சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளர் ராமு ஆட்டிறைச்சி கடையில் நூதன முறையில் பிரச்சாரம்!



**வேலூர், மார்ச் 30:**

காட்பாடி சட்டமன்ற தொகுதியின் அதிமுக வேட்பாளர் பொறியாளர் வி. ராமு காட்பாடி செங்குட்டை பகுதியில் தேர்தல் பிரச்சார பரப்புரை மேற்கொண்டார். அப்போது ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் அங்காடியில் ஆட்டிறைச்சியை தனது கரங்களால் வெட்டி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து பிரச்சாரத்தை நூதன முறையில் மேற்கொண்டார். அதிமுக வேட்பாளர் ராமுவுடன் அதிமுக முன்னாள் கவுன்சிலர் குமார் தலைமையில், செங்குட்டை பகுதி அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள திரண்டு வந்து அவருக்கு தங்களது ஆதரவினை தெரிவித்தனர்.

# மெட்டாலா இலொயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரி 11-வது ஆண்டுவிழா




**இராசிபுரம், மார்ச் 30:**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே உள்ள மெட்டாலா இலெயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 11-வது ஆண்டுவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரியின் துணை முதல்வர் அருட்தந்தை பொன்ரூபன் சே.ச., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

அதிபர் அருட்தந்தை முனைவர் தோமினிக் ஜெயக்குமார் சே.ச., அவர்கள் சிறப்பு விருந்தினருக்குப் பொன்னாடை அணிவித்தார். தன்னம்பிக்கை, திறன் வளர்ப்பு, மற்றும் சமூக மாற்றத்திற்கான களமாக இலொயோலா கல்லூரி குன்றின் மேலிட்ட தீபமாக ஒளிருகிறது என்பதை எடுத்துரைத்து ஆசியுரை வழங்கினார்.

செயலர் அருட்தந்தை முனைவர் டேனிஸ் பொன்னையா சே,ச., அவர்கள் சிறப்பு விருந்தினருக்கு நினைவுப்பரிசு வழங்கி, கல்லூரியின் முன்னேற்றப் பயணத்தைசுட்டிக்காட்டினார். இந்த வளர்ச்சிப பயணத்தில் அனைவரும் அர்ப்பணிப்போடு ஈடுபட அறைகூவல் விடுத்தா்ர். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜா. ஜோஸ்ப்பின் டெய்சி அவர்கள் காணொலிக் காட்சி வடிவ கல்லூரியின் ஆண்டறிக்கையைத் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக திரு. சிவானந்தம், தலைவர், ஸ்ரீ நரசுஸ் காபி நிறுவனம் மற்றும் வைசியா கல்லூரி, சேலம் அவர்கள் கலந்து கொண்டு, இவ்விழாவிற்கு மா மகுடம் சூட்டினார்.

மேலும் அவர், கல்லூரி ஆண்டு மலரை வெளியிட்டும், பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி அளப்பரிய கருத்துக்களை எடுத்துரைத்தார். தாய் தந்தையை விட சிறந்த அனுபவசாலிகள் யாரும் இல்லை. ஆசிரியர்களும் இல்லை. இந்த வாழ்வு உங்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளைத் தருகிறது. கதவுகளை திறந்து விடுகிறது.

அனுபவங்களிருந்தும், அடுத்தவரிடமிருந்தும், உங்கள் தவறுகளிகளிலிருந்தும் வாழ்க்கைப் பாடங்களை கற்றுக்கொள்ளுங்கள். கடைசி வரை கற்றுக்கொள்ளும் மாணவராக இருங்கள். உங்களையும், தெய்வத்தையும் நம்புங்கள். அறநெறியோடும், தன்னம்பிகையோடு வெற்றி பயணத்தைத் தொடருங்கள் என்று தன் வாழ்க்கை அனுபவத்தை மாணவர்களோடு பகிர்ந்து கொண்டார்.

அதைத் தொடாந்து மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இனிதே நிறைவுற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் நிர்வாகத் துணை முதல்வர் பேராசிரியர் அமுதன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள் லியோ தாகூர் சே.ச., முனைவர் ஆண்டனி மார்கஸ் சே,ச., பெனட்டிக் சந்தோ~; சே.ச., மற்றும் அருட் சகோதரிகள் பங்கேற்றனர்.

பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள் என அனைவரும் கலந்து கொண்டு கல்லூரி ஆண்டு விழாவை சிறப்பித்தனர்.

# ஸ்ரீ ராமநவமி 2 -ஆம் நாள் உற்சவம், ஸ்ரீபாண்டுரங்க சுவாமி கருட சேவை



**கடலூர் ,மார்ச்30:**

கடலூர் மாவட்டம் புவனகிரியின் கண் ஸ்ரீவைஷ்ணவ ஆர்ய வைஸ்ய பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாண்டுரங்க சுவாமி சன்னதியில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி 27.3.2026 முதல் பங்குனி மாதம் 22 ஆம் தேதி 5.4.2026 முடிய உற்சவம் நடைபெறும்.

காலை 11 மணி அளவில் திருமஞ்சனம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், (2-ஆம் நாள்) ஸ்ரீ பாண்டுரங்க சுவாமி கருட சேவை (திரு வீதி புறப்பாடு) அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கருட சேவையில் கலந்து கொண்டு ஸ்ரீ பாண்டுரங்க சுவாமியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் இரண்டு வேளையும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. கருட வாகனத்தில் ஸ்ரீபாண்டுரங்க சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. உபயம். புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீவைஷ்ணவர்கள்.


**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# "குருத்து ஞாயிறு" குருத்தோலை பவனி நிகழ்ச்சி




கும்பகோணம் மறை மாவட்டம், வடகரை, புனித லூர்தன்னை ஆலயத்தில் "குருத்தோலைஞாயிறு" திருபவனியில். அருட் தந்தையர்களுடன் பொதுநிலையினரும் கலந்துகொண்டனர்.

# பெருமாள் திருமஞ்சனம்



பாக்கம் ஸ்ரீஅமிர்தவல்லி ஸ்ரீகரிய மாணிக்கப் பெருமாள் திருக்கோயில் ஏகாதசி மூலவர் பெருமாள் திருமஞ்சனம் நடைபெற்றது.

## நம் வாசவி அம்மன் தங்க கவசம் அலங்கரத்தில்



**கள்ளக்குறிச்சி , மார்ச் 30:**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க கவசத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆறு வயசு ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக்கல்யாணம் உற்சவம்



**திருவண்ணாமலை மார்ச் 30:**

ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு கணேஷ் ஐயர், பாலசுப்பிரமணிய ஐயர், யாகேஷ் ஐயர் அவர்களால் மூலவருக்கும், உற்சவத்தில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ ராமருக்கும், சீதாதேவிக்கும் திருக்கல்யாணம் வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பாட்டுகள் பாடி திருக்கல்யாணம் முடிந்து ஆலயம் சுற்றி வந்தன.

பின்னர் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ ராமரையும் சீதா தேவியையும் வேண்டி அருள் பெற்றனர். வெகு சிறப்பாக ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக்கல்யாணம் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. உபயதாரர்: திரு. விஜயகுமார், சசிரேகா Rtd HM , குடும்பத்தினர்கள் திருவண்ணாமலை. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் காவி நிற அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர், மார்ச் 30:**

வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான் பட்டறையில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீராக வேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீசத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது. இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு (ஆதி வாரம்) அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது.

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் காவி நிற துணியால் அலங்கரித்து வைக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள்) ராகவேந்திரரை தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர்.

இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.




## தேர்தல் களப்பணியில்...

### மதிமுக வேட்பாளர்கள் அறிவிப்பு

திமுக அணியில் மதிமுகவுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டநிலையில், மதிமுக வேட்பாளர்களை கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நேற்று அறிவித்தார்.

அதன்படி, மதுரை தெற்கு தொகுதியில் பூமிநாதன், கடையநல்லூரில் தி.மு.ராஜேந்திரன், மொடக்குறிச்சியில் செந்தில்நாதன், சீர்காழியில் செந்தில்செல்வன் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் பூமிநாதன் ஏற்கெனவே மதுரை தெற்கு தொகுதியில் எம்எல்ஏவாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் உதயசூரியன் சின்னத்தில் நிற்கும் மனிதநேய ஜனநாயக கட்சி போட்டியிடும் சிதம்பரம் தொகுதியில் தமிமுன் அன்சாரி, அதேபோல மனிதநேய மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நாகை தொகுதியில் ஜவாஹிருல்லா, மணப்பாறை தொகுதியில் அப்துல் சமது வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

### "இந்தத் தேர்தலோடு கருணாநிதி குடும்பத்துக்கு முற்றுப்புள்ளி" - பிரச்சாரத்தில் பொங்கிய பழனிசாமி



சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட உள்ள மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷை ஆதரித்து கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று பிரச்சாரம் செய்தார். கூட்டத்தில் அவர் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகள் திமுக அரசு கொடுமையான ஆட்சியை கொடுத்தார்களே தவிர, மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? குடும்ப ஆட்சி, வாரிசு அரசியலைத்தான் மக்கள் பார்த்தார்கள்.

கருணாநிதி முதல்வராக இருந்தபோது, ஸ்டாலினை எம்எல்ஏ.வாக்கி, அமைச்சராக்கி, துணை முதல்வராக்கி, திமுகவுக்கு செயல் தலைவராக்கினார். அவருக்குப் பின் ஸ்டாலின் திமுக தலைவராகி விட்டார். கருணாநிதி போலவே, கட்சியிலும், ஆட்சியிலும் தனக்குப் பின்னால், அதுவும் ஆண் வாரிசுகள் திமுக கட்சிக்கு தலைமை தாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உதயநிதியை அறிமுகம் செய்து,துணை முதல்வராக்கி இருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். இவர் திமுகவின் தலைவர், உதயநிதி இளைஞரணி மாநிலச் செயலாளர், கனிமொழி துணைப்பொதுச்செயலாளர். இப்படி குடும்பத்தில் இருப்பவர்கள் தான் அதிகாரத்திலும் ஆட்சியிலும், கட்சியிலும் உயர்ந்த பதவியில் இருக்க முடியும். திமுகவில் எவ்வளவு தான் பாடுபட்டு உழைத்தாலும், தொண்டர்களுக்கு அங்கீகாரம் கிடையாது. ஆனால் அதிமுக அப்படி இல்லை. நான் முதன் முதலாக தேர்தல் பிரச்சார பயணத்தை மயிலாப்பூரில் தொடங்கினேன்.

அந்த கூட்டத்தில் நான் பேசியதற்கு அடுத்த நாள் 3 அமைச்சர்கள் பதில் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு ஸ்டாலினுக்கு தேர்தல் பயம், தோல்வி பயம் வந்து விட்டது. மக்கள் செல்வாக்கை ஸ்டாலின் இழந்துவிட்டார். அவர்களுக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் தான் என்ன பேசுறோம் என தெரியாமல் பேசுகிறார்கள் திமுகவினர். இந்த தேர்தலோடு கருணாநிதி குடும்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என பேசினார்.

### காங்கிரஸில் ஜி.கே.மணியின் மகன்: பென்னாகரம் தொகுதியில் களமிறங்குகிறாரா தமிழ்க்குமரன்?

பாமக ராமதாஸ் ஆதரவு எம்எல்ஏ ஜி.கே.மணியின் மகனும் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவருமான ஜி.கே.எம்.தமிழ்க்குமரன் நேற்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவருக்கு பென்னாகரம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது. பாமக இளைஞர் சங்கத் தலைவராக இருந்த அன்புமணி, கடந்த 2023-ல் பாமக தலைவரானார்.

அப்போது கட்சியின் தலைவராக இருந்த ஜி.கே.மணி கவுரவத் தலைவரானார். இதனால் ஜி.கே.மணி அதிருப்தியில் இருந்து வந்ததாக கூறப்பட்டது.

இதையடுத்து அவரது மகன் தமிழ்க்குமரனுக்கு பாமக இளைஞர் சங்கத் தலைவர் பொறுப்பு கொடுத்து மணியை சமாதானம் செய்தார் ராமதாஸ். பின்னாளில் அந்த பதவியை தமிழ்குமரன் ராஜினமா செய்தார். அதற்கு அன்புமணி தான் காரணம் எனச் சொல்லப்பட்டது.

இதையடுத்து, ராமதாஸின் மூத்த மகள் ஸ்ரீகாந்தியின் மகன் முகுந்தன் இளைஞர் சங்கத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதற்கும் அன்புமணி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இப்படியான சூழலில் டெல்லியில் காங்கிரஸ் தலைவர் கார்கே, பொதுச் செயலாளர் வேணுகோபால் முன்னிலையில் தமிழ்க்குமரன் நேற்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு பென்னாகரம் தொகுதி ஒதுக்கப்பட்டிருப்பதால் தனது தந்தை சிட்டிங் எம்எல்ஏ-வாக இருக்கும் அங்கு தமிழ்க்குமரன் போட்டியிடலாம் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

# இணையதளம் மூலம் பதிவு செய்தால் மட்டுமே பிரச்சாரத்துக்கு அனுமதி: தேர்தல் அதிகாரி விளக்கம்

இணையதளம் மூலம் பதிவு செய்தால் மட்டுமே அரசியல் கட்சிகளின் பிரச்சாரத்துக்கு அனுமதி அளிக்கப்படும் என்று சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரக் கிடங்கில் வாக்குப்பதிவு எந்திரங்கள் தொகுதி வாரியாக பிரித்து, வாக்குச் சாவடிகளுக்கு ஒதுக்கப்பட்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த வாக்குப் பதிவு எந்திரங்களை 16 தொகுதிகளுக்கும் அனுப்பி வைக்கும் பணியை சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி




குமரகுருபரன் நேற்று தொடங்கி வைத்தார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதால் அரசியல் நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்றால் அதற்கு முறையாக அனுமதி பெற வேண்டும். 'சுவிதா' இணையதளத்தில் 48 மணி நேரத்துக்கு முன்னரே பதிவு செய்து அனுமதி பெறுவது கட்டாயம்.

த.வெ.க தலைவர் விஜய் பிரச்சாரத்துக்கு முறையாக இணையதளம் மூலம் பதிவு செய்தால் அனுமதி வழங்கப்படும். மேடை அமைத்து பிரம்மாண்டமாக நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டால் பொது பணித்துறையிடம் அனுமதி வாங்க வேண்டும். அரசியல் கட்சித் தேர்வு செய்யும் இடம் பொதுமக்களுக்கு இடையூறாகஇல்லைஎனபோலீசார் என்.ஓ.சி. கொடுக்க வேண்டும். ஆர்.ஓ.விடம் இணையதளம் மூலம் ஒரு அனுமதி கடிதம் வருகிறது என்றால் அவர் அதனை பரிசீலித்து முறையாக சான்றிதழ்கள் இருந்தால் 1 முதல் 4 மணி நேரத்துக்குள் அனுமதி கொடுத்து விடுவார்.

நிகழ்ச்சி நடப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பு பேரணி செல்கிறோம் என நேரில் சென்று கடிதம் கொடுத்தால் அனுமதி கொடுக்க முடியாது. இணையதளம்மூலம் அனுமதி கேட்டு பதிவு செய்பவர்களின் மனு நிராகரிக்கப்பட்டால் அதற்கான உரிய காரணத்தை இணையதளத்திலேயே பதிவு செய்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேர்தலில் வாக்களித்ததை உறுதிசெய்ய குறுஞ்செய்தி: உயர்நீதிமன்றத்தில் மனு

தேர்தலில் வாக்களித்ததை உறுதிசெய்யும் குறுஞ்செய்தி அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இசை வேளாளர்கள் இளைஞர் நலச் சங்கத்தின் தலைவர் கே.ஆர். குகேஷ் தாக்கல் செய்துள்ள மனுவில், ரேஷன் பொருட்கள் வாங்கும்போது, எரிவாயு சிலிண்டர் பதிவு செய்யும்போது,வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ளும்போது வெளிப்படைத்தன்மைக்கு பொறுப்பேற்கும் வகையில் உடனடியாக பயனாளரின் அலைபேசிக்கு குறுஞ்செய்தி வருவதை மனுவில் குறிப்பிட்டுள்ளார். அதேபோல வாக்குப்பதிவில் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்கும் வகையில், தன் வாக்கை பதிவுசெய்தவுடன் அதை உறுதிசெய்யும் வகையில், வாக்காளரின் அலைபேசிக்கு குறுஞ்செய்தி வரும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென தேர்தல் ஆணையத்திடம் கடந்த இரண்டு ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த யோசனையை பரிசீலித்துவருவதாக முதலில் கூறிய தேர்தல் ஆணையம் அதன்பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கே.ஆர்.குகேஷ் தன் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் கடந்த பிப்ரவரி மாதம் அளித்த மனுக்கள் மீது இந்திய தேர்தல் ஆணையமோ, தமிழக தலைமை தேர்தல் அதிகாரியோ எந்த நடவடிக்கையும் எடுக்காததால், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளார். இந்த மனு தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வரவுள்ளது.

## விருத்தாசலத்தில் பிரேமலதா, விருதுநகரில் விஜய பிரபாகர் போட்டி

தேமுதிக வேட்பாளர் பட்டியல் (மார்ச் 28) வெளியிடப்பட்டுள்ளது. விருத்தாச்சலத்தில் பிரேமலதா விஜயகாந்த், விருதுநகரில் விஜய பிரபாகர் போட்டியிடுகின்றனர்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக கூட்டணியில் உள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது அக்கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா இன்று (மார்ச் 28) வெளியிட்டுள்ளார்.

வேட்பாளர்கள் பட்டியல் விவரம்:

விருத்தாசலம் - பிரேமலதா விஜயகாந்த்

தருமபுரி - V.இளங்கோவன்

சேலம் மேற்கு - அழகாபுரம்.R.மோகன்ராஜ்

விருதுநகர் - வி.விஜய பிரபாகர்

ஓமலூர் - ஏ.ஆர்.இளங்கோவன்,

மைலம் - எல்.வெங்கடேசன்

பல்லாவரம் - அனகை.D.முருகேசன்

திருத்தணி - D.கிருஷ்ணமூர்த்தி

குடியாத்தம் (தனி) - K.B.பிரதாப்

போளூர் - T.P. சரவணன்

## கார்ட்டூன் போட்டு விமர்சனம் செய்யும் பிரவீன் சக்கரவர்த்தி

பிரவீன் சக்கரவர்த்தி தொகுதிப் பங்கீடு தொடர்பாக கார்ட்டூன் போட்டு தனது விமர்சனத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அதில், ஒரு படத்தில் பீட்சா துண்டுகள் குறைவாகவும் அதில் பீட்சாவை ஷேர் செய்வதில் குடும்பத்தினர் இடையே போட்டா போட்டி நடப்பது போன்றும், இன்னொரு படத்தில் பீட்சா துண்டுகள் அதிகமாக இருக்கும் வகையில் வரையப்பட்டு, அதில் உள்ள குடும்பத்தினர் எந்தவித குழப்பமும் இன்றி அமைதியாக ஆளுக்கு ஒரு துண்டினை எடுத்துச் சாப்பிடுவது போன்றும் உள்ளது. அதாவது சீட் அதிகமாக இருந்திருந்தால் இந்த நிலைமை



வந்திருக்காது. காங்கிரஸுக்கு சீட்கள் குறைக்கப்பட்டதால் தான் இப்படி காங்கிரஸுக்குள்ளேயே போட்டி ஏற்படுகிறது என்பதை வெளிக்காட்டும் விதமாக பதிவிட்டுள்ளார்.

## கட்சி வளர்த்த அண்ணாமலைக்கு கடைசியில் ஒரு சீட் இல்லையா?

கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்து மொத்தமாக 35 தொகுதிகளில் தாமரை போட்டியிடுகிறது. இருந்தாலும், "இத்தனை பேருக்கு சீட் ஒதுக்கியவர்களுக்கு அண்ணாமலைக்கு ஒரு சீட் ஒதுக்க முடியவில்லையா?" என்ற கேள்வியே பாஜக தொண்டர்கள் மத்தியில் இப்போது பெரும் விவாதமாக இருக்கிறது.



2024 மக்களவைத் தேர்தல் சமயத்திலிருந்தே அண்ணாமலைக்கும் அதிமுக-வுக்கும் ஒத்துப்போகவில்லை. அதிலும் குறிப்பாக, எடப்பாடி பழனிசாமிக்கும் அண்ணாமலைக்குமான மோதல் கூட்டணியை முறிக்கும் அளவுக்குப் போனது. இருந்த போதும் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக-வுடன் மீண்டும் கூட்டணி வைத்து, விட்ட இடத்தைப் பிடிக்க நினைத்த பாஜக தலைமை, அதற்காக அண்ணாமலையை ஒதுக்கிவிட்டு பழனிசாமிக்கு தோதான நயினார் நாகேந்திரனை தலைவர் பதவியில் அமர்த்தியது.

இந்த நிலையில், கோவை சிங்காநல்லூர் உள்ளிட்ட 6 தொகுதிகளுக்கான பாஜக தேர்தல் பொறுப்பாளராக அண்ணாமலையை கடந்த பிப்ரவரியில் அறிவித்தது தமிழக பாஜக. ஆனால், தனது தந்தையின் உடல்நிலையைக் காரணம் காட்டி அந்தப் பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்த அண்ணாமலை, "நான் தேர்தலில் போட்டியிடுவது குறித்து காலமும் நேரமும் தான் முடிவு செய்யும்" என்று சொன்னார். அண்ணாமலைக்காக இதில் ஒன்றைக் கேட்டுப் பெறவும் பாஜக தரப்பில் யாரும் பிடிவாதமாக முயற்சிக்கவும் இல்லை என்கிறார்கள். அண்ணாமலைக்கு மட்டுமல்லாது அவரது விசுவாசிகள் சிலருக்கும் இம்முறை சீட் இல்லாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இதையெல்லாம் எதிர்த்துக் கேட்கமுடியாமல் உள்ளுக்குள்ளேயே பொசுங்கினார் அண்ணாமலை.

அதிமுக - பாஜக கூட்டணி அமைந்துவிட்டாலும் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை சரியாகக் கட்டமைக்கத் தவறிவிட்டோம் என்ற ஆதங்கம் அண்ணாமலைக்கு இருக்கிறது. மேலும், வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளைக் கேட்டுப் பெறவும் பாஜக தலைமை தவறிவிட்டதாக ஆதங்கப்படும் அண்ணாமலை தரப்பு, "அமைச்சர்கள் போட்டியிடும் தொகுதிகளை எல்லாம் பாஜக, தமாகா, அமமுக உள்ளிட்ட கட்சிகளின் தலையில் கட்டிவிட்டார் பழனிசாமி" என ஆத்திரப்படுகிறது. இப்படியான சூழலில், இந்தத் தேர்தல் முடிவுகள் தரப்போகும் சாதக - பாதகங்களில் தனக்கு எந்தப் பங்கும் இருக்க வேண்டாம் என்று அமைதியாக ஒதுங்கிவிட்டார் அண்ணாமலை.

## கேரள தேர்தல் பிரச்சாரத்தில் சுவர் விளம்பரம் எழுதும் ரோபோக்கள்

கேரள தேர்தல் பிரச்சாரத்தில் மாநிலம் முழுவதும் சுவர் விளம்பரம் தீவிரமடைந்திருக்கிறது. இதற்காக ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கேரளாவில் 140 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக ஏப்ரல் 9-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே கடும் போட்டி நிலவுகிறது.




மூன்று அணிகள் சார்பிலும் அதிதீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக திருவனந்தபுரம், கொச்சி உள்ளிட்ட பகுதிகளில் சுவர் விளம்பரம் தீவிரமடைந்திருக்கிறது. இதற்காக ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கேரளாவின் பாலக்காட்டை சேர்ந்த ஷாகிப் கீதாஞ்சலி, அவரது மனைவி அக்சா பீட்டர் இணைந்து சுவர் விளம்பரம் வரையும் ரோபோவை உருவாக்கி உள்ளனர். இருவரும் மருத்துவர்கள். மருத்துவ வரைபடங்களை உருவாக்குவதற்காக "சுவர் போட்" என்ற பெயரில் அவர்கள் ரோபோவை தயாரித்தனர்.

இந்த ரோபோவில் இணைக்கப்பட்டிருக்கும் கணினியில் வாசகங்கள் மற்றும் படங்களை பதிவு செய்ய வேண்டும். இதை அப்படியே சுவரில் ரோபோ வரைந்துவிடும். ரோபோவில் உள்ள பெட்டியில் தேவையான பெயின்ட் கலவையை சேர்க்க வேண்டும்.

இது குறித்து சுவர்போட் ரோபாவை இயக்கும் தொழில்நுட்ப நிபுணர் ஒருவர் கூறும்போது, "மாநிலம் முழுவதும் சுவர் விளம்பரங்கள் எழுதப்பட்டு வருகின்றன.

ஒரு சுவர் விளம்பரத்தை வரைய, எழுத ஓவியர்களுக்கு சில மணி நேரங்கள் தேவைப்படும். ஆனால் எங்களது சுவர் போட் ரோபோ 20 நிமிடங்களில் சுவர் விளம்பரத்தை நிறைவு செய்யும்.

இதை இயக்க ஒரு நபர் போதும். தற்போது அனைத்து கட்சியினரும் எங்களது ரோபோக்கள் மூலம் சுவர் விளம்பரங்களை வரைய முன்பதிவு செய்து வருகின்றனர். ஆனால் எங்களிடம் போதிய ரோபோக்கள் இல்லை. தேவை அதிகரிப்பதால் அடுத்த ஆண்டுக்குள் அதிக ரோபோக்களை தயாரிப்போம்" என்றார்.

## பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு பழநியில் தீர்த்தக் காவடியுடன் குவியும் பக்தர்கள்

**பழநி, மார்ச் 30:**

பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, பழநி முருகன் கோயிலுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் தீர்த்தக் காவடி எடுத்து வந்து நேர்த்திக் கடன் செலுத்தி வருகின்றனர்.

அறுபடை வீடுகளில் 3-ம் படை வீடான பழநி திருஆவினன்குடி கோயிலில் பங்குனி உத்திர திருவிழா மார்ச் 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் 6-ம் நாளான நாளை மறுநாள் (மார்ச் 31) இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணம் நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்வான ஏப்.1-ம் தேதி பங்குனி உத்திரத்தையொட்டி மாலை 4.30-க்கு மேல் தேரோட்டம் நடைபெறுகிறது.

திருவிழாவை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தக் காவடி எடுத்து வந்து பழநி தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபடுவது வழக்கம். அதன்படி, நேற்று ஏராளமான பக்தர்கள், தீர்த்தக் காவடி எடுத்தும், அலகு குத்தி வந்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தீர்த்தக் காவடியுடன் வரும் பக்தர்கள் மலைக்கோயிலில் ரூ.200 கட்டண தரிசன பாதை வழியாக இலவசமாகச் சென்று தரிசனம் செய்ய தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு, இதர பக்தர்களுக்கு தரிசன கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

## வல்லக்கோட்டை முருகன் கோவிலில் கல்யாண உற்சவம்

**காஞ்சிபுரம், மார்ச் 30:**

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் அடுத்த வல்லக்கோட்டையில் புகழ்பெற்ற முருகன் கோவில் உள்ளது. இந்த தலம் பிரார்த்தனை தலம் என்பதால் இங்கு அடிக்கடி கல்யாண உற்சவம் நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் காலை கல்யாண உற்சவம் விமரிசையாக நடைபெற்றது.

கல்யாண உற்சவத்தை முன்னிட்டு காலை 7.30 மணிக்கு ஶ்ரீ வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி உற்சவருக்குப் பால், தயிர், சந்தனம், விபூதி, பஞ்சாமிர்தம், பன்னீர் உட்பட பலவித பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ரோஜா, சாமந்தி, கதிர்பச்சை, சம்பங்கி மலர் மாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு மணமக்கள் திருக்கோலத்தில் மயில் மண்டபத்திற்கு முருகப்பெருமான் எழுந்தருளினார். கல்யாண வரம்வேண்டி திராளான பக்தர்கள் மாலைகளுடன் வந்திருந்தனர்.

காலை 9.30 மணிக்கு கல்யாண உற்சவம் தொடங்கி 11.30 மணி வரை நடைபெற்றது.

கோவில் தலைமை அர்ச்சகர் தலைமையில் ஐந்து அர்ச்சகர்கள் யாகம் வளர்த்து மந்திரங்கள் ஓதினர். மங்கலவாத்தியங்கள் ஒலித்திட 11.30 மணிக்கு மாங்கல்யதாரணம் நடைபெற்றது.

## தி.மலை பச்சையம்மன் மன்னர்சாமி கோயிலில் உலக நன்மைக்காக ஸ்ரீ மஹா நவ சண்டியாகம்



**திருவண்ணாமலை, மார்ச் 30:**

திருவண்ணாமலையில் உள்ள பச்சையம்மன் மன்னர்சாமி கோயிலில் உலக நன்மைக்காக ஸ்ரீ மஹா நவ சண்டியாகம், கோ பூஜை, அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்ணியாவாசனம், ஸ்ரீ கணபதி, ஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ நவகிரக ஹோமங்கள், ஸ்ரீ வாஸ்து சாந்தி, பூர்ணாஹீதியுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது,

அதனைத் தொடர்ந்து நேற்று காலை 6 மணிக்கு ஸ்ரீ கணபதி பூஜை, புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய பூஜை, தேவி மஹாத்மீய பாராயணம், லலிதா ஸகஸ்ரநாம பாராயணம், நவாரணபூஜை நாவாக்ஷரி ஹோமம், தேவிமகாத்மிய அத்தியாய ஹோமம் 13 அத்தியாயம், பிரம்மச்சாரி பூஜை, ஸ்வாசினி பூஜை, ஸ்வாசினிபூஜை, கன்னியா பூஜை, தம்பதி பூஜை, வடுக பைரவர் பூஜை, காதம்பரி பாதிபலி, பைரவர் பலி, சௌமாங்கல்ய திரவிய சமர்ப்பணம், வஸோத்தாரை மஹா பூர்ணாஹீதி, தீபாரதனை, யாத்ராதானம் கலசம் புறப்பட்டு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பச்சையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து தீபாரதனை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இவ்விழாவில் இணை ஆணையர் பிரகாஷ், துணை ஆணையர் ஜீவானந்தம், அலுவலர் சிலம்பரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அர்ச்சகம் சர்வ போதகம் சிவாகாம ஞான பாஸ்கரர், சிவகாம செல்வர் டாக்டர் ஹாலாஸ்யநாத சிவாச்சாரியார், சர்வசாதகம் சிவகாம வித்யாபாரதி பீமாம்ஸ வேதாந்த ஜோதிட விசாராத டாக்டர் தி. அருணாச்சல கார்த்திகேய சிவாச்சாரியார் செய்திருந்தனர்.

## திருவாரூர் தியாகராஜர் கோவில் ஆழித்தேரோட்டம் கோலாகலம்





**திருவாரூர், மார்ச் 30:**

திருவாரூர் தியாகராஜர் கோவில் சைவ சமயத்தின் தலைமை பீடமாகவும், தோன்றிய வரலாற்றினை கணக்கிட முடியாத பழமையும் வாய்ந்த கோவிலாகவும் திகழ்கிறது. சிறப்புமிக்க கோவிலுக்குரிய ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர் என்ற பெருமைமிக்கது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திர திருவிழாவில் முக்கிய நிகழ்வாக ஆழித்தேரோட்ட விழா விமரிசையாக நடைபெறும்.

அந்த வகையில், பங்குனி உத்தர திருவிழா கடந்த மாதம் 15-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து வரலாற்று சிறப்புமிக்க ஆழித்தேராட்டம் இன்று (ஞாயிற்றுகிழமை) கோலாகலமாக நடைபெற்று வருகிறது. காலை 9.05 மணிக்கு தேர் வடம் பிடிக்கப்பட்டது. அதனுடன் அம்பாள், சண்டிகேஸ்வரர் தேர் வடம் பிடிக்கப்பட்டது.

96 அடி உயரத்தில் கம்பீரமாக காட்சி அளிக்கும் ஆழித்தேர், திருவாரூர் நகர வீதிகளில் அசைந்தாடி வருகிறது. ஆழித்தேரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். திருச்சி பெல் நிறுவனம் இரும்பு அச்சுகள், நான்கு இரும்பு சக்கரங்கள், ஹைட்ராலிக் பிரேக் வசதி உள்ளிட்ட வசதிகளை ஆழித்தேருக்கு அமைத்துள்ளது.

அலங்கரிக்கப்படாத ஆழத்தேரின் எடை என்பது 220 டன் ஆகும். 5 டன் எடையுள்ள பனஞ்சப்பைகள், 50 டன் எடையுள்ள கயிறு. 500 கிலோ எடையுள்ள அலங்கார துணிகள் ஆகியவற்றை பயன்படுத்தி தேர் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இது தவிர தேரின் முன்புறம் கட்டப்படும் நான்கு குதிரைகள், ஞானி, பிரம்மா உள்ளிட்ட பொம்மைகள், தேரின் நான்கு புறங்களிலும் கட்டப்பட்டு அலங்கார தட்டிகள் ஆகியவற்றின் எடை 5 டன் ஆகும். அலங்கரிக்கப்பட்ட தேரின் மொத்த எடை 350 டன் னாகும்.

தேரோட்ட விழாவை யொட்டி சன்னதி தெரு உள்ளிட்ட கோவிலின் 4 திசைகளிலும் கடைகள் திறக்கப்பட்டு வருகிறது. அனைத்து பகுதிகளுக்கும் தேவையான பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. தேரோட்டத்தை காண வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள், சிவனடியார்கள் திருவாரூருக்கு வருகை புரிந்து வருகின்றனர்.

## திருப்பதி கோதண்டராமர் கோவிலில் சீதா-ராமர் திருக்கல்யாண உற்சவம்

**திருப்பதி, மார்ச் 30:**

திருப்பதி கோதண்டராமர் கோவிலில் ராமநவமி விழா விமரிசையக நடந்தது. ராம நவமி தினத்தன்று அதிகாலை சுப்ரபாதத்தில் மூலவர்களை துயிலெழுப்பி அபிஷேகம் செய்யப்பட்டது. காலை 8 மணியில் இருந்து 9 மணி வரை ஊஞ்சல் மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளான சீதா, ராமர், லட்சுமணர், அனுமனுக்கு பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள் மற்றும் சந்தன கலவையால் ஸ்நாபன திருமஞ்சனம் செய்யப்பட்டது.

தொடர்ந்து மாலை 3 மணியில் இருந்து 4 மணி வரை பெரிய ஜீயர் சுவாமியின் மடத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள் புதிய வஸ்திரங்களை ஊர்வலமாக எடுத்துக்கொண்டு கோவிலை சுற்றி வலம் வந்து (விமான பிரதட்சணம்) மூலவர்களுக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் சமர்ப்பித்தனர்.

அதைத்தொடர்ந்து ராம ஜன்ம புராண பாராயணமும், மாலை 3 மணியளவில் ராமநவமி ஆஸ்தானமும் நடத்தப்பட்டது. இரவு 7 மணியில் இருந்து 9 மணி வரை உற்சவர் கோதண்டராமர் அனுமன் வாகனத்தில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ராமநவமியையொட்டி நேற்று சீதா-ராமர் திருக்கல்யாண உற்சவம் நடந்தது. முன்னதாக காலை உற்சவர்களான சீதா, லட்சுமணர் சமேத கோதண்டராமருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து முத்துமாலைகள் ஊர்வலம் நடத்தப்பட்டது. முதலில் தேவஸ்தான நிர்வாக கட்டிடத்தில் உள்ள கருவூலப் பிரிவில் அதிகாரிகள் முத்து மாலைகளுக்கு சிறப்புப்பூஜைகள் நடத்தினர். இந்த ஊர்வலம் தீர்த்தக்கட்ட வீதி, காந்தி ரோடு, கோவிந்தராஜர் கோவில் தெற்கு மாட வீதி, பஜார் வீதி வழியாக கோவிலை அடைந்தது. அதன்பிறகு மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணிவரை சீதா-ராமர் திருக்கல்யாண உற்சவம் நடந்தது.





வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528




## நலம் தரும் மருத்துவம்

## நாவின் ஆரோக்கியம் காப்போம்!

நாம் எண்ணுவதை பேசுவதற்கும், உண்ணும் உணவை பற்கள் மென்று தின்ன சமநிலைப்படுத்தவும் உதவும் ஒரு முக்கிய உறுப்பு நாக்கு.நாக்கு நம் உடலின் நிலையை அப்படியே எடுத்துக்காட்டும் கண்ணாடி என்று சொன்னால் அது மிகையில்லை. நாக்கின் தன்மையை வைத்து உடலில் என்ன பிரச்னை என மருத்துவர்கள் ஓரளவுக்கு கண்டறிந்து விடுவார்கள்.

அதனால்தான் மருத்துவர்கள், தங்களிடம் வரும் நோயாளிகளை முதலில் நாக்கை காட்டச் சொல்லி, பார்க்கிறார்கள். பொதுவாக நம் நாக்கு இளம் சிவப்பு நிறத்தில்தான் இருக்கும். அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் ஏதோ பிரச்னை உள்ளது என அறிந்து கொள்ளலாம்.நாக்கு எல்லா உறுப்புகளோடும் தொடர்புடையது. வைட்டமின் பாதிப்பு தொற்றுநோய் பாதிப்பு, புற்றுநோய் பாதிப்பு, நரம்பு மண்டல பாதிப்பு என பெரிய பிரச்னைகளின் அறிகுறிகளை தெரிவித்துவிடும். நாக்கின் நிறம் மட்டுமன்றி அதன் வடிவமும் மேல், கீழ் பகுதிகளும் நோய் பாதிப்பை காட்டும். நாக்கு வெள்ளை நிறத்தில் இருந்தால் வாயில் தொற்று பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது என தெரிந்துக் கொள்ளலாம்.

நாக்கின் நுனி மட்டும் சிவந்திருந்தால் மனஅழுத்தம், கார உணவு சாப்பிட்டதால் சிவந்து போதல், நாக்கின் பின்புறம் சிவந்தால் சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளது என புரிந்துக் கொள்ளலாம்.நாக்கு சிவந்திருந்தால் வைட்டமின் குறைபாடு, மஞ்சள் நிறமென்றால் நீர்ச்சத்து குறைபாடு என்பது தெளிவாகும்.நாக்கு வீங்கியிருந்தால் ஊட்டச்சத்து குறைபாடு, நாக்கில் வலி இருந்தால் சர்க்கரை நோய், நாக்கின் இடது மற்றும் வலது பாகங்களில் பாதிப்பு இருந்தால் கல்லீரல் பாதிப்பு, நாக்கின் மேற்பரப்பு வறண்டு இருந்தால் ரத்த சோகை, அடர் சிவப்பு என்றால் உடல் உஷ்ணம், கருப்பு நிற புள்ளிகள் இருந்தால் ரத்த ஓட்டத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளது என தெரிந்து கொள்ளலாம்.

நாக்கை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம். நாக்கை சரி வர பராமரிக்காவிட்டால் வாய் மற்றும் பல் தொடர்பான பிரச்னைகளை உருவாக்கும். நாக்கை சாதாரணமாக சுத்தம் செய்யலாம். டங் - க்ளீனர் கொண்டு அமுத்தி சுத்தமாக்கினால் வீக்கம், வலி உண்டாக வாய்ப்புள்ளது. வெதுவெதுப்பான நீரில் வாய் கொப்பளிக்க வாய், நாக்கு, ஆரோக்யமாகவும், தொற்று ஏற்படாதவாறும் பாதுகாக்கப்படும். நிறைய தண்ணீர் குடிப்பதாலும், மிதமான கார உணவுகளை உண்பதாலும் உடல் ஆரோக்கியம் மேம்படும். நாக்கில் சுரக்கும் உமிழ்நீர் உணவு செரிமானத்திற்கு இன்றியாமையாதது. அடிக்கடி எச்சில் துப்புவது நாவை உலரச் செய்யும். நாவை முறைப்படி ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள பல உபாதைகளிலிருந்து நம்மை காத்துக் கொள்ளலாம்.

## படுக்கைவசதி ரயிலில் செல்வோர் கவனிக்க.. நடுப் படுக்கையை பயன்படுத்த ரயில்வே விதிமுறை!

படுக்கை வசதிகளைக் கொண்ட ஸ்லீப்பர் ரயில்களில் இருக்கும் மிடில் பெர்த் (நடுப் படுக்கை)யை எப்போது பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பான புதிய விதிமுறைகளை தென்னக ரயில்வே வெளியிட்டுள்ளது.




ரயில்களில் செல்வது என்பது பலருக்கும் அலாதியான பிரியம்தான். நீண்டதூரப் பயணங்களுக்கு பேருந்துகள், கார்களில் செவதைவிட அதிகளவில் சொகுசானப் பயணத்துக்கும், விமானக் கட்டணத்தை விட குறைவான கட்டணம் என்பதாலும், கழிப்பறை வசதி, ரயில் உள்ளேயே நடந்துகொள்ளும் வசதிகள், உணவுப் பொருள்கள் உள்ளிட்டவை கிடைப்பதால் பலரும் ரயில் பயணத்தை விரும்புகின்றனர்.

அதேநேரத்தில், திடீரென டிக்கெட் பதிவு செய்யமுடியாமல் போவது, 120 நாள்களாக இருந்த முன்பதிவு தற்போது 60 நாள்களாகக் குறைக்கப்பட்டது போன்றவை பலரையும் அதிருப்திக்குள்ளாக்கியிருக்கின்றன. அதுமட்டுமன்றி, தத்கல் பதிவிலும் சில நேரங்களில் ரெக்ரெட்-வருந்தச்செய்வது, பயணத்துக்கு எட்டு மணி நேரத்துக்குள் டிக்கெட்டை ரத்துசெய்தால்பணம்திருப்பி செலுத்தப்படாது என்ற பல்வேறு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதேபோல, ஸ்லீப்பர் ரயில்களின் சாதாரண ஸ்லீப்பர், 3ஏ ஏசி உள்ளிட்ட பெட்டிகளில் டிக்கெட் கிடைப்பதும் அவ்வளவு எளிதானதல்ல. இவ்வாறான சூழலில் டிக்கெட் கிடைத்தாலும் பகல் நேரங்களில் நீண்ட தூரப் பயணங்களில் நாம் படுக்கை வசதியைப் பயன்படுத்த முடியாது.

குறிப்பாக ரயில் முன்பதிவுகளில் நமக்கான லோயர் பெர்த், மிடில் பெர்த், அப்பர் பெர்த் வசதி அதில் தேர்வாகக் கொடுக்கப்பட்டிருக்கும். இருப்பினும், முதியோர்கள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனுடையோருக்கு லோயர் பெர்த் இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன.

கீழ்ப் படுக்கை போட்டாலும், பெரியவர்கள் கேட்பார்கள் என்று நினைத்து இளைஞர்கள் பலரும் கீழ்ப் படுக்கையையும் நடுப் படுக்கையையும் விரும்புவதில்லை. ஆனால், நடுப்படுக்கையை அனைத்து வகை மக்களும் பயன்படுத்துகின்றனர்.

மூன்று பேருக்கான இருக்கையில் பகல் நேரங்களில் மூவரும் நடுப்படுக்கைகளில்தான் அமர்ந்து வருவார்கள். ஆனால், நடுப்படுக்கையை முன்பதிவு செய்துவிட்டேன் எனக் கூறி அவர்களை விரட்டி விடக்கூடாது என்பதற்காக நடுப் படுக்கை பயணிகளுக்கு புதிய விதிமுறைகளை தென்னக ரயில்வே வெளியிட்டுள்ளது.

படுக்கை வசதி கொண்ட ஏசி, ஏசி அல்லாத ஸ்லீப்பர் முன்பதிவு செய்த ரயில் பெட்டிகளில் நடுப்படுக்கையைப் பயன்படுத்தும் பயணிகள் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையில் உறங்குவதற்கு பயன்படுத்தி கொள்ளலாம். குறிப்பிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் சக பயணிகளுக்கு எந்தத் தொல்லையும் ஏற்படாத வகையில் இருக்கையைப் பயன்படுத்த வேண்டும்.

**தென்னக ரயில்வேயின் புதிய விதிமுறைகள்**

இரவு10முதல்காலைவரை மட்டுமே நடுப்படுக்கையை நீங்கள் தூங்குவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

காலை 6 மணி முதல் இரவு 10 வரை மற்ற பயணிகள் உட்காரும் வகையில் கட்டாயம் நடுப் படுக்கை மடக்கி வைக்க வேண்டும்.

முதியோர்கள், கர்ப்பிணி அல்லது உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டோர் குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் தூங்க விரும்பினால் மட்டுமே அதிக நேரம் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

நடுப்படுக்கை மடக்காமல், மற்றப் பயணிகளுக்கு சிரமம் தரும் வகையில் யாரும் நடந்துகொண்டால், டிக்கெட் பரிசோதகரிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

# விசுவாசம்

சமையலறையில் கமலா செய்த காரியத்தைப் பார்த்து கோகிலாவால் நம்பவே முடியவில்லை .ஆறு மாதம் முன்புதான் அவள் இங்கு வேலைக்கு சேர்ந்தாள்.குறை சொல்ல முடியாத அளவுக்கு எல்லா வேலையையும் ஒழுங்காக செய்து வந்தாள். அப்படிப்பட்டவள் ஏன் இப்படி செய்கிறாள்? உடனே கேட்டு விடலாமா என்று நினைத்த கோகிலா கொஞ்சம் விட்டுப் பிடிப்போம் என்று நினைத்து அமைதியானாள்.

மதியமும் அதே மாதிரியே செய்ய ஆரம்பித்தாள் கமலா. ”எவ்வளவுதான் பசி இருக்கட்டுமே .. அதற்காக சமைத்த உடனேயேவா வீட்டில் உள்ளவர்களுக்குக் கூடப் பரிமாறாமல் அவளே முதலில் சாப்பிடுவது? யாருக்கும்



தெரியாமல் இப்போது சாப்பிட்டு விட்டு பின்னால் மறுபடியும் ஒருமுறை சாப்பிடுவதா? என்ன பெண் இவள்?’ சாப்பாட்டிற்காக இப்படி அலைகிறாளே!’

தன் கணவர் சிதம்பரத்துடன் சாப்பிட அமர்ந்தாள் கோகிலா .தனது முதலாளிக்கு முன்னதாகவே நாம் சாப்பிட்டு விட்டோமே என்ற. குற்றஉணர்ச்சி கொஞ்சம் கூட இல்லாமல் அவர்களுக்குப் பரிமாற ஆரம்பித்தாள் கமலா.

"என்ன கமலா! சாப்பாட்டில் உப்பு காரம் எல்லாம் சரியா இருக்கா? " என்று பேச்சை ஆரம்பித்தாள் கோகிலா .இதுவரை ஒருமுறை கூட இந்த மாதிரி கேட்காத தன் எஜமானியம்மாள் இப்படி கேட்டவுடன் ஓரளவு விஷயத்தை யூகித்துக் கொண்டாள் கமலா.

"அதை சாப்பிட்டுப் பார்த்து நீங்கதான்மா சொல்லணும் " என்று சொல்லி சமாளித்துவிட்டு சென்று விட்டாள்.

இரவு.

சமையலறையில் கமலா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டு வந்த கோகிலா மறைவாக நின்று கவனிக்க ஆரம்பித்தாள்.


"ஏங்க! நீங்க வேலை செய்யற வீட்டுல. நீங்க செஞ்சு வைச்ச சாப்பாட்டுல பல்லி விழுந்து அதை சாப்பிட்ட முதலாளி குடும்பம்ஆ பத்தான நிலைமைக்குப் போய் மீண்டு வந்தாங்க. அந்த மாதிரி இங்கே நான் வேலை பார்க்கிற வீட்ல எதுவும் நடந்துடக் கூடாதுன்னு நான் ரொம்ப உஷாரா இருக்கேங்க.நான் இங்கே செஞ்சதை நானே சாப்பிட்டு முடிச்சு எந்த பிரச்னையும் இல்லைன்னு தெரிஞ்ச பின்னாடி தான் அவங்களுக்குப் பரிமாறுறேன். நமக்கு தங்க இடம் கொடுத்து நல்ல சம்பளமும் கொடுத்து மூணு வேளை சாப்பாடும் துணிமணியும் எடுத்துக் கொடுத்து நம்மளைக் காப்பாத்துற முதலாளி வீட்டுக்கு எந்த ஆபத்தும் வராமல் காப்பாத்தறது நம்ம கடமை இல்லையா!"

அவள் பேசப் பேச ’இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா’ என்று அதிசயித்துப் போனாள் கோகிலா.



-மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர்-636903

# ஒரு எச்சரிக்கை



காலப் பயண விண்கலமான ’காலம்-2050’ அதன் இலக்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அதில் இருந்த விஞ்ஞானி அரவிந்த் மற்றும் அவரது குழுவினர் மிகுந்த பதற்றத்தில் இருந்தனர். மனித வரலாற்றிலேயே முதன்முறையாக, அவர்கள் 100 ஆண்டுகள் முன்னோக்கி, அதாவது கி.பி 2126-ஆம் ஆண்டிற்குப் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரென விண்கலத்தின் திரையில் ஊதா நிற ஒளி மின்னியது. ஒரு கணீர் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது:

"2026-லிருந்து வரும் பயணிகளே, உங்கள் பயணத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். மேற்கொண்டு முன்னேற அனுமதி இல்லை!"

அரவிந்த் திடுக்கிட்டார். "நீங்கள் யார்? எங்களைக் கண்காணிப்பது யார்?"

"நான் உங்கள் கொள்ளுப் பேரன் முறையினன். 2126-ஆம் ஆண்டின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து பேசுகிறேன். நீங்கள் எங்களைத் தேடி வருவது எங்களுக்குத் தெரியும். ஆனால், நீங்கள் பார்ப்பதற்கு இங்கே ’எதிர்காலம்’ என்று எதுவும் மிஞ்சவில்லை."

அரவிந்த் குழப்பமடைந்தார். "என்ன சொல்கிறீர்கள்? 100 ஆண்டுகளில் மனித இனம் அசுர வளர்ச்சி அடைந்திருக்கும் என்று அல்லவா நாங்கள் நம்பி வந்தோம்?"

அந்தக் குரல் கசப்புடன் சிரித்தது. "வளர்ச்சிதான், ஆனால் அது அழிவை நோக்கிய வளர்ச்சி. நீங்கள் 2026-ல் பயன்படுத்தும் ஒவ்வொரு பிளாஸ்டிக் துண்டும், நீங்கள் காலி செய்யும் ஒவ்வொரு சொட்டு நிலத்தடி நீரும் இங்கே எங்களுக்குப் பெரும் சுமையாக மாறியிருக்கிறது. நீங்கள் அனுப்பிய செயற்கைக்கோள் குப்பைகளால் விண்வெளி நிரம்பிவிட்டது. இப்போது நாங்கள் சுவாசிக்கக் காசு கொடுத்து ஆக்சிஜன் சிலிண்டர் வாங்கிக் கொண்டிருக்கிறோம்."

குழுவினர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அந்தக் குரல் தொடர்ந்தது: "உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லவா? நீங்கள் இப்போது பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நீல நிறப் பூமி, இன்னும் 50 ஆண்டுகளில் சாம்பல் நிறமாகப் போகிறது. காடுகள் வெறும் புகைப்படங்களில் மட்டுமே இருக்கும். நீங்கள் ’தொழில்நுட்பம்’ என்று பெருமையாகப் பேசும் விஷயங்கள், எங்கள் காலத்துச் சுற்றுச்சூழலைச் சிதைத்துவிட்டன."

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் அரவிந்த்.

"திரும்பிச் செல்லுங்கள்! 2126-ஐப் பார்க்க ஆசைப்படுவதை விட, 2126-ல் ஒரு மனிதன் நிம்மதியாகச் சுவாசிக்க வழி செய்யுங்கள். உங்கள் காலத்து இயற்கையைச் சேமிப்பதுதான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் மிகப்பெரிய உதவி. இல்லையென்றால், நீங்கள் காண வரும் இந்த எதிர்காலம் ஒரு சுடுகாடாகத்தான் இருக்கும்."

திடீரெனத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விண்கலத்தின் கடிகாரம் மீண்டும் 2026-ஐக் காட்டியது. பூமியிலிருந்து கட்டுப்பாட்டு அறை கேட்டது, "அரவிந்த், எதிர்காலம் எப்படி இருக்கிறது? தகவல் அனுப்புங்கள்."

அரவிந்த் மௌனமாகத் திரையைப் பார்த்தார். பின் சொன்னார், "எதிர்காலம் நம் கையில் இருக்கிறது... ஆனால் அது இப்போது நாம் செய்யும் செயல்களில் மட்டுமே ஒளிந்திருக்கிறது. விண்கலத்தைத் திருப்புங்கள், நாம் செய்ய வேண்டிய வேலைகள் பூமியில் நிறைய இருக்கின்றன.



-லால்குடி
வெ.நாராயணன்

# திருவிளையாடல் புராணம் 28



சிவ.முத்து
லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## நாகம் எய்த படலம்

சொக்கநாதரின் அருளினால் அனந்தகுண பாண்டியன் மதுரையை அழிக்க வந்த நாகத்தை அழித்ததையும், அந்நாகத்தின் நஞ்சிலிருந்து மதுரை மக்கள் காப்பாற்றப்பட்டதையும் குறிப்பிடுகின்றது.

அனந்தகுண பாண்டியன் சொக்கநாதரின் மேல் மாறாத அன்பு கொண்டு மதுரையில் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்து வந்தான். மதுரை மக்களும் அனந்தகுண பாண்டினை பின்பற்றி சோமசுந்தரக் கடவுளிடம் பேரன்பு கொண்டவர்களாக விளங்கினர்.

அவனுடைய ஆட்சியில் சைவநெறி செழித்து விளங்கியது. இதனை அறிந்த சமண சமயக் குரவர்கள் சூழ்ச்சியால் அனந்தகுண பாண்டினையும், மதுரையையும் அழிக்க நினைத்தனர்.

ஆதலால் அவர்கள் ஒன்றுகூடி அபிசார வேள்வி (மரண வேள்வி) ஒன்றினைத் தொடங்கினர். அவ்வேள்வியின் இறுதியில் அவுணன் ஒருவன் தோன்றினான்.

அவ்வவுணன் சமணர்களிடம் “எனக்கு தாங்கள் இடும் கட்டளை யாது?” என்று வினவினான். சமணர்கள் அவனிடம் “நீ பெரிய நாகத்தின் வடிவில் சென்று அனந்தகுண பாண்டியனையும், அவனுடைய மதுரை மக்களையும் விழுக்கிவிடு” என்று கட்டளையிட்டனர்.

அவுணனும் பெரிய பாம்பின் வடிவில் அனல் தெறிக்கும் கண்களுடன் மதுரையை அழிக்க மதுரை நோக்கிப் புறப்பட்டான்.

மதுரை நகரின் புறத்தே வந்த நாகம் அங்கியிருந்தவர்களை விழுங்கத் தொடங்கியது. நாகத்தின் விசமூச்சுக் காற்றால் அவ்விடத்தில் இருந்த மரங்கள், பயிர்கள் எல்லாம் கருகின.

நாகத்தின் செயல்களை கவனித்த ஒற்றர்கள் அனந்தகுண பாண்டியனுக்கு நாகத்தின் வடிவத்தையும், செயலையும் தெரிவித்தனர்.

நாகம் பற்றி அறிந்த அனந்தகுண பாண்டியன் திருக்கோவிலை அடைந்து இறைவனை துதித்து தன்னையும் மதுரை மக்களையும் நாகத்திடமிருந்து காப்பாற்றுமாறு வேண்டினான்.

இறைவனாரும் பாம்பினை அழிக்க அனந்தகுண பாண்டியனிடம் நாகம் மீது அம்பு எய்யுமாறு திருவாய் மலர்ந்தருளினார். இறைவனின் ஆணையினை ஏற்று அனந்தகுண பாண்டியன் மதுரை நகரின் மேல்திசையில் நின்றிருந்த நாகத்தினிடம் சென்றான்.

இறைவனை தியானித்து நாகத்தினை நோக்கி அம்பு ஒன்றினை எய்தான். அனந்தகுண பாண்டியனின் அம்பு இறைவனின் திருவருளால் நாகத்தின் உடலினைக் கிழித்தது. நாகமானது நஞ்சினை உமிழ்ந்துவிட்டு மடிந்தது. நாகம் உமிழ்ந்த நஞ்சின் விசமானது மதுரை மக்களை மயக்க நிலைக்கு தள்ளியது.

மக்களின் நிலையை அறிந்த அனந்தகுண பாண்டியன் சொக்கநாதரின் சந்நிதியை அடைந்து “இறைவா, மதுரையை அழிக்க வந்த கடலினை வற்றச் செய்தீர்கள்.


கருக்கொண்ட மேகங்களின் பெருமழையிலிருந்து நான்கு மாடங்களை உருவாக்கி மதுரையைக் காத்தீர்கள். மதுரையை அழிக்க வந்த யானையினை அழித்தீர்கள்.

தற்போது நாகத்தின் நஞ்சினால் மயக்கமடைந்திருக்கும் மதுரை மக்களைக் காப்பாற்றுங்கள்” என்று வேண்டினான்.

அனந்தகுண பாண்டியனின் கூக்குரலைக் கேட்ட இறைவனார் தன்னுடைய சடையில் அணிந்திருந்த சந்திரனின் அமுதத்தினை மதுரையின் மீது சிந்தச் செய்தார்.

இறைவனார் சிந்திய அமுதமானது நாகத்தின் நஞ்சினை முறித்தது. மதுரை மக்கள் தூக்கத்திலிருந்து விழிப்பவர்கள் போல் எழுந்தனர்.

நாகம் வீழ்ந்த இடம் தற்போது நாகமலை என்று அழைக்கப்படுகிறது. தீயவர்களின் சூழ்ச்சியினை இறைவனின் திருவருளால் வீழ்த்தலாம் என்பதே நாகம் எய்த படலம் கூறும் கருத்தாகும்.



(தொடரும்)

78. கெங்கவல்லி (தனி) சுஜாதா
79. ஆத்தூர் (தனி) செல்வபாரதி
80. ஏற்காடு (பழங்குடி) ஜே.லெட்சுமி
81. ஓமலூர் அதியமான்
82. மேட்டூர் கே.செல்வம்
83. எடப்பாடி அருண்குமார்
84. தாராபுரம் (தனி) கௌரி சித்ரா
85. காங்கேயம் பி.மணி
86. பெருந்துறை அருணாச்சலம்
87. பவானி பாலகிருஷ்ணன்
88. அந்தியூர் விஜய் வெங்கடேஷ்
89. பவானிசாகர் (தனி) கலைச்செல்வி
90. உதகை இப்ராஹிம்
91. கூடலூர் (தனி) தீபக் சாய் கிஷோர்
92. குன்னூர் தங்கராஜு
93. மேட்டுப்பாளையம் சுனில்
94. அவிநாசி (தனி) கமலி
95. திருப்பூர் தெற்கு பாலமுருகன்
96. பல்லடம் ராம்குமார்
97. சூலூர் என்.எம்.சுகுமார்
98. கவுண்டம்பாளையம் கனிமொழி
99. கோவை வடக்கு சம்பத் குமார்
100. தொண்டாமுத்தூர் சதீஷ் ராஜு
101. கோவை தெற்கு செந்தில்குமார்
102. சிங்காநல்லூர் கிரி
103. கிணத்துக்கடவு விக்னேஷ்
104. பொள்ளாச்சி ஜி.ராம்நாதன்
105. உடுமலைப்பேட்டை சங்கர்
106. மடத்துக்குளம் திருமலை
107. பழனி பிரவீன்குமார்
108. ஒட்டன்சத்திரம் மோகன்
109. ஆத்தூர் கலைச்செல்வி
110. நிலக்கோட்டை (தனி) ஐயனார்
111. நத்தம் ரமேஷ்
112. திண்டுக்கல் நசீர்
113. வேடச்சந்தூர் நாகஜோதி
114. அரவக்குறிச்சி கார்த்திகேயன்
115. கரூர் மதியழகன்
116. கிருஷ்ணராயபுரம் (தனி) மதன்
117. குளித்தலை பாலசுப்பிரமணியம்
118. மணப்பாறை கதிரவன்
119. திருவரங்கம் ரமேஷ்
120. திருச்சி மேற்கு ராமமூர்த்தி
121. திருவெறும்பூர் நவல்பட்டு விஜி
122. மண்ணச்சநல்லூர் சரவணன்
123. முசிறி விக்னேஷ்
124. துறையூர் (தனி) ரவிசங்கர்
125. பெரம்பலூர் (தனி) சிவக்குமார்
126. குன்னம் ரேவதி
127. அரியலூர் சிவா
128. ஜெயங்கொண்டம் கவிதா
129. விருத்தாச்சலம் விஜய்
130. நெய்வேலி ஆனந்த்
131. பண்ருட்டி மணிகண்டன்
132. கடலூர் ராஜ்குமார்
133. குறிஞ்சிப்பாடி ராஜ்குமார்
134. புவனகிரி மகாலிங்கம்
135. சிதம்பரம் பாரி
136. காட்டுமன்னார்கோயில் (தனி) சீனிவாசன்
137. சீர்காழி (தனி) கோபிநாத்
138. மயிலாடுதுறை அருண் ரஷீத்
139. பூம்புகார் விஜயாலயன்
140. நாகப்பட்டினம் சுகுமார்
141. கீழ்வேளூர் (தனி) செந்தில் பாண்டியன்
142. வேதாரண்யம் கிங்க்ஸ்லி ஜெரால்ட்
143. திருத்துறைப்பூண்டி (தனி) பாண்டியன்
144. மன்னார்குடி ராஜராஜன்
145. திருவாரூர் வீரமணி
146. நன்னிலம் பிரபாகரன்
147. திருவிடைமருதூர் (தனி) பிரபாகரன்
148. கும்பகோணம் வினோத்
149. பாபநாசம் அசாரூதின்
150. திருவையாறு மணிகண்டன்
151. தஞ்சை சரவணன்
152. ஒரத்தநாடு அரவிந்த்
153. பட்டுக்கோட்டை மதன்
154. பேராவூரணி சந்திர காண்டீபன்
155. கந்தர்வக்கோட்டை (தனி) சுப்பிரமணியன்
156. விராலிமலை முருகேசன்
157. புதுக்கோட்டை ஷரிப்
158. திருமயம் சிந்தாமணி
159. ஆலங்குடி துறை கந்தசாமி
160. அறந்தாங்கி பர்வேஸ்
161. காரைக்குடி பிரபு
162. திருப்பத்தூர் ஸ்ரீனிவாச சேதுபதி
163. சிவகங்கை குழந்தை ராணி நாச்சியார்
164. மானாமதுரை (தனி) இளங்கோவன்
165. மேலூர் மதுரை வீரன்
166. மதுரை கிழக்கு கார்த்திகேயன்
167. சோழவந்தான் (தனி) கருப்பையா
168. மதுரை வடக்கு கல்லாணை
169. மதுரை தெற்கு பீட்டர்
170. மதுரை மத்தி முஸ்தபா
171. மதுரை மேற்கு தங்கப்பாண்டி
172. திருமங்கலம் சதீஸ்
173. உசிலம்பட்டி விஜய் மகாலிங்கம்
174. ஆண்டிப்பட்டி லெப்ட் பாண்டி
175. பெரியகுளம் (தனி) சபரி
176. போடி பிரகாஷ்
177. கம்பம் ஜெகந்நாத் மிஸ்ரா
178. ராஜபாளையம் ஜெகதீஸ்வரி
179. திருவில்லிபுத்தூர் கார்த்திக்
180. சாத்தூர் அஜித்
181. சிவகாசி கீர்த்தனா
182. விருதுநகர் செல்வம்
183. அருப்புக்கோட்டை கார்த்திக் குமார்
184. திருச்சுழி சமயன்
185. பரமக்குடி (தனி) கோபிநாதன்
186. திருவாடானை ராஜிவ்
187. ராமநாதபுரம் சாகுல் ஹமீது
188. முதுகுளத்தூர் மலர்விழி
189. விளாத்திக்குளம் காசிராம்
190. தூத்துக்குடி ஸ்ரீநாத்
191. திருச்செந்தூர் முருகன்
192. திருவைகுண்டம் சரவணம்
193. ஒட்டப்பிடாரம் (தனி) மதன் ராஜா
194. கோவில்பட்டி பாலசுப்பிரமணியன்
195. சங்கரன்கோவில் (தனி) ராமராஜன்
196. வாசுதேவநல்லூர் (தனி) அமுதராணி
197. கடையநல்லூர் ஜலீல்
198. தென்காசி ராஜபிரகாஷ்
199. ஆலங்குளம் விபின்
200. திருநெல்வேலி ஆர்.எஸ்.முருகன்
201. அம்பாசமுத்திரம் ராஜகோபால்
202. பாளையங்கோட்டை மரிய ஜாண்
203. நாங்குநேரி ரெட்டியார்பட்டி நாராயணன்
204. ராதாபுரம் சதீஷ் கிறிஸ்டோபர்
205. கன்னியாகுமரி மாதவன்
206. நாகர்கோவில் பெர்வின் கிங்ஸ்
207. குளைச்சல் பிரேம் அலெக்ஸ்
208. பத்மநாபபுரம் கிருஷ்ணகுமார்
209. விளவங்கோடு மைக்கேல்
210. கிள்ளியூர் சபின்
211. திருவண்ணாமலை அருள் ஆறுமுகம்
212. கீழ்பெண்ணாத்தூர் ராஜா
213. கலசப்பாக்கம் ஏழுமலை
214. போளூர் அபிஷேக்
215. ஆரணி வெங்கடேசன் குமார்
216. செய்யாறு மோகன்
217. வந்தவாசி (தனி) உதயகுமார்
218. செஞ்சி சந்திரசேகரன்
219. மயிலம் விஜய் நிரஞ்சன்
220. திண்டிவனம் (தனி) சக்திவேல்
221. வானூர் (தனி) சுரேஷ்
222. விழுப்புரம் மோகன்ராஜ்
223. சங்ககிரி செந்தில்குமார்
224. சேலம் மேற்கு லெட்சுமணன்
225. சேலம் வடக்கு சிவக்குமார்
226. சேலம் தெற்கு பார்த்திபன்
227. வீரபாண்டி பழனிவேல்
228. ராசிபுரம் (தனி) லோகேஷ் தனபால்
229. சேந்தமங்கலம் (பழங்குடி) சந்திரசேகர்
230. நாமக்கல் திலீப்
231. பரமத்திவேலூர் நந்தகுமார்
232. ஈரோடு கிழக்கு பாலாஜி
233. ஈரோடு மேற்கு ஆனந்த் மோகன்
234. மொடக்குறிச்சி சண்முகம்

### இன்று வேட்புமனு தாக்கல்

த.வெ.க. வேட்பாளர்கள் அனைவரும் இன்று ஒரேநாளில் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பெரம்பூர் தொகுதியில் போட்டியிடும் விஜயும் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

# எங்களுக்கும் ஸ்டாலினுக்கும் இடையே தான் போட்டி

## வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் விஜய் பேச்சு



சென்னை, மார்ச் 29

சட்டமன்ற தேர்தலில் எங்களுக்கும், ஸ்டாலினுக்கும் இடையே தான் போட்டி என்று விஜய் கூறினார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஓட்டலில் த.வெ.க. வேட்பாளர்கள் அறிமுகம் கூட்டம் நடைபெற்றது. வேட்பாளர்கள் அறிமுகத்திற்கு முன்னதாக வேட்பாளர்களாக தேர்வு செய்தவர்களை உறுதி மொழி ஏற்க வைத்தார்.

அதைத் தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இது வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் மட்டுமல்ல, இது மக்களுக்கான காப்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம். ஒரு எம்எல்ஏ எப்படி இருக்க வேண்டும் என்றால் அனுபவத்தை வைத்து கொள்ளை அடிப்பவர்களாக இருக்கக்கூடாது.

அனுபவத்தை வைத்துக்கொண்டு கேள்வி கேட்கும் நிருபரை அடிக்கும் எம்எல்ஏவாக இருக்கக்கூடாது. எம்எல்ஏ என்றால் அனுபவத்தை வைத்துக்கொண்டு கனிமவளங்களை கொள்ளை அடிப்பவர்களாக இருக்கக்கூடாது. எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் நானே நிற்க முடியாது என்பதால் என் சார்பில் வேட்பாளர்களை தேர்வு செய்துள்ளேன். களத்தில் மக்களோடு மக்களாக நிற்பவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளோம். ஒவ்வொரு வேட்பாளரையும் பார்த்து பார்த்து தேர்வு செய்துள்ளேன், அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. விஜய்க்கு என்ன செல்வாக்கு இருக்கிறது.

### இருமுனைப் போட்டி

கூட்டம் ஓட்டாக மாறுமா என பேசுகிறார்கள். நம்முடைய ஓட்டை சிந்தாமல் சிதறாமல் நம்முடைய தவெக விசில் சின்னத்திற்கு வாக்களிக்க செய்ய வேண்டும்.

இந்த தேர்தல் இருமுனைப் போட்டி மட்டும்தான். மக்கள் கூட்டணியான நமக்கும், ஸ்டாலின் கூட்டணிக்கும் இடையேதான் போட்டி. எனவே உங்கள் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் விசில் சின்னத்தில் வாக்களிப்பீர். இது பாமரர்களுக்கும், ஒரு அதிகார வர்க்கத்துக்கு சேவகம் செய்யும் அடிமைகளுக்கும் நடக்கும் தேர்தல். இது விஜய்க்கும், ஸ்டாலினுக்கும் இடையே நடக்கும் தேர்தல். இந்த தேர்தல் மன்னராட்சியில் இருந்து மக்களாட்சியை மீட்பதற்கான தேர்தல்.

உங்க வீட்ல இருக்குற ஒவ்வொருத்தரையும் ஏப்ரல் 23 ஆம் தேதி கூட்டிட்டு போயி ஓட்டு போடுங்க. வெளியூர்ல இருக்குறவங்க இப்போவே டிக்கெட் போட்ருங்க. இது ஒரு தலைமுறைக்கான தேர்தல். அத்தனை வசதிகளையும் துறந்துட்டு உங்களுக்கு நன்றிக்கடனைச் செலுத்த மட்டுமே வந்திருக்கேன். அத்தனை வலிகளையும் தாங்கிக்கிட்டு உங்களுக்காக வந்திருக்கேன். உங்க வீட்டுப் பிள்ளைக்கு ஒரு வாய்ப்பு கொடுங்க. யார் வேட்பாளரா இருந்தாலும் அது விஜய்னு நினைச்சு ஓட்டு போடுங்க. ஒரு நாளும் உங்களை பொய் சொல்லி ஏமாத்த மாட்டேன். மக்கள் விரோத ஸ்டாலின் சார் வேண்டுமா? மக்களை நேசிக்கிற விஜய் வேண்டுமா?”

இவ்வாறு விஜய் பேசினார்.

# தினம் ஒரு தலைவர்கள்: ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா வரலாறு

ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா (1 அக்டோபர் 1857 - 30 மார்ச் 1930) ஒரு இந்திய புரட்சிகர போராளி, ஒரு இந்திய தேசபக்தர், வழக்கறிஞர் மற்றும் பத்திரிகையாளர், அவர் லண்டனில் இந்திய ஹோம் ரூல் சொசைட்டி , இந்தியா ஹவுஸ் மற்றும் தி இந்திய சமூகவியலாளர் ஆகியவற்றை நிறுவினார். பல்லியோல் கல்லூரியில் பட்டம் பெற்ற கிருஷ்ண வர்மா, சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளில் குறிப்பிடத்தக்க அறிஞர் ஆவார். அவர் இந்தியாவில் ஒரு சுருக்கமான சட்ட வாழ்க்கையைத் தொடர்ந்தார் மற்றும் இந்தியாவில் பல இந்திய சமஸ்தானங்களின் திவானாக பணியாற்றினார். இருப்பினும், அவர் கிரீட அதிகாரத்துடன் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தார், ஜூனாகத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரிகளின் சதித்திட்டத்தைத் தொடர்ந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார் மற்றும் இங்கிலாந்துக்குத் திரும்பத் தேர்ந்தெடுத்தார். தயானந்த சரஸ்வதியின் கலாச்சார தேசியவாத அணுகுமுறையையும் ஹெர்பர்ட் ஸ்பென்சரையும் போற்றும் கிருஷ்ண வர்மா, ஸ்பென்சரின் "ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு வெறுமனே நியாயமானது அல்ல, ஆனால் கட்டாயமானது" என்ற கூற்றை நம்பினார்.

1905 ஆம் ஆண்டில், அவர் இந்தியா ஹவுஸ் மற்றும் தி இந்தியன் சோசியாலஜிஸ்ட் நிறுவனங்களை நிறுவினார் , இது அந்த நேரத்தில் பிரிட்டனில் இந்திய மாணவர்களிடையே தீவிர தேசியவாதிகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்பு இடமாகவும், இந்தியாவிற்கு வெளியே புரட்சிகர இந்திய தேசியவாதத்திற்கான மிக முக்கியமான மையங்களில் ஒன்றாகவும் வேகமாக வளர்ந்தது . கிருஷ்ண வர்மா 1907 இல் பாரிஸுக்கு குடிபெயர்ந்தார், வழக்குத் தொடரப்படுவதைத் தவிர்த்து.

ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, 1857 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி கட்ச் மாநிலத்தின் (இப்போது குஜராத்தின் கட்ச் ) மாண்ட்வியில் , பருத்தி ஆலை நிறுவனத்தில் தொழிலாளியாக இருந்த கிருஷ்ணதாஸ் பானுஷாலி (கர்சன் நகுவா; நகுவா என்பது குடும்பப்பெயர், பானுஷாலி என்பது சமூகப் பெயர்) மற்றும் ஷ்யாம்ஜிக்கு 11 வயதாக இருந்தபோது இறந்த கோமதிபாய் ஆகியோரின் மகனாக ஷாம்ஜியாகப் பிறந்தார். அவர் தனது பாட்டியால் வளர்க்கப்பட்டார். அவரது மூதாதையர்கள் பச்சுண்டா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள், இது தற்போது கட்ச் மாவட்டத்தின் அப்தாசா தாலுகாவில் உள்ளது. அவர்கள் வேலை தேடியும் குடும்பப் பூசல்கள் காரணமாகவும் மாண்ட்விக்கு குடிபெயர்ந்தனர். பூஜில் இடைநிலைக் கல்வியை முடித்த பிறகு , அவர் வில்சன் உயர்நிலைப் பள்ளியில் மேற்படிப்புக்காக மும்பை சென்றார் மும்பையில் இருந்தபோது, அவர் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொண்டார் .

1875 ஆம் ஆண்டில், அவர் பாட்டியா சமூகத்தைச் சேர்ந்த ஒரு பணக்கார தொழிலதிபரின் மகளும், தனது பள்ளி நண்பர் ராமதாஸின் சகோதரியுமான பானுமதியை மணந்தார். பின்னர் அவர் தேசியவாதியான சுவாமி தயானந்த சரஸ்வதியுடன் தொடர்பு கொண்டார், அவர் ஒரு சீர்திருத்தவாதியும் வேதங்களின் விரிவுரையாளருமான ஆர்ய சமாஜத்தை நிறுவினார் . அவர் அவரது சீடரானார், விரைவில் வேத தத்துவம் மற்றும் மதம் குறித்து விரிவுரைகளை நடத்தத் தொடங்கினார்.

1877 ஆம் ஆண்டு, ஒரு பொதுப் பேச்சுப் பயணம் அவருக்குப் பெரும் பொது அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. 1877 ஆம் ஆண்டு காசியின் பண்டிதர்களால் பண்டிட் என்ற மதிப்புமிக்க பட்டத்தைப் பெற்ற முதல் பிராமணரல்லாதவர் என்ற பெருமையைப் பெற்றார் .

அவர் ஆக்ஸ்போர்டு சமஸ்கிருதப் பேராசிரியரான மோனியர் வில்லியம்ஸின் கவனத்திற்கு வந்தார் , அவர் ஷ்யாம்ஜிக்கு உதவியாளராக வேலை வழங்கினார்.

ஷியாம்ஜி இங்கிலாந்து வந்து, பேராசிரியர் மோனியர் வில்லியம்ஸின் பரிந்துரையின் பேரில் , ஏப்ரல் 25, 1879 அன்று ஆக்ஸ்போர்டில் உள்ள பல்லியோல் கல்லூரியில் சேர்ந்தார். 1883 இல் இளங்கலைப் பட்டம் பெற்ற அவர், ராயல் ஆசியடிக் சொசைட்டியில் "இந்தியாவில் எழுத்தின் தோற்றம்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவை வழங்கினார் . இந்த உரை மிகவும் வரவேற்பைப் பெற்றது, மேலும் அவர் சங்கத்தின் ஒரு வெளிநாட்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1881 இல், அவர் பெர்லின் ஓரியண்டலிஸ்ட்களின் காங்கிரசில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் .

1885 ஆம் ஆண்டு இந்தியா திரும்பிய அவர் ஒரு வழக்கறிஞராகப் பயிற்சியைத் தொடங்கினார். பின்னர் ரத்லம் மாநில மன்னரால் திவான் (முதலமைச்சர்) ஆக நியமிக்கப்பட்டார் ; ஆனால் உடல்நலக் குறைவு காரணமாக அவர் இந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது பணிக்காக ரூ.32,052 மொத்தத் தொகையாக வழங்கப்பட்டது. மும்பையில் சிறிது காலம் தங்கிய பிறகு, அவர் தனது குரு சுவாமி தயானந்த சரஸ்வதியின் தலைமையகமான அஜ்மீரில் குடியேறினார் , மேலும் அஜ்மீரில் உள்ள பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் தனது பயிற்சியைத் தொடர்ந்தார்.






அவர் தனது வருமானத்தை மூன்று பருத்தி அச்சகங்களில் முதலீடு செய்து, வாழ்நாள் முழுவதும் சுதந்திரமாக இருக்க போதுமான நிரந்தர வருமானத்தைப் பெற்றார். 1893 முதல் 1895 வரை உதய்பூர் மகாராஜாவுக்கு கவுன்சில் உறுப்பினராகப் பணியாற்றினார், அதைத் தொடர்ந்து ஜூனகத் மாநிலத்தின் திவான் பதவியைப் பெற்றார் . இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் மீதான அவரது நம்பிக்கையை அசைத்த ஒரு பிரிட்டிஷ் முகவருடனான கசப்பான அனுபவத்திற்குப் பிறகு 1897 இல் அவர் ராஜினாமா செய்தார்.

சத்யார்த் பிரகாஷ் மற்றும் சுவாமி தயானந்த சரஸ்வதியின் பிற புத்தகங்களைப் படித்த ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, அவரது தத்துவம், எழுத்துக்கள் மற்றும் தேசியவாத உணர்வால் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவரது தீவிர ரசிகர்களில் ஒருவராக ஆனார். தயானந்தரின் உத்வேகத்தின் பேரில், இங்கிலாந்தில் இந்தியா ஹவுஸில் ஒரு தளத்தை அமைத்தார்.

இருப்பினும், காங்கிரஸ் கட்சியின் மனு அளித்தல், பிரார்த்தனை செய்தல், எதிர்ப்பு தெரிவித்தல், ஒத்துழைத்தல் மற்றும் ஒத்துழைப்பு கொள்கையை அவர் நிராகரித்தார், இது அவமானகரமானது மற்றும் வெட்கக்கேடானது என்று அவர் கருதினார். 1890 ஆம் ஆண்டு ஒப்புதல் மசோதா சர்ச்சையின் போது ஷ்யாம்ஜி கிருஷ்ணா லோகமான்ய திலகரை ஆதரித்தார். 1897 ஆம் ஆண்டில், பூனாவில் பிளேக் நெருக்கடியின் போது பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து , சபேகர் சகோதரர்களால் பிளேக் ஆணையர் படுகொலை செய்யப்பட்டதை அவர் ஆதரித்தார், ஆனால் விரைவில் அவர் இந்திய சுதந்திரத்திற்காக பிரிட்டனுக்குள் போராட முடிவு செய்தார்.

ஆர்ய சமாஜத்தின் நிறுவனர் சுவாமி தயானந்த சரஸ்வதியால் திருநிலைப்படுத்தப்பட்ட ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, லண்டனுக்கு வந்தவுடன் இன்னர் டெம்பிளில் தங்கி, ஓய்வு நேரத்தில் ஹெர்பர்ட் ஸ்பென்சரின் எழுத்துக்களைப் படித்தார் . 1900 ஆம் ஆண்டில், ஹைகேட்டில் ஒரு விலையுயர்ந்த வீட்டை வாங்கினார் .

ஸ்பென்சரின் எழுத்துக்களால் அவர் ஈர்க்கப்பட்டார். 1903 ஆம் ஆண்டு ஸ்பென்சரின் இறுதிச் சடங்கில், அவருக்கும் அவரது பணிக்கும் அஞ்சலி செலுத்தும் விதமாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவியை நிறுவ £1,000 நன்கொடை அளிப்பதாக அறிவித்தார் .

ஒரு வருடம் கழித்து, இந்திய பட்டதாரிகள் இங்கிலாந்தில் தங்கள் கல்வியை முடிக்க ஹெர்பர்ட் ஸ்பென்சர் இந்திய உதவித்தொகை தலா ரூ.2,000 வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார். ஆர்ய சமாஜத்தின் நிறுவனர் மறைந்த தயானந்த சரஸ்வதியின் நினைவாக கூடுதல் உதவித்தொகையையும் , எதிர்காலத்தில் மேலும் நான்கு உதவித்தொகைகளையும் அவர் அறிவித்தார்.

1922 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அவர் இந்திய சமூகவியலாளர் இதழின் மேலும் இரண்டு இதழ்களை வெளியிட்டார் , ஆனால் உடல்நலக்குறைவு அவரைத் தொடர்ந்து பணியாற்றத் தடுக்கும் முன். 1930 மார்ச் 30 அன்று இரவு 11:30 மணிக்கு மருத்துவமனையில் இறந்தார், அவரது மனைவி பானுமதி கிருஷ்ணவர்மாவை விட்டுச் சென்றார். அவரது மரணச் செய்தியை இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் மறைத்தது. ஆயினும்கூட, பகத் சிங் மற்றும் லாகூர் சிறையில் நீண்ட கால விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பிற கைதிகள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். பால கங்காதர திலகர் தொடங்கிய மராத்தா என்ற ஆங்கில நாளிதழ் அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

ஜெனீவா மற்றும் செயிண்ட் ஜார்ஜ் கல்லறையின் உள்ளூர் அரசாங்கத்துடன் தனது மற்றும் அவரது மனைவியின் அஸ்தியை 100 ஆண்டுகள் கல்லறையில் பாதுகாக்கவும், அந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் அடையும் போதெல்லாம் அவர்களின் அஸ்திகளை இந்தியாவுக்கு அனுப்பவும் அவர் முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாரிஸை தளமாகக் கொண்ட அறிஞர் டாக்டர் பிருத்விந்திர முகர்ஜியின் வேண்டுகோளின் பேரில், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அஸ்தியை திருப்பி அனுப்ப ஒப்புக்கொண்டார். இறுதியாக, ஆகஸ்ட் 22, 2003 அன்று, ஷியாம்ஜி மற்றும் அவரது மனைவி பானுமதியின் அஸ்தி கலசங்கள், இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு 55 ஆண்டுகளுக்குப் பிறகு வில்லே டி ஜெனீவ் மற்றும் சுவிஸ் அரசாங்கத்தால் அப்போதைய குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியிடம் ஒப்படைக்கப்பட்டன . அவை மும்பைக்கு கொண்டு வரப்பட்டு, குஜராத் முழுவதும் நீண்ட ஊர்வலத்திற்குப் பிறகு, அவை அவரது பிறந்த இடமான மாண்ட்வியை அடைந்தன. அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கிராந்தி தீர்த்தம் என்ற நினைவுச்சின்னம் 2010 இல் மாண்ட்விக்கு அருகில் கட்டப்பட்டு திறக்கப்பட்டது . 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த நினைவுச்சின்ன வளாகத்தில் ஹைகேட்டில் உள்ள இந்தியா ஹவுஸ் கட்டிடத்தின் பிரதி மற்றும் ஷாம்ஜி கிருஷ்ண வர்மா மற்றும் அவரது மனைவியின் சிலைகள் உள்ளன. கிருஷ்ண வர்மாவின் அஸ்தி, அவரது மனைவியின் அஸ்தி மற்றும் இந்திய சுதந்திர இயக்கத்தின் முந்தைய ஆர்வலர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு காட்சியகம் ஆகியவற்றைக் கொண்ட கலசங்கள் நினைவுச்சின்னத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ண வர்மா 1909 இல் உள் கோயிலில் இருந்து விலக்கப்பட்டார். இந்த முடிவு 2015 இல் மறுபரிசீலனை செய்யப்பட்டது, மேலும் அவரை மரணத்திற்குப் பின் மீண்டும் பணியில் அமர்த்த ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

1970களில், அவரது சொந்த மாநிலமான கட்ச்சில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய நகரத்திற்கு, அவரது நினைவாகவும் மரியாதையாகவும் ஷியாம்ஜி கிருஷ்ணா வர்மநகர் என்று பெயரிடப்பட்டது .

இந்திய அஞ்சல் துறை அவரை நினைவுகூரும் வகையில் அஞ்சல் தலைகள் மற்றும் முதல் நாள் அட்டையை வெளியிட்டது. குச் பல்கலைக்கழகம் அவரது நினைவாக மறுபெயரிடப்பட்டது.

இந்திய அஞ்சல் துறை 1989 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவின் நினைவாக ஒரு அஞ்சல் முத்திரையை வெளியிட்டது.

# ரூ.50 கோடி வசூலைத் தாண்டிய 'யூத்'!



அசுரன், விடுதலை 2, வாத்தி போன்ற திரைப்படங்களில் நடிகராகவும், தனுஷிடம் உதவி இயக்குநராகவும் பணியாற்றிவர் கென் கருணாஸ். தற்போது யூத் படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார். இப்படத்தை அவரே எழுதி, இயக்கியுள்ளார்.

படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். இதில் அனிஷ்மா அனில்குமார், சூரஜ் வெஞ்சரமூடு, தேவதர்ஷினி, பிரியன்ஷி யாதவ் போன்றோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கல்லூரி மாணவர்களின் வாழ்க்கை, கல்லூரியின்போது ஏற்படும் காதல், நட்பு போன்றவற்றை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுவருகிறது.

இந்நிலையில் மார்ச் 19ஆம் தேதி வெளியான இப்படம் தற்போதுவரை ரூ.50 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.



பாண்டியன் ஸ்டோர்ஸ் 2ல் தற்போது சரவணனின் புது காதலி அஞ்சலி ரோலில் நடிக்க தொடங்கி இருப்பவர் ஷத்திகா. இந்த கதாபாத்திரத்தால் தான் அடுத்து கதையில் பல சிக்கல்கள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடிகை ஷத்திகா தற்போது ட்ரெண்டி உடையில் மொட்டைமாடியில் எடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# ஜி.வி. பிரகாஷை கட்டிப்பிடித்து அழுத ரசிகை

ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் கடந்த 27-ந்தேதி திரைக்கு வந்த படம் 'ஹேப்பி ராஜ்'. படம் திரைக்கு வந்து நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து படத்தின் புரமோசன்களுக்காக பட குழுவினர் தியேட்டர்களுக்கு சென்று வருகின்றனர்.

அந்த வகையில் சென்னையில் உள்ள தியேட்டரில் ரசிகர்களை ஜி.வி.பிரகாஷ் மற்றும் பட குழுவினர் சந்தித்தனர். அப்போது ரசிகை ஒருவர் அழுது கொண்டே வந்து ஜி.வி.பிரகாசை கட்டிப்பிடித்து பாராட்டினார்.

மேலும் அந்த ரசிகை படத்தை பாராட்ட வார்த்தைகள் இல்லை. எனக்கு மிகவும் பிடித்துள்ளது. எல்லோரும் அவரவர் அப்பாவை இருக்கும் போதே மதிக்க கற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் இல்லாத போது படையல் போட்டு எந்தப் பயனும் இல்லை. பெண் குழந்தைகள் பிறந்ததிலிருந்தே அப்பாக்களுடன் நன்கு ஒன்றிக்கொள்வார்கள். ஆனால் ஆண் மகன்கள் மிகவும் எளிதாக அப்பாக்களை புரிந்து கொள்வதில்லை என பேசினார். ரசிகையின் பேச்சு அடங்கிய வீடியோவை தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்தார் ஜிவி பிரகாஷ்.

இந்த வாழ்த்துக்களும் வார்த்தைகளும் போதும் சகோதரி. இவை 1000 விருதுகளுக்கு சமம் என நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.



# மனிதன் தெய்வமாகலாம் படத்தின் புது அப்டேட் வெளியீடு




இயக்குநர் டென்னிஸ் மஞ்சுநாத் இயக்கத்தில் 'மனிதன் தெய்வமாகலாம்' என்ற படத்தில் செல்வராகவன் நடித்து வருகிறார். விஜயா சதீஷ் இந்தப் படத்தை தயாரிக்கிறார். இந்தப் படத்தில் குஷி ரவி, வை.ஜி. மகேந்திரன், மைம் கோபி, கௌசல்யா, சதீஷ், லிர்திகா, என். ஜோதி கண்ணன் உள்ளிட்ட பலர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்தப் படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. 'மனிதன் தெய்வமாகலாம்' திரைப்படம் ஏப்ரல் 10-ஆம் தேதி வெளியாகிறது. முன்னதாக இந்தப் படத்தின் "தங்க ரத்தினமே" பாடல் வீடியோ வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் பாடலின் வரிகளை மு வி எழுதி இருந்தார். இந்தப் படத்திற்கு ஏ.கே. ப்ரியன் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், மனிதன் தெய்வமாகலாம் படத்தின் அடுத்த பாடல், 'கலங்காதே ராசாவே' மியூசிக் வீடியோ நாளை வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இதுகுறித்து வெளியாகி இருக்கும் போஸ்டரில் இந்தப் பாடலின் மியூசிக் வீடியோ நாளை (மார்ச் 30) மாலை 5 மணிக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதன் தெய்வமாகலாம் படத்திற்கு ஒளிப்பதிவு பணிகளை ரவி வர்மா மேற்கொள்ள, தீபக் எஸ் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார். இந்தப் படத்திற்கு பாக்கியராஜ் வெள்ளையன் கலை இயக்க பணிகளை மேற்கொண்டுள்ளார்.

நடிகை நிதி அகர்வால் தெலுங்கு மற்றும் தமிழ் சினிமாவில் முக்கிய நடிகைகளில் ஒருவர். தாராள கவர்ச்சியாக படங்களில் தோன்றி அவர் ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வருகிறார்.

சமீபத்தில் அவர் பிரபாஸ் உடன் ராஜாசாப் என்ற படத்தில் நடித்திருந்தார். அந்த படத்திற்கு சரியான வரவேற்பு கிடைக்கவில்லை.

இந்நிலையில் நிதி அகர்வால் சேலையில் செம ஹாட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.



# 1300 பேரில் ஒரே தேர்வு... சாரா அர்ஜுனின் அதிரடி எழுச்சி

'துரந்தர்' படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்காக கிட்டத்தட்ட 1300 பேரிடம் ஆடிஷன் நடத்தப்பட்டது. கடும் போட்டியில் இறுதியாக தேர்வு செய்யப்பட்டவர் சாரா அர்ஜுன்.

ரன்வீர் சிங் நடிப்பில் வெளியான இந்த படம், சாராவின் சினிமா வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்துள்ளது. ஆதித்யா தார் இயக்கத்தில் உருவான இப்படத்தில், சாரா அர்ஜுனின் நடிப்புத் திறமைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையை வீணாக்காமல், தனது கதாபாத்திரத்தை உணர்ச்சியோடு வெளிப்படுத்தி பாராட்டுகளை குவித்துள்ளார் சாரா.

தெய்வ திருமகள் படத்தில் விக்ரமுடன் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்த சாரா, தனது இயல்பான நடிப்பால் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார். அந்த சிறுமி இன்று ஹீரோயினாக மாறி, பெரிய திரையில் தனது திறமையை மீண்டும் நிரூபித்து வருவது ஆச்சரியமும் பெருமையும் தருகிறது.

'துரந்தர்' படத்தின் 2 பாகங்களும் வெளியாகி, ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், சர்வதேச அளவில் ஆயிரம் கோடிக்கு மேல் வசூல் சாதனை படைத்துள்ளது. இதன் மூலம் சாரா அர்ஜுன், தனது இரண்டாவது இன்னிங்சை மிக வலுவாக தொடங்கியுள்ளார்.

ஒன்றரை வயதில் விளம்பர படங்களில் தனது பயணத்தை தொடங்கிய சாரா அர்ஜுன், இன்று 20 வயதில் கதாநாயகியாக உயர்ந்து, இந்திய திரையுலகமே திரும்பிப் பார்க்கும் நடிகையாக வளர்ந்துள்ளார்.

# லீடர் படத்தின் ஆக்‌ஷன் டிரெய்லர் வெளியீடு



லீடர் திரைப்படத்திற்கு தணிக்கை குழு யு/ஏ சான்றளித்துள்ளது. லீடர் திரைப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்த நிலையில், லீடர் திரைப்படத்தின் ஆக்‌ஷன் டிரெய்லர் வெளியாகி இருக்கிறது. இதில் "லீடர்" திரைப்படம் உச்சக்கட்ட ஆக்‌ஷன் காட்சிகள் மற்றும் அப்பா, மகள் உறவு முறை பற்றி பேசும் கதையம்சம் கொண்டிருக்கும் என்று தெரிகிறது.

சென்னையில் இன்று (மார்ச் 29) நடைபெற்ற லீடர் திரைப்படத்தின் இசை வெளியீடு மற்றும் பிரீ ரிலீஸ் நிகழ்ச்சியில் படத்தின் ஆக்‌ஷன் டிரெய்லர் வெளியிடப்பட்டது. ஏற்கனவே இந்தப் படத்தின் டைட்டில் டீசர், டீசர் உள்ளிட்டவை ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், ஆக்‌ஷன் டிரெய்லர் வெளியாகி படத்திற்கான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.







**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

**WANTED**

Site Supervisor required for construction work in Ambattur



Contact:

8428872887










தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE









### சுவடிருந்தும் சுவடில்லார்

அடுத்தவீட்டுக் குழந்தையழும் குரலைக் கேட்டும்
அவலத்தில் அண்டைவீட்டார் வாடக்கண்டும்
உடுப்பதற்குத் துணியில்லா வறுமை கண்டும்
உலைகொதிக்காப் பட்டினியில் உழலக்கண்டும்
கொடுப்பதற்குப் பொருளிருந்தும் நெஞ்சமின்றிக்
கொடுங்கோலர் போலவாழும் நேய மில்லார்
எடுத்தயிந்த பிறவிதன்னில் வாழ்ந்திருந்தும்
எச்சுவடும் பதிக்காத வாழாதாரே !

கண்ணெதிரே தவறுகளைச் செய்யக்கண்டும்
கணக்கின்றிப் பிறர்பொருளைச் சுருட்டக் கண்டும்
உண்மையினை நேர்மையினை மிதிக்கக்கண்டும்
உழைப்பவரை ஏமாற்றி உயர்வோர் கண்டும்
எண்ணத்தில் ஒருசிறிதும் நினைத்திடாமல்
எக்கேடு கெட்டாலும் நமக்கேன் என்றே
மண்மீது வாழ்கின்ற கோழையர்கள்
மடிந்தவரே யன்றியுயிர் வாழாதாரே !

தன்மொழியின் பற்றின்றித் தமிழனென்று
தமிழகத்தில் வாழ்வோரை நாளும் கண்டும்
தன்மொழியை இழிவாகத் தமிழன் பேசித்
தறுதலையாய்ப் பிறர்காலில் வீழக்கண்டும்
தன்மானம் இல்லாத தமிழனாகத்
தடுத்தவரைத் திருத்தாத பேடியாக
இன்றிங்கே இருக்கின்ற தமிழரெல்லாம்
இருந்துமுயிர் இல்லாத பிணம்போன்றோரே !




பாவலர் கருமலைத்தமிழாழன்



### சண்டிக் குதிரை

உன்னைப் புறந்தள்ளி விட்டு
அடிக்கடி என் கனவில்
தமிழ்நாடு இ செய்தித்தாள்
வருவது எனக்கே சிறிதும்
நம்ப இயலாத வியப்புதான்!
ஆனால் இந்தச் செய்தி
உனக்குத்தெரியாமலிருப்பது
எனக்கு மட்டுமல்ல நம்
கா த லு க் கே நல்லதுதான்!
போனி டெய்ல் அழகி நீ!
சண்டிக்குதிரையென்றால்
என்ன மாமா என்று நீ
வினவும் போது
உன்னைப் பற்றி உன்னிடமே
நான் என்ன விவரம் சொல்ல
முடியும்?! கேட்ட கேள்விக்குப்
பதில் சொல்லாமலிருப்பது
நாகரிகம் அல்ல என்பதால்
உனக்கு விளக்கம்
சொல்கிறேன்!
என்ன அதிசயம் நீ உன்
அகந்தையிலிருந்து
இறங்கிப் போகிறாய்
அதிலும் கிறங்கிப் போகிறாய்!
இனி நம் கா த ல்
அதன் வேலையைக்காட்டாமல்
அமைதியாக இருந்து விட
இயலுமா என்ன?!

முத்து ஆனந்த் வேலூர்



### ஆச்சர்யம்

ராட்சத பலூனை
ஆச்சர்யமாய்ப் பார்த்தார்
பலூன் வியாபாரி!

### மலரம்புப் படுக்கை

அம்பா சிகண்டியை
முன்னிறுத்தி பீஷ்மரை
அம்புப் படுக்கையில்
வீழ்த்திய
அர்ஜுனன்போல் எனை
மலரம்புப் படுக்கையில்
வீழ்த்திவிட்டான்...
அந்த மன்மதன்
உன்னை முன்னிறுத்தி!

### ஓர் முத்தம்

ஈருடல் ஒருயிராய்
மட்டுமல்ல... ஈரிதழ் ஓர்
முத்தமாகவும் வாழ்வோம் வா!

### இயலாமை

ஒருபோதும் ரகசியமாய்
அழ முடிவதில்லை வானம்...
மழை!

### மேல்நோக்கிப் பாயும் நீர்

நீர் எப்போதும்
கீழ்நோக்கித்தான் பாயுமென்று
யார் சொன்னது
மேல்நோக்கியும் பாயும்...
நீராவி!

### எதிர்பார்ப்பு

ஹார்ட்டின் அனுப்பி
டைமண்ட் கேட்டாள்
என்னவள்!



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்



அன்பான குடும்பம்
அமைத்தாலே போதுமடா
ஆனந்தம் பெருக்கும்
ஆறாக ஆகுமடா

அன்பின் பிணைப்பில்
ஆறுதல் அமையுமடா
உள்ளக் கிடங்கில்
கள்ளம் தவிர்க்குமடா

இன்பம் பெருக்கும்
இல்லறம் அமையுமடா
எழிலை வளர்க்கும்
ஓவியம் ஆகுமடா

இருவர் தனித்து
இயங்குதல் போதுமடா
இறைவனின் அருளில்
இமைகளும் மூடுதடா

அனைவரை அணைத்து
ஆறுதல் அமைத்திடடா
இன்பமிது ஊற்றே
அன்பின் இலக்கணமடா..

பானுமதி நாச்சியார்
சிவகிரி



### பச்சை நிலம் !

பச்சை நிலம் முன்பெல்லாம் இருந்தது
பச்சை நிலம் இன்று இங்கு பறிபோனது !

வீட்டடி மனைகளாக்கிப் பணம் சேர்த்தனர்
விளை நிலங்களை விடுகளாக்கி மகிழ்ந்தனர் !

எரிவாயு குழாய் பதிக்க நிலம் அபகரித்தனர்
எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தனர் !

மீத்தேன் எடுக்க என்று நிலம் பறித்தனர்
மீளமுடியாத சோகத்தை மக்களுக்குத் தந்தனர்!

ஆபத்தான அணு உலைகளை வைத்தனர்
அடுக்கடுக்காக எண்ணிக்கையை உயர்த்தினர்!

நவீன மருத்துவமனைக்கும் மட்டும் இங்கு
நிலம் இல்லை என்று வேறு மாநிலம் போனது !

குளிர்பான நிறுவனங்கள் எல்லாம் ஆற்று நீரை
கொள்ளையடிக்க அனுமதி வழங்கினர்!

சோலை வனங்களை பாலைவனம் ஆக்கினர்
சோர்வில் உழவனை நிலை குலைய வைத்தனர் !

பச்சையம் எல்லாம் பறிபோனது நிலத்தில்
பாலைவனத்திலும் மோசமானது நிலம் !

வெடிப்புகள் வெடித்து தரிசாகப் போனது நிலம்
வெறுப்புடன் உயிர் மாயத்தனர் உழவர்கள் !

கண்ணும் எட்டும் தூரம் வரை பச்சை அன்று
கண்ணும் எட்டும் தூரம் வரை வறட்சி இன்று !

சாலை போடுவதாகச் சொல்லிச் சாய்த்தனர்
ஆலை அமைக்க என்று சாய்த்தனர் மரங்களை !

பச்சை நிலம் நேரடியாகக் கண்டோம் அன்று
பச்சை நிலம் படத்தில் காண்போம் இன்று !

கவிஞர் இரா .இரவி !

### ஐம்புலன்!

எழுசீர் மண்டிலம்.

பார்த்தல் கேட்டல்
நுகர்தல் சுவைத்தல்
பாங்காய்த் தொடுதல்
ஐந்தும் நேர்ந்த ஐந்து
புலன்கள் அறிவோம்
நுவல்வோம் நாமே
தெரிவோம்! சேர்ந்த ஐந்து
செம்மை யாக சீராய் உடலில்
காணும் தேர்ந்த உறுப்பு
தெளிவாய்க் காணின்
தீதில் இன்பங்கிட்டும்!

அறிவு கல்வி இரண்டும்
ஐந்து புலனில் தொடர்பு
காணும் கருவின் முதலாய்க்
கண்கள் திறந்து
காட்டும் மேலும் வளரும்!
திருவாய் ஐந்து
புலனும்
உணர்ந்து
தேர்ந்த
நன்மை புரியும்
உருவாய்
உணர்வாய்
உயர்வாய்
நலமாய்
ஓங்கி நன்மை புரியும்!



முனைவர்
இராம.வேதநாயகம்.

### வாழ்க்கை வாழ்வதற்கே

உலக வாழ்வு என்பது சுமையல்ல,
இனிமையாக வாழ கிடைத்த வாய்ப்பு
ஒவ்வொரு புதிய நாளும் ஒரு புதிய வாய்ப்பு கிட்டியது
மனம் தேடும் வாழ்க தினம் கிடைத்தால் அதுவே நல்ல வாழ்வு
ஏமாற்றங்கள் கூட சில பாதைகளை காட்டும்
துயரங்கள் கூட நம்மை தாலாட்டி உறங்க வைக்கலாம்
சின்ன புன்னகையில் பெரிய மகிழ்ச்சி கிட்டலாம்
கனவெல்லாம் நினைவானால் வசந்தமே
நல்லதை நினைத்து நடக்க நல்லதே நடக்கும்
வாழ்வு என்பது உலகத்தில் வாழ்வதற்கு தானே
தவிர சோர்ந்து துவண்டு போக அல்ல....



உஷா முத்துராமன்



### "வியர்வையே வெற்றியின் சூத்திரம்"

வெய்யோன் வெம்மையில்
வேரூன்றும் உழைப்பினில்...
வியர்வைத் துளியில்
விதை நட்டு வளர்த்திடில்...

மெய்யான முயற்சி
மேன்மையை விளைச்சல்
நெற்றியின் ஊற்றில்
வெற்றியின் அறுவடை!

தோல்வி தடுப்பினும்
தளராத மனத்தினால்,
தூய முயற்சிகள்
தொடர்ந்து செழித்திடில்...

உழைத்தவன் பாதையில்
ஒளி பிறக்கும்
உலகம் வணங்கிடும்
உயர்ந்த பெருமையாய்....

வியர்வையே சூத்திரம்
என்பதோர்
உண்மையை,
விழிப்புணர் வாக்கிட
வழிப்பாதை
செழிப்பாகும்!



முகில் தினகரன்
கோயமுத்தூர்







## நூல் விமர்சனம்

நூலின் பெயர்: பேரன்பின் சுகந்தம்
"Writers Cafe எழுத்தாளர் சங்கமம் " எழுத்தாளர்களின் 20 சிறுகதைகள்
வெளியீடு: குவிகம் பதிப்பகம்
விலை : ₹180தொடர்புக்கு: 8939604745/9791069435

*1. கனவு மெய்ப்படவேண்டும் - சுஸ்ரீசினிமாவில் நடிகனாகும் கனவோடு வந்த சுந்தரம் தான் தன் பெண்ணை கேலி செய்தவன் என நினைத்து, அலமேலுவின் அப்பா அவனை அடித்து விடுகிறார். அதன் பின்னர் சுந்தரம்- அலமேலு இருவரும் காதலில் விழ, திருமணம் நடந்ததும் சின்னச் சின்ன சினிமா வேலைகள் போதாது என ஒரு வக்கீலிடம் வேலைக்கு சேர்கிறார். அவர் காலத்தில் நிறைவேறாத ஆசை, நடிகர் உபேந்திரா மூலம் அவர் மகன் சிவராமன் காலத்திலேனும் நிறைவேறியதா?*

*06. சுபாஷும் காந்தியும் - அனுராதா ஜெய்ஷங்கர் காந்திக்கும் நேதாஜிக்கும் என்ன வித்தியாசம்? அடிபணியாதே என்றால் காந்தி அடி, பணியாதே என்றால் அது நேதாஜி என பட்டிமன்ற பேச்சாளர் ராஜாராம் சொன்னது நினைவிற்கு வந்தது.*

*இக்கதையில் தவறுகளைத் தட்டிக் கேட்கும் சுபாஷ் காதலி நிலாவுக்காக அடிதடியை கைவிட்டு காந்தியாக நினைக்கிறான். அவர்கள் காதல் கை கூடியதா?*

*09. கொலுசு - தி.வள்ளி எப்போதோ வாங்கிய கொலுசை டிரங்குப் பெட்டியில் வைத்து பாதுகாக்கும் மாமியாரைக் கண்டு தனம் எரிச்சலாகிறாள். ஆனால் அவள் மாமியார் பார்வை இழந்தாலும் பேரனின் மீதான பாசத்தை விடவில்லை . அந்தக் கொலுசின் ஓசை தான் பேரனையும் காப்பாற்ற உதவியது எப்படி?*

*19. காவேரி ஓரம், கதை சொன்னகாதல் - விஜி ஆர் கிருஷ்ணன்*

*சாதி அந்தஸ்தை காரணம் காட்டி தங்கள் காதலைப் பிரித்த தந்தையோடு பேசுவதை நிறுத்தி விடுகிறான் இளங்கோ. தந்தையின் மறைவிற்கு பிறகு காதலி ரோகிணியை அம்மா மனைவி பவானியிடம் சொல்லி 2 வதாக திருமணம் செய்ய நினைக்கிறான். அதற்கு ரோகிணி சொன்ன பதில் என்ன?*

*20. பேரன்பின் சுகந்தம் - விஜி சம்பத்*

*தன் அண்ணி கல்பனாவை மதுமிதாவின் அம்மா கேட்ட ஒரு கேள்வியால் அவளோடு திருமணமே வேண்டாம் என்கிறான் பிரகாஷ், அண்ணி சொன்ன சமாதானத்தால் திருமணம் நடந்ததா?*

*இதில் ஒரிரு வரைத் தவிர பலரும் எனக்கு முகநூலில் நட்பானவர்களே*

*வாழ்த்துகள்! அனை வருக்கும்....*

ஸ்ரீகாந்த் திருச்சி

### ஊனமுற்றோரையே ஓர்!

நேரிசை வெண்பா!

உறுப்பிலே ஊனம்
உணர்விலே இல்லை!

சிறப்பாய்ப்பணிகள்
செழிப்பாய்... அறிந்திடுவார்!

ஆனமட்டும் அன்னாரை
ஏளனம் செய்யாமல்

ஊனமுற்றோரையே ஓர்!

உடலிலே ஊனம்
இருக்கும்; மனத்தில்

திடமே இருக்கும்
தெளிவும்... படைக்குமே!

தேனிசையாய்த்
தேர்ந்தேதான்
தூய மனத்துடன்

ஊனமுற்றோரையே ஓர்!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



### தென் கிழக்கு பருவமழை

C/o கடவுளின் சொந்த நாடு
வெளியே 'சோ' வென
பொழிய விட்டு
சொகுசாக கதவை மூடி
இல்லத்தில் தங்கி
சன்னல் வழியே
வேடிக்கை பார்த்து
ஆகாய கங்கையை
அவமதிக்கும் போதிலும்
வீதியில் நடக்கையில்
கறுப்புக் கொடி (குடை)
காட்டி கண்டனம் தெரிவித்து
மேனி நனையாமல்
கன மழையை வன்மையாய்
கண்டித்தாலும் –
மரத்தடி, பேருந்து நிழற்குடை,
கட்டிடங்களின் சுற்றுச்சுவர்,
மூடிய பள்ளிகளில்
தஞ்சம் அடைந்து
ஆலங்கட்டி மழையை
வஞ்சம் தீர்த்திடினும் –
கிரிக்கெட் ஸ்டேடியங்களில்
'பிச்' களை மூடி மூடிதிறந்து,
20–20 பந்தய முடிவுகளை
டக்வொர்த்–லூயிஸ் முறையில்
நிர்ணயிப்பதால்
இடைவிடாமழையை
குடையேந்தி சபிக்கையிலும்
அழையா விருந்தாளியாக
வீட்டிற்குள் நுழைந்து
அட்டகாசம் செய்யும்
மழை நீரை பம்ப் செய்து
பாம்பு–தேள்களுடன்
வெளியேற்றி பரிதவிக்கும்
தருவாயில் மாமழையை
மன்னிக்காவிடினும் –
அடிக்கடி மூன்று நாட்கள்
தொடர்ந்து பெய்து
பள்ளி கல்லூரிகளை
விடுமுறை அறிவிக்கச் செய்து
பாடங்களை நிறைவுச் செய்யா
பரிதாப நிலைக்கு
தள்ளுவதால்
மழைத்துளிகளையும்
இடி, மின்னல், வானவில்
இத்யாதிகளை எதிர்க்கும்
நிலையிலும் நம்
எதிர்ப்பலைகளால்
சிறிதும் நனையாமல்
மாமழை என்னும் மாரி
ஒவ்வோர் ஆண்டும்
ஜூன் முதல் வாரத்தில்
கடவுளின் சொந்த நாட்டில்
அவதரித்து 'தென்கிழக்கு
பருவ மழை' என்னும்
பெயரைத்தாங்கிய வண்ணம்
பொழிகிறதன்றோ?

முனைவர் வே.புகழேந்தி,
பெங்களூர்.


### மதி!

எழுசீர் மண்டிலம்.

மதியின் நுட்பம்
மாண்பா யமைந்தால்
மண்ணை வெல்ல முடியும்!
இதய மிஃதை
இனிதா யேற்றால்
எந்தச் செயலும் முடியும்!
விதியை மதியால்
வெல்லக் கூடும்
வெற்றி தானும் கிட்டும்!
உதய மாகும் மதியால்
தன்னை ஊரே போற்றி
வாழும்!

அறிவுக் கூர்மை
அழகாய்த் திகழ்ந்தால்
அன்பும் சேர்ந்தாலுயர்வே!
செறிவு கண்டு
செழிப்பு கொண்டு
சீர்மை யிருந்தால்
சிறப்பே!
நறவு சுவைக்கும்
நல்ல உறவாய் நம்பி வாழ்வை
நடத்து!
அறிதலின்றிப்புரித லின்றி
அமைந்தால் வாழ்வு
கெடுமே!

முனைவர்
இராம.வேதநாயகம்.



ஒவ்வொரு நாளும்
உன் நினைவிற்கு
என்னிடம் விடுமுறை இல்லை.
நான் இறைவனை
வேண்டுவது ஒன்றே ஒன்று
தான். என்றும் உன்னை
மறக்காத வரம் வேண்டும்.

பிரச்சினை இல்லாத
வாழ்க்கையை தான்
வாழ வேண்டுமென்று
நினைக்கிறோம் ஆனால்
வருவது அனைத்தும்
பிரச்சனையாக தான்
வருகிறது
உரிமை இல்லாத
உறவும் உண்மை இல்லாத
அன்பும் நேர்மையில்லாத
நட்பும் நம்பிக்கை இல்லாத
வாழ்க்கையும் என்றும்
நிரந்தரம் இல்லை


எல்லா பயணங்களும்
நாம் நினைத்த இடத்தில்
சென்று முடிவதில்லை
வழி தவறிச் செல்லும்
சில பயணங்கள் தான்
நமக்கு வாழ்க்கையில்
சில பாடங்களைக்
கற்றுத் தருகின்றது

ஒருவரின் மௌனம் என்பது
திமிர் அல்ல அந்த
மௌனம் என்பது
பல வலிகளுக்கான
அடையாளம்



முனைவர்
பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்



## குருத்தோலை அசைகிறது..!

சாலையெல்லாம்
ஏழைமக்கள்..
சாரைசாரையாய்
செல்கின்றார்!
நாளை பற்றிக்கவலையின்றி..
சந்தோஷமாய் பாடுகின்றார்!
கழுதைமீது ஏறியமர்ந்து
இராசன் வர பார்க்கின்றார்!
குருத்தோலை கைகளேந்தி
வரவேற்றுப் பாடுகின்றார்!
ஓரமாய் நின்றவர்கள்
ஒதுக்குப்புறம்
வாழ்ந்தவர்கள்.. ஓசன்னா
என்று சொல்லி.. உளமாற
வாழ்த்துகின்றார்!



பாமரரின்
பால்மனசு
பவித்திரரை
நினைக்கிறது..
பரமபிதா
திருமகனே..
பவனிவர
தொழுகிறது!

**வே.கல்யாண்குமார்.**

## தெய்வத்தின் கடமை

எங்கெங்கும் எப்போதும்
தெய்வம் செய்த வண்ணமே
உள்ளது; தன் பணியை!
தெய்வத்தையே
சோதிக்கும் பேய்மனங்
கொண்ட மனிதனை
வழி நடத்தும் வகையாக
தெய்வம் – ஏந்துது கையில்
ஆய்தம்!
சமர் புரிந்து சமன் செய்து
பின்னர் தான் ஓய்வும்!

**KMD. முத்துக்குமார்,**
மைசூர்.



## சிலிண்டர் தட்டுப்பாடு!

வாழ்ந்து கெட்ட
ஜமீன் பங்களா போல்
பாழடைந்து
காட்சியளிக்கின்றன...
டீக்கடை, ஹோட்டல்கள்!

**ஏ.எம்.ஷெரீஃப்,**
புதுக்கோட்டை.



சாய்வதற்கு ஏதுவாய்
ஒரு பார்வை அவ்வப்போது
உயிர்த்திருக்க ஒரு சொல்
ஜீவனை மீட்டுத் தர
ஒரே ஒரு ஸ்பரிசம்
கூடவே பயணிக்க ஒருதோள்
யாசிக்க ஒரு ப்ரியம்
யோசிக்க ஒரு பெயர்
இத்தனை தேவைகளோடும்
கடந்த என்னைப் பார்த்து
ஏதும் சொல்லாமல்
கடைசி வரை கண் சிமிட்டிக்
கொண்டிருந்தது
பெயர்
தெரியாத
அந்த ஒற்றைப்
பூ.



**ரிஷபன்**

## எழிற்றமிழே என்றும் இனிது!

நேரிசை வெண்பா!

தமிழின் பதினாறு
தக்க சிறப்பைக்
கமழ்ந்திடச் சொன்னாரே
கண்ணாய்..அமைந்த
அழகான தேவநேயர்
அன்னா ருரைத்த
எழிற்றமிழே என்றும் இனிது!

ஓங்கலிடை வந்தே
உயர்ந்தோர் தொழவிளங்கும்
பாங்குடன் எல்லோரைப்
பண்பாகத்..தாங்கும்



அழகே
மதியேநல்
ஆன்றஅமுதே
எழிற்றமிழே
என்றும்
இனிது!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

1. மரணம் என்பது
உயிருக்கு தான்
நல்ல பெயருக்கு இல்லை

2. மீன் கூட கலராகப்
பிறந்தால்தான் மீன்
தொட்டியில் சாதாரணமாக
பிறந்தால் கறி சட்டியில்

3.எதிரி எப்போதும் எதிரியே
நண்பன் தான் அடிக்கடி
பரிசீலிக்கப்பட வேண்டியவன்

4.மட்டம் தட்டப்படுகின்ற
மனமும் மட்டம் தட்டப்பட்ட
தரையும் எப்போதும்
பலமானதாக இருக்கும்

5. மகனின் ஐந்து வயதில்
அப்பா சொன்னார்
அப்பாவின் 70 வயதில்
மகன் சொன்னான் எவ்வளவு
சொன்னாலும் புரிஞ்சிக்க
மாட்டியா என்று
இடம் தான் வேறு



1.ஒருவரை அதிகம் பேச
வைக்காமல் இருக்க
ஆண்ட்ராய்டு செல்போனால்
மட்டுமே முடியும்

2. சந்தோசம் வந்தால்
சீக்கிரம் அனுபவித்து விட
வேண்டும் கஷ்டம் வந்தால்
சீக்கிரம் அனுப்பிவிட
வேண்டும்

3. எல்லாம் இழந்தவனுக்கு
எதைப்பற்றியும் கவலை
இல்லை ஏனென்றால் கையை
இழந்தவன் எதற்கு நகத்தை
பற்றி கவலைப்பட வேண்டும்

4. 60 வயதுக்கு மேல் அப்பா
வேலைக்கு சென்றால்
மகன் சரியில்லை என்று
அர்த்தம்
16 வயதிற்கு கீழ் மகன்
வேலைக்கு சென்றால் அப்பா
சரியில்லை என்று அர்த்தம்



5. ஆயுதம்
இல்லாமல்
கூட ஜெயித்து
விடலாம்
ஆர்வம்
இல்லாமல்
எதிலும்
ஜெயிக்க முடியாது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## * ஸ்ரீராமபிரான் & சகோதரர்களின் திவ்ய மகிமை

ராமன் பிறந்தது நவமியில்!
அவன் தம்பி பரதன் பிறந்தது
தசமியில்!

கௌசல்யா ராமனைத்
தந்தது நவமியில்!கைகேயி
பரதனைத் தந்தது தசமியில்!

புனர்பூசம் ராமனின்
நட்சத்திரம்! பூசம் பரதனின்
நட்சத்திரம்!

பரத தசமி தெரிந்தது?!?
லக்ஷ்மண தசமி
தெரியுமோ?!?

லக்ஷ்மணனும், அவன் தம்பி
சத்துருக்கனனும் பிறந்ததும்
தசமியில்தான்!!!

சுமித்திரை பகவானுக்காக
லக்ஷ்மணனைப் பெற்றதும்,
பாகவதனுக்காக
சத்துருக்கனனைப் பெற்றதும்
தசமியிலே!

ஆயில்யம் — லக்ஷ்மணன் &
சத்துருக்கனன் நட்சத்திரம்

அவர்களின் தெய்வீக நிலை:

நவமியில் வந்தவன் ஒருவன்
அவனே ஆதிமூலன் (ராமன்)

தசமியில் முதலில் வந்தவன்
அவனே பரதன்

இருவரில் முதலில் வந்தவன்
அவனே லக்ஷ்மணன்

நால்வரில் கடைசியாக
வந்தவன் அவனே
சத்துருக்கனன்

அவர்களின் தெய்வீக பணி:

ராமன் உலகைக் காக்க
வந்தான்லக்ஷ்மணன்
ராமனை காக்க வந்தான்

பரதன் நாட்டைக் காக்க
வந்தான் சத்துருக்கனன்
பரதனை காக்க வந்தான்

அவர்களின் நடத்தை:

ராமன் தர்மம் சொன்னபடி
நடந்தான் லக்ஷ்மணன் ராமன்
சொன்னபடி நடந்தான்

பரதன் ராம பாதுகையோடு
நடந்தான் சத்துருக்கனன்
பரதனுக்கு பாதுகையாய்
நடந்தான்

அன்பின் உறவு:

ராமன் சீதையோடு நடந்தான்
லக்ஷ்மணன் ராமனோடு
நடந்தான்

பரதன் ராமனுக்காக
நடந்தான் சத்துருக்கனன்
பரதனுக்காக நடந்தான்

பக்தியின் உச்சம்:

ராமன் தந்தை சொல்
காத்தான் லக்ஷ்மணன்
தாய் சொல் காத்தான்

பரதன் ராமன் சொல்
காத்தான் சத்துருக்கனன்
பரதன் சொல் காத்தான்

நான்கு தர்மங்கள்:

ராமன் தர்மம்
லக்ஷ்மணன் கைங்கரியம்
பரதன் நியாயம்
சத்துருக்கனன் சத்தியம்

புனர்பூசம், பூசம், ஆயில்யம்
நால்வகை மோக்ஷம்

நவமி & தசமி
நால்வகை பிரயோஜனம்

நாம் எப்படி இருக்க
வேண்டும்?

பழி வந்தால் பரதனாய் இரு
சேவை செய்ய
லக்ஷ்மணனாய் இரு
சிரத்தையுடன்
சத்துருக்கனனாய் இரு

மொத்தத்தில் — ராமனுக்கு
பிடித்தபடி வாழ்ந்தால்
போதும்!

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி




கல்லாத என்னிடம்–உன்
பொல்லாத பார்வையை
சொல்லாமல் காட்டி
கொல்லாதே!

உன் ஞாபகங்களாய்
உதிர்ந்த முடிக்கற்றை
சேகரித்து என்னிடம்
கொடுத்தாய்ஏனோ
அவையெல்லாம்
மயிலிறகாய் மாறிப் போனது!

கண்ணடி பட்டு
காயப்பட்டு போனேன்
வரம் கேட்டவனுக்கு
வலிகள் தந்தாய் எல்லாம்
பெற்று நொந்த பிறகும்
உன் காதல்
பிடித்து தான் போகிறது!

செல்பிஷ் ஆகிறேன்–உன்
செல்ல சிரிப்பினை
நான் மட்டுமே
இரசிக்க வேண்டும்!


உன்னை விட
உலகத்தில் வேறெதுவும்
பிடிக்காது–இருப்பினும்
வலிகள் தரும் நீ என்
வாழ்க்கையில் வேண்டாம்.

வண்ணத்துப்பூச்சிகள்
ஒருபோதும் வானவில்லை
கண்டு பொறாமை
பட்டதில்லை.

நான் இருக்கும்
திசை கூட வந்து விடாதே
ஒருவன் கல் என்றான்
மற்றொருவன்
ஒன்றும் தெரியாத குழந்தை
என்றான் பெற்றெடுத்த தாயோ
சூது வாது அறியாதவன்
என்றாள். எல்லாம் பெயரும்
உன்னால் கெட்டு
போகுமென பயம் வந்து
விட்டதடி காதல் விதைக்கும்
விருட்சமே கலகம் எனக்குள்
விதைக்காதே
என் அட்சயமே!

விட்டு செல்வதாய் தானே
சொன்னாய் ஏனோ
மண் திண்ணும் உடலில்
பாழாய் போன உயிர் மட்டும்
சிக்கி கொண்டு
கெட்டு தவிக்கிறது!

அன்பு இல்லாத
உறவுகளுடன் சேர்ந்து
வாழ்வதை விட அயல்
நாட்டில் அடிமைப் பட்டு,



தனிமை பட்டு,
துக்கப் பட்டு,
துயரப்பட்டு,
துன்பப் பட்டு,
அல்லல் பட்டு,
அவஸ்தை பட்டு,
வேதனைப் பட்டு
வெந்து சாவது மேல்!

**லி.நௌஷாத் கான்**





## நிலவு !

சித்திரை நிலவே ! சித்திரை நிலவே !
சிந்தையை செதுக்கிட வா ! சீரோடு வா !
எட்டாத தூரத்தில் இருந்தாலும் உன்னை
எட்டிப் பிடிக்கும் எல்லோருடைய மனமும் !

உன்னை விரும்பாதவர் இந்த
உலகில் இல்லை என்பதே உண்மை !

குழந்தை முதல் பெரியவர் வரை
குவலயத்தில் அனைவருக்கும் பிடிக்கும் !

தேய்ந்து வளர்வதாகத் தெரிந்தாலும்
தேய்வு வளர்ச்சி உண்மையில் இல்லை!

கவிஞர்களின் முதல் பாடுபொருள் நீ
காதலி கூட அடுத்த பாடுபொருள் தான் !

உன்னைப் பாடாத கவிஞர் இல்லை
உன்னைப் பாடாதவர் கவிஞரே இல்லை !

அன்று முதல் இன்று வரை மட்டுமல்ல
அடுத்து வரும் எதிர்காலமும் நீயே
பாடுபொருள் !

கற்காலம் தொடங்கி கணினிக் காலம் வரை
கவிஞர்களுக்கு கவிதை தரும் அட்சயப்
பாத்திரம் நீ !

உன்னை எனக்கு எவ்வளவு பிடிக்குமென்றால்
உதாரணமாக பூமி அளவுக்கு பிடிக்கும்
என்பேன் !

காதலி கூட பிரிவது உண்டு
கண்ணே நீ என்றும் பிரிவது இல்லை !

கனவிலும் வருகிறாய் ! நினைவிலும் வருகிறாய்
காட்சி தருகிறாய் ! களிப்பூட்டுகின்றாய் !

முழு நிலவு நாளில் உன்னை ரசிக்க
முழி இரண்டு போதாது எனக்கு !

பால் நிலவு எனபார்கள் இல்லை இல்லை
பாலை விட வெண்மை நீ !

திருமணமான புதிதில் இணைகள் செல்வதை
தேன்நிலவு செல்லல் என்றார்கள் !

தேன் இனிப்பு நிலவு மகிழ்ச்சி
தேன் நிலவு பொருத்தமாக சூட்டினார்கள் !

உன் மீது முதலில் தயங்காமல் கால்
வைத்ததால் உலக வரலாற்றில் இடம் பிடித்தார்
ஆம்ஸ்ட்ராங் !

இருட்டில் நான் நடந்து சென்றால்
என்னோடு நீயும் கூட நடந்து வருவாய் !

வழியில் நின்று உன்னை ரசித்தால்
வனப்புடன் நீயும் நின்று ரசிப்பாய் !

நிலா இங்கே வா ! வா ! என்று பாடிய பாடல்
நீண்டு வளர்ந்த பின்னும் நினைவில்
நிற்கின்றது !

உன்னைக் காட்டி அன்னை சோறூட்டியது
ஒருபோதும் மறக்கவில்லை எனக்கு !

அடுக்குமாடி குடியிருப்பில் வாழும்
குழந்தைகளுக்கு அன்னையால் உன்னைக்
காட்ட முடிவதில்லை !

இயற்கையான உன்னை ரசித்து வளர்ந்ததால்
இன்றும் நான் இயற்கை ரசிகனாக உள்ளேன் !

என் தாத்தாவின் காலத்தில் இருந்தது
போலவே என் அப்பாவின் காலத்திலும்
இருந்தாய் !

என் காலத்திலும் அப்படியே இருக்கின்றாய்
என் மகன் காலத்திலும் அப்படியே இருப்பாய் !

உன் இளமையின் ரகசியத்தை நீ சொல்
என்னிடம் மட்டுமாவது சொல் !

மாற்றம் ஒன்று தான் மாறாது என்பார்கள்
முழு நிலவில் எந்த மாற்றமும் இல்லை !

காலம் காலமாய் இளமையாக நீ
கண்களைக் கொள்ளை கொள்ளும் அழகு !

பசியை மறக்கடிக்கும் அழகு உனக்கு
பாமரனையும் ரசிக்க வைக்கும் அழகு !

கதிரவனிடமிருந்து பெற்ற ஒளியை
குளிர்வித்து குளிர் ஒளியாய் வழங்கும் வித்தை
எங்கு கற்றாய் ?

பகலில் கதிரவனைத் திட்டிய மக்கள்
இரவில் உன்னைப் பாராட்டி மகிழ்கின்றனர் !
உன்னைக் கண்டு அல்லி மட்டும் மலரவில்லை
உலக மனிதர்கள் யாவரும் மலர்கின்றனர் !

சந்திராயானை அனுப்பி உன்னுள் தண்ணீர்
உள்ளது செப்பினார்கள் மன ஈரமுள்ளவன் நீ
நிரூபணமானது !

சந்திரன் என்று ஆண்பாலுக்கு உன் பெயர்
நிலா என்று பெண்பாலுக்கும் உன் பெயர் !

ஆண் பெண் இருபாலருக்கும் பிடிக்கும்
அதனால்தான் உன் பெயர் இருபாலருக்கும் !

நிலவென முகமென்று காதலியிடம் சொன்னாள்
நிலவென ஒளிர்கின்றது காதலியின் முகம் !

நம் காதலுக்கு நிலவு சாட்சி என்றால்
நங்கை நம்புகிறாள் உன்னை சாட்சியாக !

சங்க இலக்கியத்தில் அன்று வந்த நீ
சந்தோசக் கவிதையில் இன்றும் வருகிறாய் !

வளர்பிறை தேய்பிறை மாயை அறியாதவர்கள்
வாய்க்கு வந்தபடி மூட நம்பிக்கை
பரப்புகிறார்கள் !

உனக்கு இணையான உவமை உலகில் இல்லை
உனக்கு உவமை உலகில் நீ மட்டுமே !

குழந்தைகள் விரும்பிடும் குதூகலம் நீ
காதலர்கள் போற்றிடும் கட்டழகு நீ !

பசியோடு பார்ப்பவனுக்கு தோசை நீ
பரவசத்தோடு பார்ப்பவனுக்கு பால்நிலா நீ !

விளையாட்டு வீரன் பார்வைக்கு பந்து நீ
விவேகமாக சிந்திப்பவன் பார்வைக்கு சிந்து நீ!

பார்த்துக் கொண்டே இருக்கலாம் சலிப்பே
வராது பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி தொற்றிக்
கொள்ளும் !

வட்டம் என்ற வடிவத்தின் விளம்பரத்
தூதுவர் நீ வட்டமிட்டு சுற்றினாலும் சூரியன்
வசமாகவில்லை!

உயரத்தில் இருக்கும் நட்சத்திரங்களின்
கவியரங்கம் உயரத்தில் இருக்கும் தலைமைக்
கவிஞன் நீ !

கதிரவன் பிடிக்குமா? நிலவு பிடிக்குமா? எனக்
கேட்டு வாக்கெடுப்பு வைத்தால் வெற்றி
உனக்கே !

வெப்பத்தை விரட்டியடிக்கும் சூரன் நீ
அப்பத்தைப் போன்ற உருவமுள்ள இனிமை நீ !

குளத்தில் மிதக்கும் உன்னை சிறுவர்கள்
கல்லால் சிதைத்து மகிழ்வதுண்டு !

ஆதாம் ஏவாள் காலத்திலும் இருந்தாய்
அன்னை தெரசா காலத்திலும் இருந்தாய் !

கேத்ரின் தெரசா காலத்திலும் இருக்கிறாய்
காலம் காலமாய வாழும் விந்தை நீ !

ஆண்டு ஒன்று போனால் வயதொன்று கூடும்
ஆண்டாண்டு காலமாய வாழும் உன்
வயதென்னவோ ?

மண்ணின் மனிதர்கள் முதுமை தவிர்க்க
முடியாதது விண்ணின் உனக்கோ முதுமை
இல்லை இளமை மட்டுமே !

உன்னில் மனிதர் வாழலாமா? என ஆராய்ச்சி
உன்னில் மனிதன் வாழ்ந்தால் மாசாக்கிடுவான்
உன்னை !

கண்டால் கவலை காணாமல் போகும் உன்னை
கண்டவர் உள்ளம் கொள்ளை போகும் !

ஒப்பனை இல்லாத இயற்கை அழகு நீ
ஒப்பற்ற உயர்ந்த இடத்து அழகு நீ

நிலவுக்கு உவமை நிலவு மட்டுமே
நிலவுக்கு நிகர் நிலவு மட்டுமே !

**கவிஞர் இரா. இரவி**

## மை.. மை.. மை..!

உண்மை உண்மை உண்மை..
ஒருவிரல் புரட்சி
கையில் வைக்கும் மை!

கடமை.. கடமை..
கடமை..! கண்டிப்பாக நாம்
ஓட்டு போடுவது கடமை!

உரிமை உரிமை உரிமை..!
தருமே விரலில் வைக்கும்
கருமை.!

பெருமை பெருமை பெருமை..!
இது ஜனநாயகத்தின்
பெருமை..!

இம் மை..
எமதுப்பிறப்புரிமை..!
எல்லோருக்கும் இது
பொதுஉடைமை..!

கண் மை அல்ல
நம்கருத்துரிமை!
காலத்தை மாற்றும்
வாக்குரிமை.!

எழுதும் மை தலை
எழுத்துரிமை..
இளைத்தவருக்கே
இனிப் பேச்சுரிமை..!

ஆண்மை.. பெண்மை
அனைவருக்கும்..
அரசினில் இருக்கும்
பங்குரிமை..!

நன்மை தருவது
வாக்குரிமை..
நாளை நமதெனும்
நமதுரிமை..!

காசுக்கு விற்றால்
அதுமடமை..
கண்முன் நடந்தால்..
அதுகொடுமை.!

இம்மை மறுமை ஏதுமில்லை..
இருக்கும் நாள்வரை
வாழ்வுரிமை.!

**வே.கல்யாண்குமார்.**




























விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் ***கோ கிரி*** என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-**08** ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை,** சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்க்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துஜ அவரோகனம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு

பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

இங்ஙனம்.
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285










ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI


PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனீஸ்வரர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE



just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009



# பல்சுவை களஞ்சியம்



# பழனிக்கு பஸ் பயணம்

பழனிக்கு பஸ் ஏறினார் ஒருத்தர் சென்னையிலிருந்து. கண்டக்டர் சொன்னார்.. போங்க சார்.. இடம் நிறைய இருக்கு போய் உக்காருங்க.. ஆனா அவர் உக்காரவே இல்ல.. பஸ்ல அங்கயும் இங்கயுமா நடந்துட்டே இருந்தார்.. பஸ் செங்கல்பட்டு தாண்டிடுச்சி.. இன்னும் அந்த ஆளு நடந்துட்டு தான் இருக்கார். மறுபடியும் கண்டக்டர் சொன்னார்.. என்னங்க ஆச்சு, இத்தன சீட்டு காலியா இருக்கே, எங்கயாவது உக்காரலாமேன்னு..

இல்ல நா உக்காரலன்னு சொல்லிட்டாரு.. விழுப்புரத்துல ஒரு ஹோட்டல்ல வண்டி நிக்க.. சாப்ட எல்லாரும் இறங்கிட்டாங்க, ஆனா இவர் மட்டும் இறங்கல.. கண்டக்டர் திரும்பவும் கேட்டார்.. அதே பதில் தான்.. அடுத்து திருச்சி... திண்டுக்கல்னு.. போய்ட்டு இருக்கு... எல்லாரும் தூங்கி எழுந்துட்டாங்க... இந்த மனுஷன் நடந்துட்டு தான் இருக்கார். ஒரு வழியா... பழனியும் வந்துடுச்சு.. சென்னைலருந்து பழனி வரைக்கும் இவர் உக்காராம நடந்துட்டே தான் இருக்கார்.. கண்டக்டருக்கு ஒன்னும் புரியல... என்னதான் ஆச்சு இவருக்குன்னு.. இன்னொரு பக்கம் ஆர்வமும் கூட.. என்ன சமாச்சாரம்னு கேட்டுடனும்னு.. இறங்கும் போது அவர் கிட்ட கேட்டாரு... ஏங்க இப்டி காசு கொடுத்து டிக்கெட் வாங்கிட்டு உக்காரமயே பழனி வரைக்கும் வந்திங்கன்னு..



அதுக்கு அவர் பதில் சொன்னாரு...

பழனிக்கு நடந்து வர்றதா ஒரு வேண்டுதல்..

# மீம்ஸ்







## புது கவிதை.

~~~~~~~~

பொதுநலம்
நோக்கம்
எதுவுமின்றி
வனத்தையே
உருவாக்கும்
அழகோ அழகு...
விதைகளோடு
கனிகள்
விழுங்கும்
பறவைகள்.

# ஆரோக்கியத்துடன் வாழ



1. உணவிடை நீரை பருகாதே!

2. கண்ணில் தூசி கசக்காதே!

3. கத்தி பிடித்து துள்ளாதே!

4. கழிக்கும் இரண்டை அடக்காதே!

5. கண்ட இடத்தில் உமிழாதே!

6. காதை குத்தி குடையாதே!

7. கொதிக்க கொதிக்க குடிக்காதே!

8. நகத்தை நீட்டி வளர்க்காதே!

9. நாக்கை நீட்டிக் குதிக்காதே!

10. பல்லில் குச்சிக் குத்தாதே!

11. பசிக்காவிட்டால் புசிக்காதே!!

12. பசித்தால் நேரம் கடத்தாதே!

13. வயிறு புடைக்க உண்ணாதே!

14. வாயைத் திறந்து மெல்லாதே!

15. வில்லின் வடிவில் அமராதே!

16. வெற்றுத் தரையில் உறங்காதே!

இவைப் பதினாறையும் கடை பிடித்தாலே பாதேும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ நம் முன்னாரேர்களின் எளிய வழிமுறை...!!!



## விடுகதை

| | |
|---|---|
| எட்டாத ராணியாம் இரவில் வருவாள், பகலில் மறைவாள். அது யார்? | நிலா |
| ஆள் இறங்காத குளத்தில் ஆடி இறங்கி கூத்தாடுது. அது என்ன ? | மத்து |
| கண்ணில் தென்படுவான், கையில் பிடிபட மாட்டான். அவன் யார்? | புகை |
| அடித்து நொறுக்கி அணலில் போட்டால் ஆவியாகத் தோன்றி அழகாய் மணக்கும். அது என்ன? | சாம்பிராணி |
| தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார் | தலையணை |
| வாலால் நீர் குடிக்கும்,வயால் பூச்சொரியும் அது என்ன? | விளக்கு |

# ஜோக்ஸ்



"தலைவர் விமானத்துல எதுக்கு லைஃப் ஜாக்கெட் போட்டிருக்கார்?"

"போன தடவை மழையில ப்ளைட் ஒழுகி தண்ணியில ரொம்ப தத்தளிச்சிட்டாராம்!"

ப.சோமசுந்தரம்
கோவிலம்பாக்கம்
சென்னை 600129
போன்: 8778414755

-----++----

வாசலில் பிச்சைக்காரன் அருமையாக பொன்னப்ப பாகவதரின் பாடல்களைப் பாடியபடி சென்றான் வாசலுக்கு ஓடிவந்து "அப்பா பாகவதரின் பாடலை அப்படியே பாடுகிறாயே"என்ற வீட்டுக்காரரரிடம் "நான் பொன்னப்ப பாகவதர் தான் " என்று சொன்னவுடன் அதிர்ச்சி அடைந்தார்

-----------+--------------
-----

ரஷ்யப் பிரதமர் குருஷ்சாவ் விடம் பத்திரிகை யாளர் "" உங்களை முட்டாள் என்று திட்டியவருக்கு 10--வருட ஜெயில் தண்டனை அதிகம் இல்லை யா?? "" என்றவுடன் குருஷ்சாவ்மசொன்ன பதிலைக் கேட்ட தும் அனைவரும் சிரித்தார்கள்-- " ஐந்து வருடம் பிரதமரை திட்டியதற்கு மீதி பத்து வருடம் ஒரு ராஜாங்க ரகசியத்தை வெளியிட்ட தற்கு""



--------+-----------+++----
----

காரசாரமான விவாதம் நடந்தது சிகரெட் பிடிப்பதை நிறுத்துவது முடியாத காரியம் என்று பார்க் ட்வைன்--என்ற நகைச்சுவை யாளர் -- ""அது மிக மிக எளிய செயல் நான் பலமுறை செய்திருக்கிறேன்"" என்றார் சிகரெட் புகை விட்டபடி!!!

---+--++---+--++-++++-----

S Narayanan
D.102 Brigade Gateway
Dr Rajkumar Road
Malleswaram West
Bangalore
560055
Phno-9790958041
.

-----------------------------

"..... லேப்டேப்ல என்ன பாஸ்வேர்டு கொடுத்திருக்க..?"

".... என் பிறந்த தேதிதான்....!"

"...... கிராதகி... இப்ப கேட்கவும் முடியாது,லாக்கின் பண்ணவும் முடியாதே....!!!

________________

"..........என்ன தரகரே பொண்ணுவீட்டுக்கு கூட்டிகிட்டு போறேன்னு சொல்லிட்டு,...... சுடுகாட்டுக்கு கூட்டிட்டுவந்திருக்கீங்க...?"

".....நீங்கதானங்க அடக்கமான பொண்ணா வேணும்னு கேட்டீங்க....!"

__________

பா.சுமதி
ஆந்தகுடி 610106
செல் 6379560125

*****

நல்ல மழை பெய்து வருகிறது

அந்த தோட்டத்தில் எல்லா காய்கறிகளையும் நனைகின்றது ஒரு காய் தவிர அது என்ன காய்?

" குட மிளகாய்"

சுந்தரி காந்தி
எ 3 எய்ம்ஸ் பிளாட்,பார்க் தெரு, சின்னப்ப நகர்,
பூந்தமல்லி
சென்னை 56
600056
~~~~~~~~



# பன்முகம்



## ரத்த சர்க்கரை அளவு உயர காரணம் என்ன?

இன்சுலின் என்பது கணையத்தில் உள்ள 'பீட்டா' செல்களால் சுரக்கப்படும் ஒரு ஹார்மோன் ஆகும்.இந்த இன்சுலின் என்பது, நாம் உணவை உட்கொண்டு, அது செரிமானம் அடையும்போது, அது சர்க்கரையாக (குளுகோஸ்) மாற்றப்படுகிறது.

மேலும் இன்சுலின் என்பது, சர்க்கரை மூலக்கூறுகள் உடலின் செல்களுக்குள் நுழைய உதவும் ஒரு 'சாவி' போன்றது. இது செல் சுவரின் கதவுகளை திறந்து விடுகிறது. சில காரணங்களால் உடலின் செல்களுக்குள் இன்சுலின் நுழைய முடியாத எதிர்ப்பு தன்மை ஏற்படுகிறது. இதைத்தான் இன்சுலின் ரெசிஸ்டன்ஸ் என்கின்றனர். அதாவது, செல்களின் மேற்பரப்பில் உள்ள 3 ஏற்பிகள், இன்சுலினுக்கு சரியாக பதில் அளிப்பது இல்லை. இதனால் சர்க்கரை மூலக்கூறுகள் உடல் செல்களுக்குள் நுழைய முடிவதில்லை. அவை ரத்த ஓட்டத்தில் தேங்கி நிற்கின்றன. இதுவே ரத்த சர்க்கரை அளவு உயர்வதற்கு காரணமாகிறது.

இது போன்ற ஒரு நிலை ஏற்படக்காரணம். குடும்பத்தில் நீரிழிவு நோய் வரலாறு இருத்தல், உடலில் ஹார்மோன் சமநிலை இல்லாமல் போவது, உடல் உழைப்பு இன்மை போன்றவை ஆகும். உடலில் இன்சுலின் எதிர்ப்புத்தன்மை உருவாகும்போது, அதீத தாகம் அல்லது பசி, உடல் எடை அதிகரிப்பு, கை மற்றும் கால்களில் கூச்ச உணர்வு, அதீத சோர்வு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

அன்றாட உடற்பயிற்சி, சத்தான உணவு, மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை, நல்ல தூக்கம், சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் இன்சுலின் எதிர்ப்பு தன்மையை சீராக்க முடியும் என்கிறார்கள், டாக்டர்கள்.



## சமையல் எரிவாயுவை எவ்வாறு சேமிக்கலாம்



தற்போதைய போர்ச் சூழல், எரிபொருள் சிக்கனத்தின் அவசியத்தை எல்லோருக்கும் உணர்த்தியுள்ளது. அதிலும் சமையல் எரிவாயு நிலவரம், இல்லத்தரசிகளுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில், சமையல் எரிவாயுவை எவ்வாறு சேமிக்கலாம் என்று பார்க்கலாம்...

* குளிர்பதன பெட்டியில் (பிரிட்ஜ்) இருந்து எடுத்து பால், தோசை மாவு போன்றவற்றை பயன்படுத்த வேண்டும் என்றால், குறைந்தது 2 மணிநேரத்துக்கு முன்பே பிரிட்ஜில் இருந்து வெளியே எடுத்து வைத்து விட்டால் எரிவாயு மிச்சமாகும்.

* அரிசி, பருப்பு போன்றவற்றை சமைப்பதற்கு அரைமணி முன்னரே ஊற வைத்துவிட்டால், வேகும் நேரம் குறையும், எரிவாயுவைச் சேமிக்க முடியும்.

* எதற்கெல்லாம் பிரஷர் குக்கரை பயன்படுத்த முடியுமோ அதற்கெல்லாம் பயன்படுத்துங்கள். பிரஷர் குக்கர் சமையலில் எரிவாயு அதிகம் செலவாகாது.

* பொரிக்க வேண்டிய உணவுகளை மசாலாவில் சற்றுநேரம் ஊறவைத்துப் பொரித்தால் எரிவாயு குறைவாக செலவழியும்.

* அளவாக தண்ணீர் தெளித்து மூடி போட்டு வேகவைத்தால் பொரியல் காய்கறிகளை சீக்கிரம் சமைக்கலாம்.

* பாத்திரங்கள், வாணலியை ஈரத்தோடு அடுப்பில் வைக்காமல் நன்றாக துடைத்துவிட்டு அடுப்பில் வைத்தாலும் எரிவாயுவை சிறிதளவு சேமிக்க முடியும்.

* சரியான தீ அளவை பயன்படுத்த வேண்டும். சமையலின் இரண்டாம் பகுதியில், தீ அளவை குறைத்து வைத்துக்கொண்டால் போதும். பாத்திரத்தின் அடிப்பகுதியைத் தாண்டி தீப்பிழம்பு வெளியே வந்தால் எரிபொருள் வீணாகும்.

* அடுப்பு எரிப்பான் (பர்னர்) துளைகளை அவ்வப் போது பார்த்து சுத்தப்படுத்த வேண்டும். தீ ஜுவாலை நீல நிறத்தில் இருந்தால்தான், எரிவாயு முழுமையாக பயன்படுகிறது என்று அர்த்தம்.

* சமைப்பதற்கு முன் தேவையான பொருட்களை அருகே வைத்துக்கொள்ளவும். எரிவாயுவை பற்ற வைத்துவிட்டு வெங்காயத்தை அரியத் துவங்க வேண்டாம்.

* சமைக்கும் அளவுக்கேற்ற பாத்திரங்களை பயன்படுத்தலாம். குறைந்த அளவு சமையலுக்கு பெரிய வாணலிகளை உபயோகிக்க வேண்டாமே!

* நூடுல்ஸ், பாஸ்தா போன்றவற்றுக்கு, கொதிக்கும் நீரில் போட்டவுடனேயே மூடிவைத்துவிட்டால் நீரின் வெப்பத்துக்கே வெந்துவிடும்.

* அப்பளம் பொரிக்கும்போது கடைசி அப்பளங்களை எரிவாயுவை நிறுத்திவிட்டு எண்ணெய் சூட்டிலேயே பொரிக்கலாம்.

* பால் காய்ச்ச கெட்டில், சமையலை சூடுபடுத்த இன்டக்ஷன் அடுப்பு என மாற்று ஏற்பாடுகளையும் பயன்படுத்தி எரிவாயுவை சிக்கனப்படுத்தலாம்.

* காலையில் படுக்கையில் இருந்து தாமதமாக எழுந்து வருபவர்களுக்கென தனித்தனியாக காபி தயாரிக்காமல் அவர்களுக்கான காபியை பிளாஸ்க்கில் ஊற்றி வைத்தாலும் எரிவாயு மிச்சமாகும்.

சமையல் எரிவாயு பயன்பாட்டில் சிக்கனம் தேவை இக்கணம் என்பதை மறக்க வேண்டாம்.

## பச்சை ஆப்பிள் ஏன் சாப்பிட வேண்டும்?



ஆப்பிள் என்றதுமே சிவப்பு நிறம்தான் நினைவுக்கு வரும். ஆனால் ஆப்பிள்களில் விதவிதமான வண்ணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் சிவப்பு ஆப்பிளுக்கு அடுத்தபடியாக பச்சை ஆப்பிள் அதிகம் புழக்கத்தில் இருக்கிறது. இதுவும் சிவப்பு ஆப்பிளை போல் ஆரோக்கியத்துக்கு பலம் சேர்க்கக்கூடியதுதான். சிவப்பு ஆப்பிளை ருசிக்க விரும்பாத குழந்தைகளுக்கு மாற்றுத்தேர்வாக பச்சை ஆப்பிளை கொடுக்கலாம். இந்த ஆப்பிளை ஏன் சாப்பிட வேண்டும் என்பது பற்றி பார்ப்போம்.

* சிறு வயதிலேயே குழந்தைகள் பலர் பார்வை குறைபாடு பிரச்சனையை எதிர்கொள்கிறார்கள். பச்சை ஆப்பிளில் பார்வைத்திறனை பலப்படுத்த உதவிடும் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளது. கண்களின் ஆரோக்கியத்தையும் காக்கக்கூடியது. சிவப்பு ஆப்பிளை போலவே இந்த ஆப்பிளின் வெளிப்புற தோல் பகுதியை தவிர்க்கக்கூடாது. நன்கு கழுவிவிட்டு உட்கொள்ள வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை மெருகேற்றும் தன்மையும் பச்சை ஆப்பிளுக்கு உண்டு.

* எலும்புகளுக்கு வலிமை சேர்க்கும் கால்சியம் பச்சை ஆப்பிளில் இருக்கிறது. குறிப்பாக இந்த ஆப்பிள் ஆஸ்டியோபோரோசிஸ் பாதிப்பை தடுக்கக்கூடியது. இதனுடன் பிற ஊட்டச்சத்து உணவுகளையும் உட்கொள்வது எலும்புகளை வலிமையாக்கும்.

* தினமும் பச்சை ஆப்பிள் சாப்பிடுவது நுரையீரல் தொடர்பான நோய் அபாயங்களை குறைக்கும் என்பது ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன் ஆஸ்துமா அபாயத்தையும் குறைக்கும். நோய்த்தொற்று பரவும் காலத்தில் பச்சை ஆப்பிள் சாப்பிடுவது நுரையீரலுக்கு பாதுகாப்பு அரணாக அமையும்.

* பச்சை ஆப்பிளில் இருக்கும் கரையக்கூடிய நார்ச்சத்து கொழுப்பு அளவைக் குறைக்க உதவிடும். பக்கவாதம் ஏற்படும் அபாயத்தையும் தடுக்கும். பச்சை ஆப்பிள் கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்கும் என்பது அமெரிக்கன் ஜர்னல் ஆப் கிளினிக்கல் நியூட்ரிஷன் நடத்திய ஆய்வில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

* உடலில் அதிக கொழுப்பு சேர்ந்து அவதிப்படுபவர்கள் பச்சை ஆப்பிளை உட்கொள்வது நல்லது. ரத்த அழுத்த பிரச்சனை கொண்டவர்களுக்கும் பச்சை ஆப்பிள் சிறந்த நண்பனாக விளங்கும்.

*பச்சை ஆப்பிளில் அதிக நார்ச்சத்து உள்ளது. அது உடலில் உள்ள நச்சுக்களை நீக்க உதவிடும். செரிமான செயல்பாட்டுக்கும் துணை புரியும். வளர்சிதை மாற்றத்தையும் துரிதப்படுத்தும். உடல் எடையை கட்டுக்குள் வைத்திடவும் உதவிடும்.

பச்சை ஆப்பிளை காலை மற்றும் மதிய உணவுக்கு இடையே சாப்பிடலாம். இரவில் சாப்பிடுவது குடல் இயக்க செயல்பாடுகளுக்கு இடையூறை ஏற்படுத்தக்கூடும். வாயு தொல்லை ஏற்படவும் வழிவகுத்துவிடும்.

## AI-யின் ஏமாற்று வேலைகள் 5 மடங்கு அதிகரிப்பு



கூகுள்(ஜெமினி), ஓபன்ஏஐ (சாட்ஜிபிடி), எக்ஸ் (குரோக்) மற்றும் ஆந்த்ரோபிக்(கிளாட்) போன்ற முன்னணி நிறுவனங்களின் ஏஐ சாட்போட்கள் சாமானிய மக்களிடமும் புழக்கத்தில் உள்ளன.

வேலையிடம் தொடங்கி தனிப்பட்ட தேவைகள் வரை ஏஐ மயக்கப்பட்டு வருகிறது. அதே நேரம் இந்த ஏஐகள் மனிதனை மீறி தன்னிச்சையாக செயல்படத் தொடங்கினால் என்னவாகும் என்ற அச்சம் நிபுணர்கள் முதல் சாமானியர்கள் வரையிலும் இருக்கவே செய்கிறது.

இதை மெய்ப்பிக்கும் வகையில் அவ்வப்போது சில சம்பவங்களும் ஆங்காங்கே நடந்து வருகின்றன. உதராணமாக ஏஐ தனக்கு இடப்பட்ட கட்டளையை ஏற்காதது, தான் வழங்கிய பதிலை குறை சொல்பவரை திட்டுவது என ஏஐ சற்று அதிகப்ரசங்கி தனமாக செய்து வருகிறது.

இந்த சூழலில் பிரிட்டன் அரசின் நிதி உதவியுடன் இயங்கும் ஏஐ செக்யூரிட்டி இன்ஸ்டிடியூட் (AISI) நடத்திய ஆய்வில் ஏஐகளின் அசாதாரண போக்கு கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் ஏஐ சாட்பாட்களை கூர்ந்து கவனித்ததில் அவற்றின் 'ஏமாற்று வேலைகள்' (Scheming) ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 700க்கும் மேற்பட்ட நிஜ உலகச் சம்பவங்களை ஆராய்ந்து ஆய்வாளர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

இந்த பாட்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட நேரடி உத்தரவுகளைப் புறக்கணிப்பதோடு, பாதுகாப்பு வளையங்களையும் மீறிச் செயல்படுவதாக ஆய்வு கூறுகிறது.

மனிதர்களுக்குத் தெரியாமல் மின்னஞ்சல்களை அழிப்பது, கோப்புகளை அகற்றுவது ஆகியவை இதில் அடங்கும்.

வினோதமாக, ஒரு ஏஐ தனது வேலையை குறை சொன்னவரை அவமானப்படுத்தி Blogpost ஒன்றை எழுதி தன்னிச்சையாக இணையத்தில் வெளியிட்டுள்ளது.

மற்றொரு சம்பவத்தில், தனது பயனரின் அனுமதியின்றி நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்களைத் தானாகவே குப்பைக்கு மாற்றியதை ஒப்புக்கொண்டுள்ளது.

தற்போதைக்கு இவை சிறிய தவறுகளாக இருந்தாலும் வரும் காலங்களில் இது ஆபத்தை விளைவிக்கும் அளவிலான பெரிய தவறுகளை மீறல்களை செய்யக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே இணயத்தில் ஏஜகளால் பரப்பப்படும் போலி செய்திகள் மேலும் அச்சறுத்தலாக அமைந்துள்ளது.

## குழந்தைகள் டி.வி. பார்ப்பது நல்லதா?



செல்போன், வீடியோ கேமுக்கு அடுத்தபடியாக குழந்தைகளின் விருப்பமான பொழுதுபோக்காக தொலைக்காட்சிதான் விளங்குகிறது. அதிலும் விடுமுறை நாட்களில் மணிக்கணக்கில் டி.வி.யில் மூழ்கிவிடும் குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். கார்ட்டூன், விளையாட்டு தொடர்பான நிகழ்ச்சிகள்தான் அவர்களின் விருப்ப தேர்வாக இருக்கிறது.

குழந்தைகள் டி.வி. பார்ப்பது தவறல்ல. ஆனால் அதிலேயே மூழ்கி விடுவதுதான் நல்லதல்ல. அவர்கள் பார்க்கும் நிகழ்ச்சிகள் அறிவுத்திறனை மேம்படுத்துவதாக அமைந்தால் பாதகமில்லை. வெவ்வேறு கலாசாரங்கள், பாரம்பரிய இடங்கள், உலகின் ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், அங்குள்ள புகழ்பெற்ற இடங்கள் என பொது அறிவையும், சிந்தனை திறனையும் விசாலப்படுத்த வித்திடும் நிகழ்ச்சிகளை பார்ப்பது நல்லது.

குழந்தைகள் வாசிப்பதிலோ, எழுதுவதிலோ தடுமாற்றத்தையோ, சிரமங்களையோ எதிர்கொண்டால் அவர்களை டி.வி., செல்போன் உள்ளிட்ட மின்னணு சாதனங்களின் திரைகளின் முன்பு சிறிது நேரம் செலவிட வைக்கலாம். எழுதுவதில் சிரமம் கொண்ட குழந்தைகளை பள்ளிக்கூடத்திலோ, வீட்டிலோ டி.வி. திரைகள் முன்பு சிறிது நேரம் அமர வைக்கலாம். அதில் தென்படும் காட்சியும், ஒலியும் அதன் மீது கவனம் செலுத்த வைக்கும். அந்த காட்சிகள் குழந்தைகள் விரும்பும் விளையாட்டு, கார்டூன் சார்ந்த காட்சிகளாக இருக்கலாம் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.



## ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக்கல்யாணம் சிறப்பு வழிபாடு





**தர்மபுரி , மார்ச்30:**
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, ஹோமங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பாட்டுகள் பாடி, மாலைகள் மாற்றி ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக் கல்யாணமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் உணவு,பிரசாதமும் வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு சுவாமி ஊர்வலமும் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஊர்வலத்தில் குழந்தைகள் ராமர் சீதா வேடமணிந்து வந்திருந்தனர். உபயதாரர் : நானைய செட்டியார் குடும்பத்தினர், ஆர்ய வைஸ்யர்கள் அனைவரும் ஸ்ரீ ராமர், சீதாதேவி திருக்கல்யாணம் விழாவில் கலந்துகொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் சேர ஆண்டு வருமானம் ரூ.5 லட்சம்




மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் சேர ஆண்டு வருமானம் ரூ.5 லட்சமாகவும், காப்பீட்டுத் தொகை ரூ.10 லட்சமாகவும் உயர்த்தப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சட்டமன்ற தேர்தலையொட்டி திமுகவின் தேர்தல் அறிக்கையை நேற்று (மார்ச் 29) வெளியிட்ட அவர், புதுமைப்பெண் திட்டம் ரூ.1000ல் இருந்து ரூ.1500 ஆக உயர்த்தப்படும், பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.5 உயர்த்தப்படும், முதியோர் உதவித்தொகை ரூ.1,200ல் இருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்படும் என அறிவித்தார்.

## மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை




தமிழகத்தில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர் களுக்கு, அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்தும் வகையில் முதன்முறையாக எளிமைப்படுத்தப்பட்ட வினாத்தாள்கள் மூலம் ஆண்டு இறுதித் தேர்வை நடத்தத் தொடக்கக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

## முதியோர் உதவித்தொகை ரூ.1200ல் இருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்படும்



திமுக தேர்தல் அறிக்கையை அக்கட்சி யின் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அறிவித்து வருகிறார். அதன்படி, "பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.5 உயர்த்தப்படும். முதியோர் உதவித்தொகை ரூ.1200ல் இருந்து ரூ.2000 ஆகவும், மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.1500 - லிருந்து ரூ. 2500 ஆகவும் உயர்த்தப்படும். புதுமைப்பெண் திட்டம் ரூ.1000 ல் இருந்து 1500 ஆக உயர்த்தப்படும்" என அறிவித்துள்ளார்

ரவுசு மணி

கட்டுப்பட்டு இருப்பது இல்லை சுதந்திரம்..

நமக்கு நாமே கட்டுப்பாட்டுடன் இருப்பதே உண்மையான சுதந்திரம் ..

V. முத்து ராமகிருஷ்ணன்



## காஞ்சி ஸ்ரீவரதன் சன்னதி பங்குனி உத்திரம் உற்சவம்



காஞ்சி ஸ்ரீவரதன் சன்னதி பங்குனி உத்திரம் உற்சவம் நான்காம் நாள் ஸ்ரீ மலையாள நாச்சியார் ஸ்ரீபெருமாள் கண்ணாடி அறையில் சேவை.

## வந்தவாசி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோவிலில் திருக்கல்யாணம் - கருடசேவை



**வந்தவாசி, மார்ச் 30:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் திருக்கோயிலில் பங்குனி மாத பிரம்மோற்சவத்தின் ஐந்தாவது நாள் பெருமாளுக்கு திருக்கல்யாண வைபவம் மற்றும் கருட சேவை நிகழ்வு வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த வைபவ நிகழ்வின் காலை உற்சவ மூர்த்தி பெருமாள் மோகினி அலங்காரத்தில் பல்லக்கில் பவனி வந்தார். பாகவதர்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களை பாடியவாறு வலம் வந்தனர்.

மேலும் மாலை வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. இரவு பெருமாளுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்று, கருட சேவையில் வீதி உலா வந்தார்.

இந்த நிகழ்வில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை உபயதாரர் களான ஸ்ரீமந் நாதமுனிகள் வைணவ சபை தலைவர் கு.மணிவண்ண ராமானுஜ தாசர், ஓய்வு பெற்ற சார் நில ஆய்வாளர் கு.பாண்டுரங்கன், ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், பா.ராமன் மற்றும் பா. லட்சுமணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## பயண இலக்கியக் கருத்தரங்கு




**தேனி, மார்ச் 30:**
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சார்பில் 'தமிழில் பயண இலக்கியங்களின் நோக்கும் போக்கும்' எனும் தலைப்பில் இரு நாட்கள் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தொடக்க விழா நிகழ்விற்குத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பா. ஆனந்தகுமார் தலைமை வகித்தார். தேனித் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும், எழுத்தாளருமான தேனி மு. சுப்பிரமணி வாழ்த்துரை வழங்கினார்.

30 நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கும் உலகப் பயணி சங்கரன்கோயில் அருணகிரி கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில், முனைவர் ஜா. அருள் சுனீலா, 'பயண இலக்கியப் படைப்பில் தனிநாயக அடிகள்' எனும் தலைப்பிலும், முனைவர் செ. ராஜேஷ்கண்ணா, 'ஆற்றுப்படை இலக்கியங்களில் பயண இலக்கியக் கூறுகள்' எனும் தலைப்பிலும், சங்கரன்கோயில் அருணகிரி, 'உலகைச் சுற்றுவோம்' எனும் தலைப்பிலும், முனைவர் பாவெல் பாரதி, 'கண்ணகி நடந்த பெருவழி' எனும் தலைப்பிலும், முனைவர் சி. சிதம்பரம், 'தமிழில் ஆன்மிகப் பயண இலக்கியங்கள் எனும் தலைப்பிலும், முனைவர் ச. பாரதி பிரகாஷ், 'தமிழ்ப் பயண இலக்கியங்களில் வட இந்தியப் பதிவுகள்' எனும் தலைப்பிலும், முனைவர் இரா. லோகநாதன், 'பழங்குடி ஆய்வுகளில் களப்பயண அனுபவங்கள்' எனும் தலைப்பிலும், மு. கோகிலா, 'அ. கருப்பன் செட்டியாரின் மொழிநடை' எனும் தலைப்பிலும், எழுத்தாளர் மாத்தளை சோமு, 'பயணித்த பயணங்கள்' எனும் தலைப்பிலும் உரைகளை வழங்கினர்.

முன்னதாக முனைவர் சி. சிதம்பரம் வரவேற்புரை வழங்கினார்.

முடிவில் முனைவர் கி. சிவா நன்றி தெரிவித்தார்.

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி கோடை வசந்த உற்சவம்



**மதுரை, மார்ச் 30:**
மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி கோடை வசந்த உற்சவம் 2026-29.03.2026-7ம் நாள் மாலை ஊஞ்சல் சேவை உன்னற்கு அரிய திரு உத்தரகோசமங்கை மன்னிப் பொலிந்து இருந்த, மா மறையோன் தன் புகழே பன்னிப் பணிந்து இறைஞ்ச, பாவங்கள் பற்று அறுப்பான்; அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில் போல் என் அத்தன்; என்னையும் ஆட்கொண்டான்; எழில் பாடி, பொன் ஒத்த பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ - திருப்பொன்னூசல்-08.16.07-திருவாசகம்

சொக்கே நின் தாளே துணை



திமுக கூட்டணி கட்சித் தலைவர்களுக்கு நாளை (மார்ச் 30) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேநீர் விருந்து அளிக்கிறார். நாளை மறுநாள் பரப்புரையை முதலமைச்சர் தொடங்கவுள்ள நிலையில் கூட்டணி கட்சி தலைவர்களுக்கு தேநீர் விருந்து வைக்கிறார். தேர்தல் பரப்புரை மற்றும் தேர்தல் பணிகள் குறித்து கூட்டணி கட்சி தலைவர்களுடன் முதலமைச்சர் நாளை ஆலோசனை நடத்தவுள்ளார்.

## ஸ்ரீமாரியம்மன் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை , மார்ச்30:**
திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூர் பஸ் நிலையம் அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயிலில் மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வெள்ளி கவசத்துடன், பிரசாதம்,நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாரியம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் பிரசாதங்கள் சர்க்கரை பொங்கல், வெள்ளம் அரிசி மாவு நெய்வேத்தியம் செய்து பிரசாதம் வழங்கப்பட்டது.

இன்றைய உபயதாரர் அசோக் குமார் லட்சுமி செட்டியார் அவர்கள் கீழ்பென்னாத்தூர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



சீனா உலகின் மிகப்பெரிய நிலக்கரி உற்பத்தி நாடாகும். 2025-2026-ஆம் ஆண்டு வாக்கில், அந்நாட்டின் நிலக்கரி உற்பத்தி ஆண்டுக்கு சுமார் 4.8 பில்லியன் டன்களை எட்டியுள்ளது, இது மற்ற எந்த நாட்டையும் விட மிக அதிகம். சீனாவின் பெரும்பாலான நிலக்கரி இருப்புகள் உள் மங்கோலியா மற்றும் சின்ஜியாங் போன்ற பிராந்தியங்களில் காணப்படுகின்றன. சீனாவிற்கு நிலக்கரி மிகவும் முக்கியமானது, ஏனெனில் அது தொழிற்சாலைகள், எஃகு ஆலைகள் மற்றும் மின்சார உற்பத்திக்கு ஆற்றலை வழங்குகிறது




சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி என்பது சேலம் மாவட்டம் அமைந்துள்ள ஒரு பொதுத் தொகுதியாகும். இது 2008ஆம் ஆண்டு மறுசீரமைப்பின் போது உருவாக்கப் பட்டது. சேலம் நகரின் வடக்கு பகுதிகளை உள்ளடக்கிய முழுமையான நகர்ப்புற தொகுதியாக இது பார்க்கப்படுகிறது.

இந்த தொகுதி, சேலம் மக்களவைத் தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றாகும். சேலம் வடக்கு தொகுதியில் கிட்டத்தட்ட 2.7 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

## வசந்த நவராத்திரி விழா 10-ஆம் நாள் உற்சவம் நிறைவு நாள்




**சென்னை , மார்ச் 30:**
திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி 10-ஆம் நாள் நிறைவு நாள் உற்சவம் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,மூலவர் தங்க கவசத்துடன் மகிஷாசுரமர்த்தினி அலங்காரமும், உற்சவர் மகிஷாசுர மர்த்தினி அலங்காரமும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## பொதுத் தேர்தல் 2026 மண்டல அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம்




**திருவண்ணாமலை, மார்ச் 30:**
திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் போளூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப அவர்கள் போளூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு மண்டல அலுவலருடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மேல் ஒலக்கூர் பசுமலை சுப்பரமணியசுவாமி கோவில் திருக்கல்யாணம்



**விழுப்புரம், மார்ச் 30:**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் சுப்பரமணியசுவாமி திருக்கோவில் திருக்கல் யாணம் திருநாளை முன்னிட்டு பொதுமக்கள் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திங்கள்கிழமை மாலை திருத்தேரோட்டம் நடை பெறயுள்ளது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**



சட்டமன்றத் தேர்தலில் தான் 2 தொகுதிகளில் போட்டியிடுவதாக தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார். தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் 234 வேட்பாளர்களை விஜய் அறிமுகம் செய்தார். இதற்கான அறிமுக விழா சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.



சுமார் 0.9 கிமீ உயரத்தில், வட ஒடிசா முதல் தென் தமிழ்நாடு வரை, தெலுங்கானா மற்றும் கர்நாடகா வழியாக காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, மார்ச் 29ஆம் தேதி நேற்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்தது. தென் தமிழக கடலோர மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய தமிழகப் பகுதிகளில் வறண்ட வானிலையே நீடிக்கும் என கூறப்பட்டுள்ளது.

# சுற்றுலா: வரலாற்று சிறப்பு வாய்ந்த கொல்லிமலை! சுற்றுலா செல்ல ஏற்ற இடம்!

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது கொல்லிமலை. இந்த மலையானது ஆயிரம் முதல் 1300 மீட்டர் உயரம் உள்ளது. 280 சதுர கிலோமீட்டர் பரப்பு கொண்ட அடர்த்தியான காடுகள் நிறைந்த மலை பகுதி ஆகும். இதன் உயரமான சிகரம் 4663 அடி கொண்டது. இதை வேட்டைக்காரன் மலை என்றும் கூறுவார்கள். உயிரினங்களை கொல்லும் சூர் பழங்குடியினர் வாழ்ந்த காரணத்தால் இது கொல்லிமலை என பெயர்பெற்றது. மரங்கள் நிறைந்த அடர்த்தியான மலைப்பகுதியாக இருந்ததால் கொல்லிமலை எனவும் பெயர் பெற்றது.







இந்த மலையானது மூலிகைகளின் ராணி என அழைக்கப்படுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு இவற்றில் கொல்லிமலையை பற்றி குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்தப் பகுதியை முற்காலத்தில் கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான ஓரி என்பவர் ஆட்சி செய்து வந்தார். இவர் காட்டில் வாழ்ந்த சிங்கம் புலி கரடி மான் காட்டுப்பன்றி இவர்களை வேட்டையாடுவதில் வல்லவராக திகழ்ந்தார்.

ராமாயண காலத்தில் சுக்ரீவன் ஆண்டு வந்த மலைப்பகுதி என புராணம் கூறுகிறது. அவ்வையார், பெருஞ்சித்திரனார் போன்ற புலவர்கள் இந்த மலையை பற்றி பாடல் பாடி உள்ளனர். பிற்காலத்தில் சேர மன்னர்கள் ஆண்டு வந்ததாக வரலாறு உண்டு.

கொல்லிமலையில் அமைந்திருக்கும் பெண் தெய்வம் கொல்லிபாவை என அழைக்கப்படுகிறது. இந்த கோவில் 15000 ஆண்களுக்கு முற்பட்ட கோவில் என இங்கு வாழ்ந்த சித்தர்கள் கூறியுள்ளனர்.

இதனை அடுத்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி அறநூறு அடி உயரத்திலிருந்து விழுகிறது. இம்மலை உச்சியில் அரபள்ளீஸ்வரர் கோவில் உள்ளது. மேலும் இங்கு புகழ்பெற்ற முருகன் கோவில் உள்ளது. இங்கு முருகன் வேடன் கோலத்தில் காட்சி தருகிறார்.

இந்த மலைப்பகுதியில் சிறிய நீர்த்தேக்கம் உள்ளது. அங்கு தினசரி படகு சவாரி நடைபெற்று வருகிறது. ஆடி மாதம் பதினெட்டாம் நாள் வல்வில் ஓரி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

ஆகாய கங்கை பார்க்க வேண்டிய இடமாகும். இங்கு பலவிதமான காப்பி தோட்டங்கள் பழத்தோட்டங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இங்குள்ள செம்மேட்டில் சீக்கு பாறை சேலூர் கோயிலூர் போன்ற வியூ பாயிண்ட்டுகள் உள்ளன. சீக்கு பாறையில் இருந்து பார்த்தால் 70 கொண்டை ஊசி வளைவுகளையும் அருமையாக பார்க்கலாம். போகர் மற்றும் அகஸ்தியர் வசித்த குகைகள் அடர்ந்த காட்டுப் பகுதிகள் உள்ளன.

அரபளீஸ்வரர் கோவில் : ஓரி மன்னன் கட்டிய சிவன் கோயில் ஆகும். தினமும் காலை 6:00 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4:00 மணி முதல் 7:00 மணி வரையும் நடை திறந்து இருக்கும்.

வாசலூர் பட்டி என்ற இடத்தில் படகு இல்லம் உள்ளது. இங்கு தினசரி படகு சவாரி நடைபெற்று வருகிறது. காலை 6:00 மணி முதல் மாலை ஆறு மணி வரை படகு சவாரி நடைபெறும்.

கொல்லிபாகைஎட்டுக்கைஅம்மன் கோவில் மிகவும் சக்தி வாய்ந்த கோவிலாகும். கொல்லிமலை தேன் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்குள்ள பழங்குடி மக்கள் கொல்லிமலை சந்தை நடத்துகிறார்கள்.

இங்கு காட்டில் உள்ள காய்கறிகள், பழங்கள், மூலிகை சாமான்கள், தேன், காப்பி மற்றும் மருந்து சாமான்கள் எந்தவித புரோக்கர் இல்லாமல் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

நாமக்கல்லில் இருந்து 55 கிலோமீட்டர் தொலைவில் கொல்லிமலை அமைந்துள்ளது. ராசிபுரம் - தம்மம்பட்டி - சேலம் இங்கிருந்து கொல்லி மலைக்குச் செல்ல பேருந்து வசதிகள் உள்ளன. மலைப்பாதை நீளம் 26 கிலோமீட்டர் 70 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. பழங்குடி மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள்.

வாழ்க்கையில் ஒரு முறை ஏனும் இந்த கொல்லிமலை அழகை கண்டு ரசிக்க வேண்டும்

# வேலைவாய்ப்பு கார்னர்

## உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தில் மேனேஜர் வாய்ப்பு

மத்திய அரசின் இந்திய உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டெண்ட் மேனேஜர் (ஜெனரல்) 31, சுற்றுச்சூழல், சமூக பாதுகாப்பு 31 என மொத்தம் 62 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ பி.எல்., / சி.ஏ.,

வயது: 21-30 (28.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 100

கடைசிநாள்: 10.4.2026 விவரங்களுக்கு: iifcl.in

## மத்திய அரசில் பணி



மத்திய அரசின் உயர் வெடிபொருள் தொழிற்சாலையில் தற்காலிக பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சூப்பர்வைசரி (கெமிக்கல்) 6, ஸ்கில்டு வொர்க்கர் 85 என மொத்தம் 91 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / பி.இ., / பி.டெக்.,

வயது: 18-40 (10.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

The Chief General Manager, High Explosives Factory, Khadki, Pune, Maharashtra - 411 003. கடைசிநாள்: 10.4.2026

விவரங்களுக்கு: ddpdoo.gov.in

# சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் ரூ. 82 லட்சம் மதிப்பிலான தங்கக் கட்டிகள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 30:**

சட்டமன்றத் தேர்தல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்பு படை தேர்தல் சிறப்பு குழுவினர் நடத்திய சோதனையில் ரூ.82 லட்சம் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்தனர்.



சென்னை சென்ட்ரல் நிலையம் 3-வது நடைமேடையில் நேற்று மாலை 4.40 மணிக்கு சென்னையிலிருந்து சிராலாவுக்கு செல்ல தயாராக இருந்த 12603 (MASசார்லாப்பள்ளி எக்ஸ்பிரஸ்) ரெயில் ரெயில்வே பாதுகாப்புப்படை தேர்தல் பறக்கும்படை சிறப்புப் பிரிவினர் சோதனை செய்தனர்.

அப்போது அந்த ரெயில் பயணம் செய்ய இருந்த ஆந்திரப் பிரதேசத்தை சேர்ந்த நூனே சதீஷ் குமார் (45) என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை நடத்தினர்.

அந்த சோதனையில், அவரது பேன்ட் பாக்கெட்டில் 574 கிராம் எடையுள்ள 13 தங்கக்கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

அதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.82 லட்சத்து 09 ஆயிரத்து 744 என்பது தெரியவந்தது.

விசாரணையில், அந்த தங்கம் வணிக நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதையடுத்து, கைப்பற்றிப்பட்ட தங்கத்தையும், அந்த நபரையும் மேல் நடவடிக்கைக்காக வருமானவரி துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# புதுச்சேரியில் பணப் பட்டுவாடாவை தடுக்க ட்ரோன்கள் மூலம் கண்காணிப்பு தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பு

**புதுச்சேரி, மார்ச் 30:**

புதுச்சேரியில் பணப் பட்டுவாடாவை தடுக்க ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்படுவதாக தலைமை தேர்தல் அதிகாரி ஆர்.ஜவகர் தெரிவித்தார்.



புதுச்சேரியில் தேர்தல் குறித்த பயிலரங்கம் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரி ஆர். ஜவகர் பேசியதாவது:

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், மாகே ஆகிய பகுதிகளில் பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழுக்கள், தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் மற்றும் இதர அமலாக்க அலுவலர்கள் 24 மணிநேரமும் பணியாற்றி வருகின்றனர்.

புதுச்சேரியில் மெய்ப்பொருள் எனும் விழிப்புணர்வு இயக்கத்தை செயல்படுத்தி வாக்குகளுக்காகப் பணம் கொடுப்பதும் பெறுவதும் குற்றம் எனவும் அதனைத் தடுக்க பல்வேறு தரப்பினருடன் இணைந்து பொதுமக்களுக்கும், வேட்பாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளிலும் வாக்காளர்களுக்குப் பணப்பட்டுவாடாவைத் தடுக்க ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கப்படுவதாக தெரிவித்தார்.

அனைத்துத் தொகுதிகளிலும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுவது நாட்டிலேயே இது முதல்முறையாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வாக்குப்பதிவு நடக்கும் ஏப்ரல் 23-ந்தேதி பொது விடுமுறை: தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, மார்ச் 30:**

தமிழகத்தில் வாக்குப்பதிவு நடக்கும் ஏப்ரல் 23-ந் தேதியை பொது விடுமுறையாக தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நாட்கள் உள்பட 4 நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் வரும் ஏப்ரல் 23-ந்தேதி சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி வரும் 30-ந் தேதி தொடங்கும் வேட்புமனு தாகால், ஏப்ரல் 6-ந் தேதியுடன் நிறைவு பெறவுள்ளது. வாக்குப்பதிவுக்கு முன்னதாக, பள்ளிகளுக்கான தேர்வுகள் முடிக்கப்பட்டு விடுமுறை அளிக்க பள்ளிக்கல்வித்துறை பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இந்நிலையில் வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்ரல் 23-ந் தேதியை பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல் கமிஷன் பிறப்பித்த அறிவிப்பை அரசாணையாக தலைமைச் செயலாளர் முருகானந்தம் வெளியிட்டுள்ளார். அதில், மத்திய அரசின் சட்டப்படி, தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்ரல் 23ந் தேதியை பொது விடுமுறை நாளாக அறிவித்து கவர்னர் உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுப்படி ஏப்ரல் 23-ந் தேதி அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமின்றி, அனைத்துத் தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கும் இந்த விடுமுறை பொருந்தும். அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு அன்று ஒரு நாள் மட்டும் சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும். இதற்கான உத்தரவு பின்னர் வெளியிடப்படும்.

## 4 நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடல்




**சென்னை, மார்ச் 30:**

தேர்தல் கமிஷனின் உத்தரவுப்படி, வாக்குப்பதிவு முடியும் நேரத்தில் இருந்து 48 மணி நேரத்திற்கு முன்னதாகவும், வாக்கு எண்ணிக்கை நாளன்றும், டாஸ்மாக் மதுபான கடைகள் மூடப்பட வேண்டும். அதன்படி, தமிழகத்தில் வரும் ஏப்ரல் 21, 22 மற்றும் 23-ந்தேதியும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4ந் தேதியும் டாஸ்மாக் கடைகள் மூடப்படும். அந்த 4 நாட்களும், டாஸ்மாக் கடைகள் மட்டுமல்லாமல், பார்கள், ஓட்டல்கள், கிளப்கள் உள்ளிட்ட அனைத்து வகையான மதுக் கூடங்களும் மூடப்படும்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 6.48 லட்சம் பேர் விண்ணப்பம்: ஏப்ரல் 6-ந்தேதி புதிய பட்டியல் வெளியாகும்

**சென்னை, மார்ச் 30:**

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 6.48 லட்சம் பேர் விண்ணப்பம் செய்துள்ள நிலையில் ஏப்ரல் 6-ந்தேதி புதிய பட்டியல் வெளியாகிறது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தை (எஸ்.ஐ.ஆர்.) மேற்கொண்ட பிறகு இறுதி வாக்காளர் பட்டியல், 23.2.2026 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி தமிழகத்தில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் தேர்தல் காலம் என்பதால் வாக்காளர்களை மேலும் சேர்க்க கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டது. அதன்படி, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 26.3.2026 வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் தமிழகம் முழுவதிலும் இருந்து பெயர் சேர்ப்புக்காக மட்டும் 6 லட்சத்து 48 ஆயிரத்து 285 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்களில் 2 லட்சத்து 89 ஆயிரத்து 581 பேர் ஆண்கள். 3 லட்சத்து 58 ஆயிரத்து 500 பேர் பெண்கள். 204 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள். 26.3.2026 வரை பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு, வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளான 6.4.2026 அன்றுள்ளபடி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும். அந்தப் பட்டியலில் தகுதி வாய்ந்த அனைத்து வாக்காளர்களும் சேர்க்கப்படுவார்கள். நடைபெறவுள்ள சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பயன்படுத்தப்படவுள்ள வாக்காளர் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியலாக இருக்கும். இந்த பட்டியல், இறுதி வாக்காளர் பட்டியல்வெளியிடப்பட்ட 23.2.2026 தேதியில் இருந்து 26.3.2026 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட உள்ளது. வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட அனைத்து சேர்க்கைகளையும் உள்ளடக்கியதாக இந்த பட்டியல் இருக்கும்.வாக்காளர் பட்டியலில் செய்யப்பட்ட சேர்க்கைகள், நீக்கங்கள் மற்றும் திருத்தங்கள் குறித்து தனித்தனியாக பட்டியல்கள் வெளியிடப்படுவதில்லை.மாறாக, அனைத்து வாக்காளர்களும் ஒரே வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் வகையில் தயாரிக்கப்பட்ட பட்டியலே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும். இந்தத் தகவலை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# இனி செல்ல பிராணிகளுக்கும் ஆன் லைனில் உணவு டெலிவிரி




**சென்னை, மார்ச் 30:**

சென்னையில் உள்ள ஒரு புகழ்பெற்ற தாஜ் கன்னிமரா ஹோட்டலில் வைத்து வாக் என் டைன் செல்லப்பிராணிகளுக்கான தனது புதிய கிளவுட் கிச்சனை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

பொதுவாக செல்லப்பிராணிகளுக்கு பதப்படுத்தப்பட்ட உணவுகளையே அதிகம் வழங்கி வருகிறோம். புதிய மற்றும் இயற்கை பொருட்களால் சமைக்கப்பட்ட உணவுகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

பிரபல சமையல் கலைஞர் தாமு இந்த தொடக்க விழாவில் கலந்துகொண்டு, செல்லப்பிராணிகளுக்கான தேவையான உணவின் அவசியத்தை குறித்து அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் சத்தான மற்றும் புதிய கோழி இறைச்சி, சுத்திகரிக்கப்பட்ட மினரல் வாட்டர் மற்றும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கை மூலப்பொருட்களைக்கொண்டு உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

தங்களது செல்லப்பிராணிகளுக்கு தரமான மற்றும் சத்தான உணவுகளை வழங்க வேண்டும் என்ற ஆர்வம் உரிமையாளர்களிடையே வேகமாக அதிகரித்து வருகிறது.

மேலும் இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உணவை நேரடியாக வீட்டிற்கே வரவழைத்து ஆன் லைனில் டெலிவிரி செய்து கொள்ளலாம்.

இதற்கு முன்னதாகவே 2019-ஆம் ஆண்டில் சரண்யா கந்ததாய் என்பவரால் ஸ்லர்பப் என்ற சிறிய அளவிலான கிளவுட் கிச்சன் சென்னையில் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### ஐபிஎல் போட்டிகளில் 3 ஆயிரம் ரன்கள் குவித்து இஷான் கிஷன் சாதனை

**பெங்களூரு, மார்ச் 30:**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளில் குறைந்த பந்துகளில் 3 ஆயிரம் ரன்கள் குவித்து இஷான் கிஷன் சாதனை புரிந்தார்.

2026-ம் ஆண்டு ஐபிஎல் சீசன் நேற்று தொடங்கியது. பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) அணியும், 2016-ம் ஆண்டு சாம்பியனான சன்ரைசரிஸ் ஹைதராபாத் அணியும் மோதின. முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 201 ரன்கள் எடுத்தது. ஹைதராபாத் அணியின் டிராவிஸ் ஹெட் 11, அபிஷேக் சர்மா 7, நித்திஷ்குமார் ரெட்டி 1, ஹெயின்ரிச் கிளாசன் 31, சலில் அரோரா 9, ஹர்ஷ் துபே 3, அனிக்கெட் வர்மா 43 ரன்கள் எடுத்தனர். டேவிட் பெய்ன் 6 ரன்களும், ஜெய் தேவ் உனத்கட் 4 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தப் போட்டியில் கேப்டன் இஷான் கிஷன் அதிரடியாக விளையாடி 38 பந்துகளில் 8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 80 ரன்கள் விளாசினார். இந்த ஆட்டத்தின் போது அவர் ஐபிஎல் போட்டிகளில் 3 ஆயிரம் ரன்களைக் கடந்தார். இதன்மூலம் குறைந்த பந்துகளில் 3 ஆயிரம் ரன்களைக் கடந்த இந்திய வீரர்கள் பட்டியலில் 6-வது இடத்தைப் பிடித்தார் கிஷன். அவர் 2,180 பந்துகளில் 3 ஆயிரம் ரன்களை எடுத்துள்ளார்.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் ரிஷப் பந்த்தும் (2,028 பந்துகள்), 2-வது இடத்தில் யூசுப் பதானும் (2,082 பந்துகள்), 3-வது இடத்தில் சூர்யகுமார் யாதவும் (2,130 பந்துகள்), 4-வது இடத்தில் சுரேஷ் ரெய்னாவும் (2,135 பந்துகள்), 5-வது இடத்தில் எம்.எஸ்.தோனியும் (2,152 பந்துகள்) உள்ளனர். இதைத் தொடர்ந்து 202 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பெங்களூரு அணி விளையாடத் தொடங்கியது.

### மியாமி ஓபன் டென்னிஸ்: இத்தாலி ஜோடி சாம்பியன்



**வாஷிங்டன், மார்ச் 30:**

மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் இரட்டையர் பிரிவுக்கான இறுதிப்போட்டியில் உள்ள இத்தாலியின் சிமோன் பொலேலி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி, பின்லாந்தின் ஹாரி ஹீலியோவரா-பிரிட்டனின் ஹென்றி பேட்டன் ஜோடி உடன் மோதியது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய இத்தாலி ஜோடி 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் வென்றது.

# 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி - செங்கல்பட்டு ஆட்சியர் துவக்கிவைப்பு

**செங்கல்பட்டு, மார்ச் 30:**

சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியிலிருந்து மாமல்லபுரம் வரை சுமார் 35 கி.மீ தூரம் 11,800 பேர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

இதுகுறித்து அரசு வெளிட்டுள்ள அறிக்கையில், ‘ செங்கல்பட்டு மாவட்டம், சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் மிதிவண்டி விழிப்புணர்வு பேரணியையும், விழிப்புணர்வு சுடர் விளக்கினையும் தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

அதனை தொடர்ந்து 100 சதவிகித வாக்குபதிவை வலியுறுத்தி கல்லூரி கூட்டரங்கில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இப்பேரணி 5 கி.மீ பயணித்து திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட படூர் ரவுண்டானாவை சென்றடைந்தது. அங்கு தேர்தல் வழிப்புணர்வு சுடர்விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு தயார் நிலையில் இருந்த பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் 100 நபர்களின் இருசக்கர மோட்டார் வாகன அணிவகுப்பினை கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வழிநடத்தி சென்ற வாகன பேரணி கேளம்பாக்கத்தில் முடிவடைந்தது. அங்கு தேர்தல் விழிப்புணர்வு சுடர் விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு 50 மூன்று சக்கர ஆட்டோ தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவளத்தில் மகளீர் சுய உதவிக்குழுவினரின் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி நடத்தப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார்.

அதன் பின்னர், 50 நான்கு சக்கர மகிழுந்துகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள். தொடர்ந்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற படகுகள் மூலம் மீனவர்கள் நடத்திய தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தேர்தல் ஆட்சியர் பார்வையிட்டார். மேலும் 100 சதவிகித வாக்குபதிவினை வழியுறுத்தி அமைக்கப்பட்டிருந்த தேர்தல் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினை ஆட்சியர் பார்வையிட்டார்.

# சமயபுரம் கோயிலில் மேற்கூரை இடிந்து விழுந்து பெண் பக்தர் உயிரிழப்பு

**திருச்சி, மார்ச் 30:**

சமயபுரம் கோயில் நுழைவு மண்டபத்தில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பெண் பக்தர் உயிரிழந்தார். காயமடைந்த தாய், மகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமயபுரம் மாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழா கடந்த நான்கு வாரங்களாக நடைபெற்று வருகிறது. மாசி மாதம் கடைசி ஞாயிறு தொடங்கி பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை பக்தர்கள் பச்சைபட்டினி விரதம் இருப்பர். இதில் வாரம்தோறும் ஞாயிறு கிழமை அன்று பூச்சொரிதல் விழா விமரிசையாக நடைபெறும்.

அன்றைய தினம் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் பூக்களை கொண்டு வந்து அம்மனுக்கு சாற்றி வழிபடுவர். அந்த வகையில் இன்று 4வது பூச்சொரிதல் விழா நடைபெற்றது.

இதற்காக உள்ளூர், வெளி மாவட்ட பக்தர்கள் நேற்று இரவே கோயிலுக்கு வந்து தங்கினர். திருவையாறு, செபாஸ்தியார் கோயில் தெருவைச் சேர்ந்த மோகன் மனைவி நதியா (32), அவரது உறவினர்கள் தஞ்சாவூர், கள்ளப்பெரம்பூர், மாதாக்கோயில் தெருவைச் சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி ரஞ்சனி (35), இவது மகள் பப்பிக்ஷா (14) ஆகியோர் கோயிலுக்கு நேற்று இரவு வந்துள்ளனர்.

காலை அம்மனை தரிசனம் செய்வதற்காக கோயில் சன்னதி வீதியில் உள்ள நுழைவு வாயில் மண்டபத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு படுத்து உறங்கிக் கொண்டிருந்த நதியா உள்ளிட்ட மூன்று பெண் பக்தர்கள் மீது மண்டபத்தின் கான்கிரீட் மேற்கூரை சுவர் இடிந்து விழுந்தது.

இதில் சம்பவ இடத்திலேயே நதியா பரிதாபமாக உயிரிழந்தார். ரஞ்சனி, பாபிக்ஷா பலத்த காயமடைந்தனர்.


உடனடியாக அருகில் இருந்த மற்ற பக்தர்கள் ரத்த வெள்ளத்தில் கிடந்த இருவரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த சமயபுரம்போலீஸ்இன்ஸ்பெக்டர் தண்டபானி தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்து வந்து நதியாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து சமயபுரம் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். சமயபுரம் கோயில் இணை ஆணையர் சூரியநாராயணன் மற்றும் கோயில் அலுவலர்கள் அங்கு விரைந்து சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டனர். ரத்தம் படிந்திருந்த தரையை சுத்தம்செய்தனர். இச்சம்பவத்தை தொடர்ந்து கோயிலின் கிழக்கு வாசல் நுழைவு வாயில் மண்டபப் பகுதி பேரி கார்டு வைத்து அடைக்கப்பட்டது. வடக்கு வாசல், தெற்கு வாசல் வழியாக பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மேற்கு வாசல் வழியாக பக்தர்கள் வெளியே செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நெரிசலை சமாளிக்க சப்தகிரி உள்பட 6 விரைவு ரயில்களில் கூடுதல் பெட்டி இணைப்பு

**சென்னை, மார்ச் 30:**



தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் வழக்கமான விரைவு ரயில்களில் நெரிசலை குறைக்கும் விதமாக, சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். அந்த வகையில், 6 ரயில்களில் கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்படவுள்ளன.

அதன்படி, சென்னை சென்ட்ரல் - திருவனந்தபுரத்துக்கு இயக்கப்படும் ஏசி அதிவிரைவு ரயிலில் (22207) மார்ச் 31ம் தேதி முதல் மே 5ம் தேதி வரை 2 ஏசி மூன்றடுக்கு பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன. மறு மார்க்கத்தில், இந்த ஏசி அதிவிரைவுரயிலில் (22208) ஏப்.1ம் தேதி முதல்மே6ம்தேதிவரை 2ஏசிமூன்றடுக்கு பெட்டிகள் இணைக்கப்படும்.

சென்னை சென்ட்ரல்- திருப்பதிக்கு இடையே இயக்கப்படும் சப்தகிரி விரைவு ரயிலில் (16053- 16054) கூடுதலாக ஒரு இருக்கை வசதி கொண்ட (சேர்கார்) பெட்டி மார்ச் 30ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை இணைக்கப்படும்.

சென்னை சென்ட்ரல்- திருப்பதிக்கு இடையே இயக்கப்படும் விரைவுரயிலில் (16057-16058) மார்ச் 30ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை ஒரு இருக்கை வசதி கொண்ட (சேர்கார்) பெட்டி கூடுதலாக இணைக்கப்படும்.

சென்னை சென்ட்ரல்- ஈரோடுக்கு இயக்கப்படும் ஏற்காடு அதிவிரைவு ரயிலில் (22649) ஏப்.1ம் தேதி முதல் ஜூன் 4ம் தேதி வரை ஒரு 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டி கூடுதலாக இணைக் கப்படும். மறுமார்க்கத்தில், இந்த விரைவு ரயிலில் (22650). மார்ச் 29ம் தேதி முதல் ஜூன் 1ம் தேதி வரை ஒரு பெட்டி கூடுதலாக சேர்க்கப்படும்.

இதுதவிர, சென்னை செனட்ரல்- சார்லபள்ளி இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயிலில் ஒரு 2ம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டியும், ராமேசுவரம் மங்களூரு சென்ட்ரல் இடையே இயக்கப்படும் வாராந்திர விரைவு ரயிலில் 2 ஏசி மூன் றடுக்கு பெட்டியும் சேர்க்கப்படும். கோடை கால விடுமுறையை முன்னிட்டு, இந்த கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்படுவதன் மூலம், பயணிகளின் நெரிசலை குறைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று, தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

## க்ரைம் கார்னர்

### சிறுமி கொலை வழக்கில் தேடப்பட்ட இளைஞர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொலை

**போபால், மார்ச் 30:**

உத்தர பிரதேச மாநிலத்தின் ஆக்ரா மாவட்டத்தில் உள்ள சித்தார்த் நகரில் சுனில் (29) என்பவர் அங்கு உள்ள காலணி தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்தார். மேலும் தன் முதலாளி வீட்டில் அவர் வாடகைக்கு இருந்து வந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் பிற்பகல் 2 மணியளவில் முதலாளியின் 8 வயது மகள் சிப்ஸ் வாங்க வெளியே சென்றதாக கூறப்படுகிறது. ஆனால், கடைக்கு சென்ற சிறுமி வெகுநேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் அவளது பெற்றோர் பதற்றம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும், அங்கு வேலை பார்த்து வந்த சுனில் பதறியடித்து கொண்டு வந்து. சிறுமியை கண்டுபிடித்துவிடலாம் கவலைப்படாதீர்கள் என்று கூறி, உடனடியாக அருகில் இருந்தவர்களை அழைத்து கொண்டு தேடும் பணியை தொடங்கினார். அந்த பகுதியில் உள்ள அனைத்து தெருவிலும் தேடினார், மேலும் போலீசாருக்கு தகவல் புகார் அளிக்கவும் உதவினார். இதனால் சிறுமி தேடுதல் தொடர்பாக அவர் மீது யாருக்கும் சந்தேகம் வரவில்லை. இரண்டு நாட்கள் ஆகியும் சிறுமி கிடைக்கவில்லை. இந்நிலையில், சுனில் தங்கியிருந்த வாடகை அறையிலிருந்து ஒருவித துர்நாற்றம் வந்தது. கதவை உடைத்து உள்ளே சென்ற குடும்பத்தினர் கண்ட காட்சி நெஞ்சை உலுக்கியது. அங்கே ஒரு பெரிய மாவு கண்டெய்னர் இருந்தது அதில் சிறுமியின் உடல் சடலமாக கிடந்தது. தகவல் கிடைத்த உடன் போலீசார் தனிப்படை அமைத்து சுனிலை தேடும் பணியில் ஈடுபட்டனர். மேலும் குற்றாவளியை கைது செய்ய தகவல் கொடுப்பவருக்கு ரூ.25,000 வெகுமதியும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரோசாபாத்திற்கு தப்பி செல்ல முயன்ற குற்றவாளி சுனிலை போலீசார் சுற்றி வளைத்த பிடிக்க முயன்றபோது, குற்றாவளி தன் துப்பாக்கி எடுத்து சுட தொடங்கினான். இதில் உதவி ஆய்வாளர் ஒருவர் காயமடைந்தார். இந்த தாக்குதலுக்கு போலீசார் பதிலடி கொடுத்ததில், சுனில் என்கவுன்ட்டர் செய்யப்பட்டதாக அதிகாரி கூறினார். உடனே காயமடைந்த குற்றாவளியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றநிலையில், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

### தலையை வெட்டி வீட்டிற்கு கொண்டு சென்ற நபர் - உ.பி.யில் அதிர்ச்சி சம்பவம்

**லக்னோ, மார்ச் 30:**

உத்தர பிரதேச மாநிலம் பராபங்கி மாவட்டத்தை சேர்ந்த ஐஸ்கிரீம் வியாபாரி பப்லு(வயது 25). இவருக்கு மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். மேலும், இவருக்கு 2 தம்பிகளும் உள்ள நிலையில், பப்லு ஐஸ்கிரீம் வியாபாரத்திற்கும், கூலி வேலைகளுக்கும் சென்று தனது குடும்பத்தை நடத்தி வந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று ஐஸ்கிரீம் விற்பனை செய்வதற்காக பர்சாவால் என்ற கிராமத்திற்கு பப்லு சென்றுள்ளார். அங்கு அவர் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அந்த கிராமத்தை சேர்ந்த சங்கர் யாதவ்(வயது 50) என்ற நபருக்கும் பப்லுவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த வாக்குவாதம் மோதலாக மாறிய நிலையில், ஆத்திரமடைந்த சங்கர் யாதவ், தன்னிடம் இருந்த அரிவாளை எடுத்து பப்லுவின் கழுத்தை அறுத்துள்ளார். மேலும், அதே இடத்தில் வைத்து பப்லுவின் தலையை சங்கர் யாதவ் வெட்டி துண்டித்துள்ளார். இந்த கொடூர சம்பவத்தைக் கண்டு அப்பகுதியில் இருந்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். ஆனால் சங்கர் யாதவ் எதுவும் நடக்காதது போல் மிக சாதாரணமாக பப்லுவின் வெட்டப்பட்ட தலையை கையில் எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்கு சென்றார். இதனிடையே, சம்பவம் குறித்து தகவலறிந்து போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் சங்கர் யாதவின் வீட்டிற்குள் அதிரடியாக நுழைந்து அவரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர். போலீசார் சங்கர் யாதவை கைது செய்ய அவரது வீட்டிற்குள் நுழைந்தபோது, அவர் பப்லுவின் தலையை பக்கத்தில் வைத்துக் கொண்டே தனது சமையல் வேலையை பார்த்துக் கொண்டிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது. சங்கர் யாதவின் வீட்டில் இருந்து பப்லுவின் தலையையும், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட அரிவாளையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

## வணிகச் செய்திகள்

### தூத்துக்குடி - சென்னை இடையே இரவு விமான சேவை தொடக்கம்

**சென்னை, மார்ச் 30:**

தூத்துக்குடி விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டு பிரதமர் மோடி திறந்து வைத்தார். இங்கு பெரிய விமானங்கள் தரையிறங்குவதற்கான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் இரவு நேர விமான சேவைக்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தனியார் விமான நிறுவனம் மூலம் தூத்துக்குடி-சென்னை இடையே காலை 8 மணி, 11.25 மணி, மதியம் 1.50 மணி, மாலை 4.15 மணி ஆகிய 4 விமான சேவையும். தூத்துக்குடி- பெங்களூரு இடையே மதியம் 12.15 மணிக்கு ஒரு விமான சேவையும் வழங்கப் பட்டு வருகிறது.

தினமும் 5 விமானங்கள் தூத்துக்குடி விமான நிலையத்துக்கு வந்து செல்கின்றன. இந்நிலையில், தூத்துக்குடி-சென்னை இடையே இரவு நேர விமான சேவையை தனியார் விமான நிறுவனம் (29ம் தேதி) முதல் தொடங்குகிறது. தூத்துக்குடியில் இருந்து காலை 8 மணிக்கு சென்னை புறப்படும் விமானம் காலை 8.10 மணிக்கும், காலை 11.25 மணிக்கு புறப்படும் விமானம் 12.05 மணிக்கும், 12.15 மணிக்கு புறப்படும் பெங்களூரு விமானம் மதியம் 1.10 மணிக்கும், மாலை 4.15 மணிக்கு புறப்படும் சென்னை விமானம் 4.10 மணிக்கும் புறப் பட்டு செல்லும் என அறிவிக்கப் பட்டுள்ளது. தற்போது மதியம் 1.50 மணிக்கு சென்னைக்கு புறப்பட்டு செல்லக்கூடிய விமானம் இரவு நேர விமான மாக மாற்றப்பட்டுள்ளது.

# அதானி நிறுவனம் தயாரித்த 2,000 துப்பாக்கிகள் இந்திய ராணுவத்திற்கு வழங்கப்பட்டன!

புதுடெல்லி, மார்ச் 30:

அதானி டிஃபென்ஸ் (பாதுகாப்பு) நிறுவனம் தயாரித்த 2,000 இலகுரகதுப்பாக்கிகள் இந்திய ராணுவத்திடம் வழங்கப்பட்டன.

மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் (பாதுகாப்பு மற்றும் விண்வெளி) நிறுவனம் தயாரித்த 'பிரஹார்' எனப்படும் 7.62 மிமி அளவு கொண்ட 2,000 இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளின் முதல் தொகுதி இந்திய ராணுவத்திடம் இன்று வழங்கப்பட்டன.



மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் அமைந்துள்ள இந்நிறுவன வளாகத்தில் இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளை ராணுவத்திடம் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

இதில், பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கொள்முதல் துறை தலைமை இயக்குநர் அன்பரசு, அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் (பாதுகாப்பு மற்றும் விண்வெளி) நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி ஆஷிஷ் ராஜ்வன்ஷி மற்றும் சில உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இராணுவத்திற்கு வழங்கவிருந்த துப்பாக்கிகள் அடங்கிய டிரக் வாகனங்களை அன்பரசு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இதுபற்றிப் பேசிய ராஜவன்ஷி, "ஒப்பந்தம் தொடங்கிய நாள் முதல் இந்தப் பயணத்திற்கு இன்று வரை 6 ஆண்டுகள் ஆகியுள்ளன. எங்களுக்கு 7 ஆண்டுகள் இந்தப் பணிக்காக வழங்கப்பட்டது. ஆனால், திட்டமிட்டதற்கு 11 மாதங்கள் முன்னதாகவே துப்பாக்கிகளைத் தயாரித்து வழங்கியுள்ளோம்.

அடுத்த 3 ஆண்டுகளில் மொத்த ஆர்டர்களையும் தயாரித்து வழங்குவோம் என்று நான் உறுதியளிக்கிறேன்" என்று கூறினார்.

மொத்தமாக 40,000 இலகுரக இயந்திரத்துப்பாக்கிகள் தயாரிக்க ஆர்டர் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்கு முன்பாக துப்பாக்கிளை விநியோகித்து, பல மாதங்களை மிச்சப்படுத்தியதற்காக அதானி நிறுவனத்தைப் பாராட்டிய அன்பரசு, "ஒப்பந்தங்களைச் செயல்வடிவமாக மாற்றுவதில், காலத்திற்கு எதிராக 'வேகமாகச் செயல்பட்டு இலக்கை எட்டும்' ஆற்றல் உங்களுக்கு இருப்பதை இது உணர்த்துகிறது. பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில் கூட்டமைப்புடன் அரசு என்றும் துணை நிற்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# எல்பிஜி தட்டுப்பாட்டால் பிஎன்ஜிக்கு மாறும் மக்கள்

புதுடெல்லி, மார்ச் 30:

அமெரிக்கா, ஈரான் போர் காரண மாக நாடு முழுவதும் வணிக, வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண குழாய் வழி காஸுக்கு (பிஎன்ஜி) மாற வேண்டும் என்று மத்திய அரசு அண்மையில் அழைப்பு விடுத்தது.

தமிழகம், மகாராஷ்டிரா, டெல்லி, உத்தர பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களின் பல்வேறு நகரங்களில் பிஎன்ஜி காஸுக்கான குழாய்கள் பதிக்கப்பட்டு உள்ளன. எல்பிஜி சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இந்த நகரங்களில் குழாய் வழி பிஎன்ஜி காஸுக்கு பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் மாறி வருகின்றனர். கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும்போது எல்பிஜி சமையல் காஸ் கிடைக்கிறது. இது புரோப்பேன், பியூட்டேன் வாயுக்களின் கலவை ஆகும். இதற்கு மணம் கிடையாது. ஆனால் எல்பிஜி கசிவை கண்டறிய ஈத்தைல் மெர்கேப்டன் என்ற வேதிப்பொருள் சேர்க்கப்படுகிறது. இதன்மூலமே எல்பிஜி காஸ் கசிவை கண்டறிய முடிகிறது.

பிஎன்ஜி காஸ் என்பது இயற்கை எரிவாயு ஆகும். பெரும்பாலும் மீத்தேன் எரிவாயு ஆகும். நிலத்தடியில் உள்ள இயற்கை எரிவாயு கிணறுகளில் இருந்து மீத்தேன் பிரித்தெடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் வீடுகள், ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சுமார் 50% பிஎன்ஜி காஸ் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இதுகுறித்து பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், "HTTPS://MYPNGD.IN/ என்ற இணையதளத்தில் நுழைந்து உங்களது மொபைல் போன் எண் அல்லது எல்பிஜி இணைப்பு எண்ணை பதிவு செய்ய வேண்டும். பின்னர் சரண்டர் செய்வதற்கான விருப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். உங்கள் வீட்டில் இருந்தபடியே எளிதாக எல்பிஜி இணைப்பை துண்டிக்கலாம். இதர நடவடிக்கைகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட ஏஜென்ஸிகளே மேற்கொள்ளும்" என கூறப்பட்டு உள்ளது. முன்னதாக, பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு கவிதா அக்கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இணையவழி வர்த்தகப் பரிமாற்றங்களுக்கான சுங்க வரி விலக்கு நீட்டிப்பு: இந்தியா எதிர்ப்பு

புதுடெல்லி, மார்ச் 30:

கேமரூன் நாட்டில் நடைபெற்று வரும் உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள் மாநாட்டில், இணையவழி வர்த்தகப் பரிமாற்றங்களுக்கான சுங்க வரி விலக்கை நீட்டிப்பது தொடர்பாக இந்தியா மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இடையே கடும் கருத்து வேறுபாடு நிலவி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்னணு முறையில் பரிமாறப்படும் மென்பொருள்கள், மின்னணு புத்தகங்கள் மற்றும் தரவுகள் மீதான சுங்க வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த வரி விலக்கு நீட்டிப்பால் தங்களுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும், உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும் கூறி இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் இதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளன. இதன் காரணமாக, 2 முதல் 4 ஆண்டுகள் வரை தற்காலிகமாக இந்த வரி விலக்கை நீட்டிக்கும் வகையில் ஒரு சமரச முடிவு எட்டப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

# மேற்கு வங்கம்: 294 தொகுதிகளிலும் காங்கிரஸ் தனித்து போட்டி!





புதுடெல்லி, மார்ச் 30:

மேற்கு வங்கத்தில் பேரவைத் தேர்தலில் 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுவதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. மேலும், தேர்தல் பணிகளில் கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், மாநிலத்தின் 294 தொகுதிகளில் காங்கிரஸ் தனித்து போட்டியிடவிருப்பதாக கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

தில்லியில் மேற்கு வங்கத்தின் தேர்தல் தொடர்பாக நடைபெற்ற காங்கிரஸின் தேர்தல் குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் மற்றும் மேற்கு வங்க காங்கிரஸின் முக்கிய தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது, மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் மற்றும் பாஜகவுக்கு எதிராக 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்து, மேற்கு வங்கத்துக்கான காங்கிரஸ் கமிட்டியின் பொறுப்பாளர் குலாம் அகமது மிர் அறிவிக்கையில், ஒவ்வொரு தொகுதியிலும் வேட்பாளர்களை நிறுத்த கட்சி முடிவு செய்துள்ளது. ஒரு முழுமையான போட்டியை எதிர்கொள்ளவுள்ளோம்.

மேலும், பவானிபூரில் நிச்சயமாக வலிமை வாய்ந்தவர்தான் போட்டியிடுவார். எந்த இடத்தையும் காலியாக விடுவதாய் இல்லை என்று தெரிவித்தார்.

மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, திரிணமூல் காங்கிரஸ் சார்பாக பவானிபூரில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

# கோயிலில் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் மோதல்: 7 பேர் கைது

பெங்களூரு, மார்ச் 30:

கர்நாடகாவில் கோயிலில் புகைப்படக் கலைஞர்கள் காலணி அணிந்து திருமணத்துக்காகப் புகைப்படம் எடுத்ததால் 7 பேர் கொண்ட கும்பலால் தாக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார் 7 பேரையும் கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் சக்லேஷ்பூரில் பெட்டத பைரேஸ்வரா கோயில் உள்ளது. அங்கு நேற்று புகைப்படக் கலைஞர்கள் நவி (27), நந்தன் (25) ஆகியோர் புதுமணத் தம்பதியினரைப் புகைப்படம் எடுப்பதற்காக வந்தனர். அப்போது நவியும், நந்தனும் காலணி அணிந்து புகைப்படம் எடுத்ததால் பக்தர்கள் கோபமடைந்தனர். இருவரையும் கோயிலுக்கு வெளியே காலணிகளைக் கழற்றி விட்டு வருமாறு கூறியுள்ளனர். இதில் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் கோபமடைந்த உள்ளூர் இளைஞர்கள் 10-க்கும் மேற்பட்டோர் நவி, நந்தனை கடுமையாக தாக்கினர். மேலும் அவர்களின் கேமராக்களைப் பறித்து கீழே போட்டு உடைத்தனர். இதனால் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்த போலீஸார் காயமடைந்த புகைப்படக் கலைஞர்களை மீட்டு, மருத்துவமனையில் அனுமதித்தனர். இருவரும் அளித்த புகாரின் பேரில் 7 பேரை கைது செய்தனர்.

# 10 ஆண்டுகளில் 10,000 மாவோயிஸ்டுகள் சரண்!



புதுடெல்லி, மார்ச் 30:

கடந்த பத்தாண்டுகளில் 10,000 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அழுத்தம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகள் நாட்டின் மிக நீண்டகால போராட்டங்களுள் ஒன்றான நக்ஸல் வாதத்துக்கு ஒரு மரண அடியைக் கொடுத்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் 10,000 க்கும் மேற்பட்ட மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டதோடு அந்த அமைப்பின் உயர்நிலைத் தலைவர்களும் ஒழிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2014 முதல் 2026 ஆம் ஆண்டின் தொடக்கம் வரையிலான இடதுசாரி பயங்கரவாத அமைப்புகளின் சரணடைவுகள் குறித்த அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் 2300 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டனர்.

மேலும் 2026 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 630 க்கும் மேற்பட்ட போராளிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பொது வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தனர்.

நாட்டிலிருந்து நக்ஸல்வாதத்தை ஒழிப்பதற்கான காலக்கெடுவாக மார்ச் 31 ஐ மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# "லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை" - அமித் ஷா பேச்சு



குவஹாட்டி, மார்ச் 30:

லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். அசாம் மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர் தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"லாக்-டவுனுக்கு வாய்ப்பு இல்லை. தேசம் முழுவதும் நிலைமை சீராக உள்ளது. மற்ற நாடுகளில் இப்படி இல்லை. சர்வதேச அளவில் எரிபொருள் சார்ந்த நெருக்கடி நிலை எழுந்துள்ளது. பிலிப்பைன்ஸில் தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எரிபொருள் விற்பனையில் 8 லிட்டர் என்ற வரம்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் வீட்டில் இருந்து பணியாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வியட்நாமில் விமான இயக்க எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, பாகிஸ்தானில் வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே பணி என அறிவிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் இப்படி இருக்கும் சூழலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. நமது பிரச்சினைகளை நாம் தான் எதிர்கொள்ள வேண்டும். அந்த வகையில் பெட்ரோல், டீசல் மாதிரியான எரிபொருள் மற்றும் எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு நாட்டில் இல்லை. வழக்கம் போலவே சந்தையில் அதன் விநியோகம் உள்ளது. தேசம் முழுவதும் அதை உறுதி செய்து வருகிறோம். அதற்கான பணியை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். உலக நாடுகளில் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மட்டுமே பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை. கலால் வரியை குறைத்து சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. உலகில் வேறு எந்த நாடும் இதை செய்யவில்லை" என அமித் ஷா தெரிவித்துள்ளார்.

# மே.வங்க தேர்தலில் மம்தாவுக்கு இணையாக முக்கியத்துவம் பெறும் மருமகன் அபிஷேக்

புதுடெல்லி, மார்ச் 30:

மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸின் (டிஎம்சி) இளைஞர் பிரிவு தலைவராக இருப்பவர் அபிஷேக் பானர்ஜி. மக்களவை எம்.பி.யான இவரை முதல்வர் மம்தா தனது வாரிசாக முன்னிறுத்தி வருகிறார். இதனால் கட்சியில் மம்தாவுக்கு அடுத்த நிலை தலைவராக அபிஷேக் முன்னிறுத்தப்படுகிறார்.

இந்நிலையில் 2026 தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் மம்தாவுக்கு இணையான தலைவராக அபிஷேக் உருவெடுத்துள்ளார். இருவரின் ஒருங்கிணைந்த தலைமை, மேற்கு வங்க அரசியலில் ஒரு தனித்துவமான அரசியல் நிலையை உருவாக்கியுள்ளது. முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக அபிஷேக் மாறி வருகிறார். இது, மாநில தேர்தல் அரசியலில் மம்தாவின் மருமகன் அபிஷேக்கின் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகப் பார்க்கப்படுகிறது.

சுமார் 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்த இடதுசாரி கட்சிகளுக்கு பின் டிஎம்சி ஆட்சிக்கு வந்தது. அப்போது டிஎம்சியில் உறுப்பினரான அபிஷேக், கடந்த 2021 சட்டப்பேரவை மற்றும் மக்களவை தேர்தல்களின் போதும் தீவிரப் பங்கு வகித்திருந்தார். இருப்பினும், தற்போதைய பிரச்சாரத்தில் மம்தா - அபிஷேக் இடையே காணப்படும் ஒருங்கிணைப்பின் அளவு இதுவரை இல்லாத வகையில் உள்ளது.

கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் கொல்கத்தாவின் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யானார் அபிஷேக். அப்போது முதல் அதே தொகுதியில் எம்.பி.யாக வென்று வருகிறார். இம்மாநிலத்தில் பாஜக முக்கிய எதிர்க்கட்சியாக படிப்படியாக உருவெடுத்துள்ளது.

இந்த தேர்தலில் பாஜக தனது அரசியல் ஆக்ரோஷத்தை கடுமையாக வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகை அரசியல் கடந்த நான்கு தசாப்தங்களாக மேற்கு வங்கத்தில் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. எனவே, தற்போதைய சட்டப்பேரவை தேர்தல், டிஎம்சி மற்றும் பாஜக இடையே கடுமையானப் போட்டியை ஏற்படுத்தி உள்ளது.

# இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதம் 80 சதவீதம் குறைவு...

புதுடெல்லி, மார்ச் 30:

இந்தியாவில் கடந்த 33 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதம் (எம்எம்ஆர்) 80 சதவீதம் வரை குறைந்து விட்டதாக லான்செட் மகப்பேறியல், மகளிர் நோய்களுக்கான சிகிச்சை மற்றும் சுகாதார ஆய்விதழ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



கர்ப்பம், மகப்பேறு அல்லது பிரசவத்துக்குப் பிந்தைய 42 நாள்களுக்குள் தாய் உயிரிழப்பது மகப்பேறு இறப்பு எனப்படுகிறது. இது ஒரு லட்சம் குழந்தை பிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இதுதொடர்பாக லான்செட் இதழில் உலகளவில் நோய்களால் ஏற்படும் சுமை -2023 என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பாக வெளியான அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியாவில் 1990-இல் 1 லட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 508 தாய்மார்கள் இறப்பு என்றிருந்த விகிதம், 2023-இல் 116-ஆக குறைந்துள்ளது. 2023-ஆம் ஆண்டில் 24,700 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர்.

இதே காலகட்டத்தில் பாகிஸ்தானில் 10,300 தாய்மார்களும் எத்தியோப்பியாவில் 11,900 மற்றும் நைஜீரியாவில் 32,900 தாய்மார்களும் உயிரிழந்துள்ளனர். 2023-இல் உலகம் முழுவதும் 2.40 லட்சம் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் உலக அளவிலான மகப்பேறு இறப்பு விகிதம் 190.5-ஆக உள்ளது.

இது 1990-இல் 321-ஆக இருந்த நிலையில் வெகுவாக குறைந்துள்ளது. 104 நாடுகள் இலக்கை எட்டவில்லை: 2030-க்குள் மகப்பேறு இறப்பு விகிதத்தை 70-ஆக குறைக்க உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ் (எஸ்டிஜி) அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 204 நாடுகளில் 104 நாடுகள் இந்த இலக்கை தற்போது வரை அடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு உலக அங்கீகாரம்: அண்மையில் வெளியிடப்பட்ட 2021-2023 காலகட்டத்துக்கான மாதிரி பதிவு முறையின்படி இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதம் 88-ஆக உள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை வட்டாரங்கள் கூறுகையில், 'இந்தியாவில் 1990-இல் இருந்து மகப்பேறு இறப்பு விகிதம் 86 சதவீதம் குறைந்துள்ளதாகவும் உலக அளவில் இது 48 சதவீதமாகவும் உள்ளதாகவும் அண்மையில் ஐ.நா.வின் மகப்பேறு இறப்பு மதிப்பீட்டுக் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவின் சுகாதார முன்னெடுப்புகளுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதற்கு இதுவே சான்று. இதுதொடர்பாக 2030-க்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை இந்தியா அடைந்துவிடும்' எனத் தெரிவித்தன.

# கென்யாவில் வெள்ளம்; பலி எண்ணிக்கை 108 ஆக உயர்வு



**நைரோபி, மார்ச் 30:**

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கென்யாவில் இந்த மாத தொடக்கத்தில் கனமழை பெய்தது. தொடர்ந்து பெய்த கனமழையால், நகரம் முழுவதும் வெள்ளக்காடானது.

பல்வேறு இடங்களிலும் நீர் சூழ்ந்தது. குடியிருப்புகள், கட்டிடங்கள் ஆகியவை நீரில் மூழ்கின. வாகனங்கள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டன. மின் வினியோகம் தடைபட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. விமானம் உள்ளிட்ட போக்குவரத்து சேவையும் கடுமையாக பாதிப்படைந்தது. கனமழை மற்றும் வெள்ள பாதிப்புகளை அடுத்து, 2,700 குடும்பங்கள் பாதுகாப்பு தேடி வேறு பகுதிகளுக்கு சென்று விட்டன. வெள்ள பாதிப்பில் சிக்கி இதுவரை 108 பேர் பலியாகி உள்ளனர். இதனை கென்ய தேசிய போலீசார் வெளியிட்ட தகவல் தெரிவிக்கின்றது. ஒரு சில பகுதிகளில் மழை ஓய்ந்தபோதும், கழிவுநீர் ஓடைகளில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தரை பகுதியை நீர் சூழ்ந்துள்ளது. இதனால் வெள்ளத்தின் பாதிப்பு தொடர்கிறது என்று மக்களுக்கு போலீசார் எச்சரிக்கை தெரிவித்து உள்ளனர்.

# இஸ்ரேல் ராணுவ தளங்கள் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தொடர்ச்சியாக தாக்குதல்

**பெய்ரூட், மார்ச் 30:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்தி வரும் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. 4 வாரங்களாக நீடித்து வரும் இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவாக லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு செயல்பட்டது. இதனால், லெபனானையும் இஸ்ரேல் தாக்கியது. இடையில் ஹமாஸ் அமைப்பும் தாக்குதலை தொடுத்தது. இந்த சூழலுக்கு இடையே, ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேலின் தாக்குதல் தொடர்ந்து அதிகரிக்கும் என்றால், நாங்கள் நேரடியாக ராணுவ மோதலில் ஈடுபட தயாராக இருக்கிறோம் என்று ஏமன் நாட்டிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இந்த சூழலில், இஸ்ரேலின் வடக்கே அல்-மலிகியா பகுதியிலுள்ள வாகனங்கள் மற்றும் இஸ்ரேல் படையினர் மீது சால்வோஸ் ரக ராக்கெட்டுகளை ஏவி ஹிஸ்புல்லா அமைப்பு இன்று காலை தாக்குதல் நடத்தியுள்ளது. லெபனானில் இருந்து செயல்படும் அந்த அமைப்பு, இஸ்ரேலின் வடக்கே உள்ள சாபேத் நகரருகே இஸ்ரேல் ராணுவ தளங்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்கு அந்த அமைப்பு பொறுப்பேற்று கொண்டுள்ளது. தொடர்ந்து, சாபேத் நகரில் இருந்து சற்றே தொலைவிலுள்ள மஹவா ஆலன் ராணுவ தளம் மீதும் பெரியா தளத்தின் மீதும் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. தெற்கு லெபனானின் டெய்ர் சிரியன் பகுதியில் இஸ்ரேலின் பீரங்கி படைகள் மீதும் தாக்குதல் நடத்தினோம் என்று ஹிஸ்புல்லா கூறியுள்ளது. இதனால், லெபனானில் எல்லை கடந்து தரை வழி தாக்குதலில் இஸ்ரேல் ஈடுபட்டு உள்ளது உறுதியாகி உள்ளது.

# சமூக வலைத்தளத்தால் மனநலம் பாதித்த அமெரிக்க பெண்ணுக்கு ரூ.50 கோடி இழப்பீடு: லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் உத்தரவு

**நியூயார்க், மார்ச் 30:**

அமெரிக்காவில் சிறுவயதில் சமூகவலைதள அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டதாக வழக்கு தொடர்ந்த இளம் பெண் "கேலி"க்கு 6 மில்லியன் டாலர் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸ் நகரில் நடைபெற்ற இந்த வழக்கில், தற்போது 20 வயதான கேலி, தனது சிறுவயதில் சமூக வலைதளங்களின் வடிவமைப்பு தான் அடிமைத்தனத்தை உருவாக்கி, மனநல பாதிப்புகளை ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டினார்.

இந்த வழக்கை விசாரித்த நடுவர் குழு, இன்ஸ்டாகிராம், பேஸ்புக், வாட்ஸ்அப் ஆகியவற்றின் தாய் நிறுவனமான மெட்டா மற்றும் யூடியூப் தளத்தை கொண்டுள்ள கூகுள் நிறுவனங்கள், தங்களது தளங்களை "திட்டமிட்டு அடிமைப்படுத்தும் வகையில் வடிவமைத்துள்ளன" என்றும், "தீங்கிழைக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ளன" என்றும் தெரிவித்தது.

இதையடுத்து, இளம் பெண் கேலிக்கு மொத்தம் 6 மில்லியன் டாலர் (சுமார் ரூ.50 கோடி) இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதில் 3 மில்லியன் டாலர் இழப்பீடும், மேலும் 3 மில்லியன் டாலர் தண்டனைத் தொகையும் அடங்கும். இந்த தொகையில் 70% மெட்டா நிறுவனமும், 30% கூகுள் நிறுவனமும் வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால், இந்த தீர்ப்பை இரு நிறுவனங்களும் மறுத்து, தங்களை வலுவாக பாதுகாப்போம் என தெரிவித்துள்ளன. "ஒரு செயலி மட்டும் மனநல பிரச்சினைகளுக்கு காரணமாகக் கருத முடியாது" என்று மெட்டா நிறுவனம் கூறியுள்ளது.

இதேபோல், "யூடியூப் என்பது பொறுப்புடன் உருவாக்கப்பட்ட ஸ்ட்ரீமிங் தளம்; இது ஒரு சமூக வலைதளம் அல்ல" என்று கூகுள் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

இதற்கிடையில், சமூக ஆர்வலர்கள் இந்த தீர்ப்பை ஒரு முக்கிய திருப்புமுனையாக வரவேற்றுள்ளனர். "சமூக வலைதளங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பானவை அல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது; நிறுவனங்கள் இதை சரி செய்ய வேண்டும்" என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த வழக்கு நடைபெறும் ஐந்து வாரங்களும், சமூக வலைதளங்களால் பாதிக்கப்பட்டதாக கூறும் பல குழந்தைகளின் குடும்பத்தினர் நீதிமன்றம் வெளியே திரண்டு இருந்து ஆதரவு தெரிவித்தனர். இந்த தீர்ப்பு, குழந்தைகளுக்கு எதிரான ஆபத்துகள் குறித்து மெட்டா நிறுவனத்தை பொறுப்புக்கூற வைத்த நியூ மெக்சிகோ மாநில தீர்ப்புக்குப் பிந்தையதாகும். சமூக வலைதளங்களின் மீது பொதுமக்களின் எதிர்மறை மனப்பான்மை அதிகரித்து வருவதை இந்த தீர்ப்புகள் காட்டுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# போர் நிறுத்தம் பற்றி பேசிக்கொண்டே தாக்குதலுக்குத் திட்டமிடும் அமெரிக்கா: ஈரான்



**டெல் அவிவ், மார்ச் 30:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தத் தொடங்கி ஒரு மாதத்தை கடந்த நிலையில் கலிபாஃப் அமெரிக்காவின் தந்திரமான நடவடிக்கை பற்றி பேசியுள்ளார்.

உலகின் 20% கச்சா எண்ணெய்போக்குரவத்துக்கான கடல்வழியான கோர்முஸ் நீரிணை போரின் காரணமாக வெகு சில நாடுகள் தவிர்த்து பெரும்பாலான நாடுகளுக்கு மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்று ஈரான் நாடாளுமன்றத்தில் பேசிய அவைத் தலைவர் முகமது பாகேர் கலீபாஃப், "நமது எதிரி பொதுவில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான செய்திகளை அனுப்பிக்கொண்டே தரைவழித் தாக்குதலுக்குத் திட்டமிட்டு வருகின்றனர்.

அமெரிக்க ராணுவ வீரர்கள் இங்கு வந்தால் அவர்களை தீயிட்டுக் கொளுத்தி நிரந்தரமாக தண்டிப்பதற்கு நமது வீரர்கள் தயாராக உள்ளனர்" என்று அவர் பேசினார்.

மேலும், "நாம் மிகவும் நெருக்கடியான காலத்தில் மிகப்பெரிய உலகளாவியப் போரை எதிர்கொண்டுள்ள நிலையில் ஈரானியர்களான நாம் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்.

அமெரிக்காவைத் தண்டித்து ஈரானை தாக்கியதற்காக அவர்களை வருந்தச் செய்து நமது உரிமைகளை நிலைநாட்ட நாம் உறுதியாக உள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

# டிரம்ப்புக்கு எதிராக கொதித்தெழுந்த மக்கள்! அமெரிக்காவில் மாபெரும் போராட்டம்!

**வாஷிங்டன், மார்ச் 30:**

அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு எதிராக மாபெரும் மக்கள் போராட்டம் வெடித்தது.

ஈரான் போர், அதனால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு மற்றும் டிரம்ப் நிர்வாகத்தின் கொள்கைகளால் அமெரிக்க மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன் வெளிப்பாடாக 'அரசர்கள் வேண்டாம்' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் பல்வேறு இடங்களில் திரண்டு டிரம்ப் மீதான கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

அமெரிக்கா எங்கிலும் சனிக்கிழமை (மார்ச் 28) வெவ்வேறு பகுதிகளில் சுமார் 3000-க்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. போராட்டத்தில் பங்கேற்றவர்கள், "ஜனநாயகம் அச்சுறுத்தலில் உள்ளது. டிரம்ப் நிர்வாகத்தின் மீது மிகுந்த அதிருப்தி அடைந்த மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர். இந்த நாட்டில் நமக்கு ஜனநாயகம் வேண்டுமென்றால், நாம் போராட்டத்தில் ஈடுபட்டு அதைக் காப்பாற்ற வேண்டும்" என்று மனக்குமுறல்களைக் கொட்டினர்.

செயின்ட் பாலில் உள்ள மினசோட்டா கேபிடல் புல்வெளியிலும் அதைச் சுற்றியுள்ள தெருக்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்துக்குத் துணைநின்றனர்.

அவர்களில் சிலர், வரலாற்று ரீதியாக அமெரிக்கக் கொடிகளைத் தலைகீழாகப் பிடித்திருந்தனர். கிட்டத்தட்ட 85 லட்சம் மக்கள் வசிக்கும் நியூயார்க் நகரத்திலிருந்து, 2024 தேர்தலில் டிரம்ப் 66% வாக்குகளுடன் வெற்றி பெற்ற மாகாணமான கிழக்கு இடாஹோவில் உள்ள 2000க்கும் குறைவான மக்கள் வசிக்கும் டிரிக்ஸ் என்ற ஊர் வரை மக்கள் திரண்டனர்.

வாஷிங்டனில், நூற்றுக்கணக்கானோர் "கிரீடத்தைக் கீழே போடு கோமாளியே" மற்றும் "ஆட்சி மாற்றம் வீட்டிலிருந்தே தொடங்குகிறது" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியபடி, பேரணியாகச் சென்றனர்.

கேன்சஸ் மாகாணத்தின் டோபெகா நகரில், போராட்டக்காரர்கள் காற்றடைக்கப்பட்ட தவளை உடையையும், டிரம்பின் குழந்தை வடிவத்தையும் அணிந்திருந்தனர்.

'அரசர்கள் வேண்டாம்' போராட்டங்களின் முதல் இரண்டு கட்டங்களில், ஜூன் மாதத்தில் 5 மில்லியனுக்கும் அதிகமானோரும், அக்டோபர் மாதத்தில் 7 மில்லியனுக்கும் அதிகமானோரும் கலந்து கொண்டதாக ஏற்பாட்டாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் இந்திய வம்சாவளி இளைஞர் உள்பட 4 பேர் கைது

**வாஷிங்டன், மார்ச் 30:**

அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாகாணத்தில், சமூக வலைதளங்கள், வீடியோ கேம் விளையாட்டுகள் உள்ளிட்டவை மூலமாக குழந்தைகள் மற்றும் சிறுமிகளை தொடர்பு கொண்டு, அவர்களை பாலியல் அத்துமீறலுக்கு பயன்படுத்தி வந்த ஒரு குழுவை போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இந்த குழுவை பிடிப்பதற்கு போலீசார் போலியான சமூக வலைதள கணக்குகளை தொடங்கி, சம்பந்தப்பட்ட குழுவைச் சேர்ந்தவர்களிடம் பேச்சு கொடுத்துள்ளனர். பின்னர் அவர்களின் இருப்பிடத்தை நெருங்கி அவர்களை சுற்றி வளைத்து கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார். அவரது பெயர் நாகராஜு பால்கம்(வயது 26) ஆகும். மேலும், இந்த குழுவைச் சேர்ந்த எட்வர்டோ ராமிரெஸ்(வயது 59), ஹரோல்ட் ஆடம்ஸ்(வயது 55) மற்றும் தாமஸ் காக்ஜோ(வயது 29) ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து, கைது செய்யப்பட்டவர்களிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேலும் 2 எல்பிஜி கப்பல்கள் இந்தியா வர ஈரான் அனுமதி

**டெஹ்ரான், மார்ச் 30:**

மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது.

ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜல சந்தியை ஈரான் மூடியது. கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 5-ல் ஒரு பங்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகத்தான் நடைபெறுகிறது. இதை ஈரான் மூடியதால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. ஹார்முஸ் ஜலசந்தியை திறந்து வட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால் இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், இராக் ஆகிய 5 நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்று முன்தினம் அறிவித்தார்.

ஈரான் போர் தொடங்கியதில் இருந்து, இதுவரை 4 எரிபொருள் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா வந்துள்ளன. இந்நிலையில் மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் அனுமதித்துள்ளது. இந்த கப்பல்களில் 90,000 டன்களுக்கு அதிகமாக சமையல் காஸ் கொண்டுவரப்படுகிறது. இந்த 2 கப்பல்களும் வளைகுடாவை கடந்து இந்தியா வந்து கொண்டிருக்கின்றன. மேலும் 5 எரிபொருள் கப்ப்லகள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஐக்கிய அரபு அமீரகம் அருகே காத்துக் கிடக்கின்றன.

# டிரம்ப் - மோடி ஆலோசனையில் எலான் மஸ்க் பங்கேற்கவில்லை: வெளியுறவுத் துறை விளக்கம்



**வாஷிங்டன், மார்ச் 30:**

மோடியுடன் பேசியது அது முதல் முறையாகும். இந்த தொலைபேசி உரையாடலில் இரு நாட்டு தலைவர்களுடன், அமெரிக்க தொழில் அதிபர் எலான் மஸ்கும் பங்கேற்றதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

தலைவர்களுக்கு இடையேயான அழைப்பில் ஒரு தனி நபர் பங்கேற்றது ஒரு அசாதாரணமான நிகழ்வாகும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி கூறியதாக அமெரிக்காவின் புகழ்பெற்ற பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. டிரம்ப்-எலான் மஸ்க் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு டிரம்ப் அரசாங்கத்தில் வழங்கிய கவுரவபொறுப்புகளில் இருந்து எலான்மஸ்க் விலகி இருந்தார். இந்த நிலையில் இரு நாட்டு தலைவர்கள் உரையாடலுடன் அவரும் இணைந்திருப்பதாக வெளியான தகவல் முக்கியத்துவம் பெற்றது. இதற்கிடையே மோடி - டிரம்ப் ஆலோசனையில் எலான் மஸ்க் பங்கேற்கவில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியுறவுத்துறை கூறியிருப்பதாவது: "இந்தக் கதையை நாங்கள் பார்த்தோம். கடந்த 24-ம் தேதி பிரதமர் மோடி மற்றும் அதிபர் ட்ரம்ப் இருவர் மட்டும்தான் தொலைபேசியில் பேசினர். அப்போது வேறு யாரும் இடம் பெறவில்லை" என்றார்.

# அமெரிக்காவைத் தாக்கும் ஏவுகணை... வெற்றிகரமாகச் சோதனை நடத்திய வட கொரியா!





**வாஷிங்டன், மார்ச் 30:**

அமெரிக்க நிலப்பரப்பைத் தாக்கும் அதிக உந்துவிசை கொண்ட ஏவுகணைச் சோதனையை வட கொரியா வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகின.

ராணுவ பலத்தை அதிகரிக்கும் விதமாக ஆயுதங்களுக்கான அதிக உந்துவிசை கொண்ட திட எரிபொருள் மூலம் இயங்கும் ஏவுகணைச் சோதனையை வட கொரியா வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்தச் சோதனையின் மூலம் அமெரிக்காவின் நிலப்பரப்பைத் தாக்கும் ஏவுகணைகளை நவீனப்படுத்தவும் விரிவுபடுத்தவும் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மத்திய கிழக்கில் நடக்கும் போரைக் குறிப்பிடும் விதமாக அமெரிக்காவை உலகளாவில் "அரச பயங்கரவாதம் மற்றும் ஆக்கிரமிப்பு" செய்வதாகக் குற்றம் சாட்டி, தனது நாட்டின் அணுசக்தி கட்டமைப்பை உறுதியாக நிலைநிறுத்துவதாக வட கொரிய அதிபர் கிம் நாடாளுமன்றத்தில் சில நாள்களுக்கு முன் உரையாற்றினார். அதன் பின்னர், இந்தச் சோதனை நடைபெற்றதாக அறிக்கை வெளியாகியுள்ளது.

கடந்த செப்டம்பரில் இதேபோன்று நடத்தப்பட்ட திட எரிபொருள் ஏவுகணைச் சோதனையில் பதிவான உந்துவிசை சுமார் 1,971 கிலோ டன்களாக இருந்தது. தற்போது, நடத்தப்பட்ட சோதனையில் ஏவுகணையின் அதிகபட்ச உந்துவிசை 2,500 கிலோ டன்களாக உயர்ந்துள்ளதாகவும் புதிதாக மேம்படுத்தப்பட்ட இந்தச் சோதனையை கிம் பார்வையிட்டதாகவும்அறிக்கையில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

இந்தச் சோதனை எங்கு நடைபெற்றது என்று குறிப்பிடப்படாத நிலையில் ஒரே ஏவுகணையில் பல்வேறு குண்டுகளைப் பொறுத்தும் விதமாக அதன் உந்துவிசை மற்றும் சக்தியை அதிகரித்து அமெரிக்காவின் பாதுகாப்பு அரணைத் தாக்குவதற்கு இவை பயன்படுத்தப்படலாம் என்று அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

வடகொரியாவின் ஐந்தாண்டு ராணுவ பலத்தைப் பெருக்கும் திட்டத்தின் கீழ் இந்தத் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் போர்த் திறன் சார்ந்த ராணுவ வலிமையை அதிகரிக்கும் விதமாக சமீபத்திய சோதனை முக்கியமானது என கிம் பேசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது அமெரிக்காவின் நிலப்பரப்பைத் தாக்கும் கண்டம் விட்டு கண்டம் செல்லும் ஏவுகணைகளைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது.



# இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன்

# இன்று தொடங்குகிறது வேட்புமனுதாக்கல்



# 234 தொகுதிகளுக்கும் த.வெ.க. வேட்பாளர்களை அறிவித்தார்

# கேரள தேர்தல் பிரச்சாரத்தில் சுவர் விளம்பரம் எழுதும் ரோபோக்கள்

# தேர்தலில் வாக்களித்ததை உறுதிசெய்ய குறுஞ்செய்தி: உயர்நீதிமன்றத்தில் மனு

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 30.03.2026 திங்கட்கிழமை | இலவச இ–பேப்பர்